# உதயன்




www.onlineuthayan.com

**24** பக்கங்கள் சுடர் 27 கதிர் 359 வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 04 திங்கட்கிழமை (19/11/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00


# அமெரிக்க விசேட பிரதிநிதி அவசரமாக கொழும்பு விரைவு

## நல்லிணக்க பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தல், அரசமைப்பின் '13' திருத்த சர்ச்சை பற்றி ஆராய்வார்

கொழும்பு, நவம்பர்19

13 ஆவது திருத்தத்தை ஒழிப்பதற்கான முயற்சிகள் பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ள நிலையில், இலங்கையின் தற்போதைய நிலைவரம் குறித்து ஆராய அமெரிக்காவின் விசேட பிரதிநிதி ஒருவர் இந்தவாரம் கொழும்புக்கு அவசரமாக விரைகிறார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பிரதி உதவிச்செயலர் அலிஸ்ஸா ஜரிஸ் என்ற அதிகாரியே இந்த வாரம் கொழும்பு வரவுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 19ஆவது கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவந்து நிறைவேற்றிய பிரேரணையின் பரிந்துரைகளை நிறைவேற்ற அரசு, இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதா என்பது தொடர்பில் அவர் முக்கியமாக அரசுத் தலைவர்களுடன் பேசுவார், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றதா என்பது குறித்தும் ஆய்வுகளை நடத்துவார்.

அமெரிக்க ஜனாதிபதியாக ஒபாமா மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ள நிலையில், வெளிவிவகார அமைச்சின் உயர்

பார்க்க பக்கம் 4

## பொலிஸ் பயிற்சிக் கல்லூரியின் பொறுப்பதிகாரி சுட்டுக்கொலை

கொழும்பு, நவ.19

சப்ரகமுவ பொலிஸ் பயிற்சிக் கல்லூரியின் பொறுப்பதிகாரியும் தலைமை இன்ஸ்பெக்டருமான இந்திரசோமா ரட்நாயக்க சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் அவரது சடலம் அலப்பத்தையிலுள்ள வீட்டிலிருந்து நேற்று மீட்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

விடுமுறையில் இருந்தபோதே இவர் மீது துப்பாக்கிச்சூடு இடம்பெற்றுள்ளது எனவும் சம்பவத்தில் மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார் எனவும் தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடி, காணிப் பிரச்சினை காரணமாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றது என ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது எனக் கூறினார். (உ-சி)

## பிரதம நீதியரசரின் கோரிக்கை தெரிவுக் குழுவால் நிராகரிப்பு

### வெள்ளிக்கிழமை முற்படுமாறு அறிவிப்பு

கொழும்பு, நவ.19

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா, நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன் எதிர்வரும் 23 ஆம் திகதி விசாரணைக்கு முற்படவேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. இந்தக் கால அவகாசத்தை நீடிக்கும்படி அவர் கேட்டிருந்தார். அவரது மனு நிராகரிக்கப்பட்டுவிட்டது என அவரது சட்டத்தரணிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தனர்.

ஏற்கனவே விடுக்கப்பட்ட உத்தரவுக்கிணங்க வெள்ளிக்கிழமை நேரடியாக முற்படுமாறும் அத்தருணம் கால அவகாசம் தொடர்பான கோரிக்கையை முன்வைக்குமாறும் தெரிவுக்குழு அவருக்கு அறிவித்தல் விடுத்துள்ளது என்றும் சட்டத்தரணிகள் மேலும் குறிப்பிட்டனர்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு எதிரான குற்றப் பிரேரணையை இந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவே பரிசீலித்துவருகிறது.

அதேவேளை, தெரிவுக் குழுவின் நடைமுறைகளில் கடைப்பிடிக்கப்படவேண்டிய தங்களின் வியூகங்கள் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர்கள் நேற்று நாடாளுமன்றத் தொகுதியில் கூடி ஆராய்ந்தார்கள்.

பார்க்க பக்கம் 4

## சபாநாயகருடன் சட்டத்தரணிகள் சந்திப்பு

கொழும்பு, நவ. 19

பிரதம நீதியரசர் ஷிராணிக்கு எதிரான குற்றப் பிரேரணை தொடர்பில் சபாநாயகருடன் கலந்துரையாட சட்டத்தரணிகள் சங்கத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் நாளை மறுதினம் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் சபாநாயகர் சமல்ராஜபக்ஷவுக்கும் சட்டத்தரணிகளுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெறவுள்ளதாக சட்டத்தரணிகள் சங்க செயலாளர் சஞ்ஜய கமகே தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்க நிறைவேற்றுக்குழு, சிரேஷ்ட சட்டத்தரணிகளும் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-16)

## இயற்றாலையில் எலும்புக்கூடு மீட்பு

தென்மராட்சி,நவ.19

வறணி இயற்றாலைப் பகுதியில் பற்றை மறைவில் மனித எலும்புக்கூடு ஒன்று நேற்றுமுன்தினம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எலும்புக் கூடு தொடர்பான விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த மார்ச் மாதம் இந்தப் பகுதியைச் சேர்ந்த 13 வயதுப் பாடசாலை மாணவன் எஸ்.சந்திரமோகன் காணாமல் போயிருந்தான்

பார்க்க பக்கம் 4

# மனித உரிமைகள் சபையில் சீனா, ரஷ்யா வெளியேறின

### அமெரிக்கா உள்ளே; இலங்கைக்கு நெருக்கடி

கொழும்பு, நவ.19

ஜெனிவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு புதிதாக 18 புதிய உறுப்பு நாடுகளைத் தெரிவு செய்வதற்கு நடத்தப்பட்ட இரகசிய வாக்கெடுப்பில், அதிகப்படியான வாக்குகளுடன் அமெரிக்கா மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் நெருங்கிய நட்பு நாடுகளான சீனா, ரஷ்யா, கியூபா ஆகிய நாடுகள் அடுத்த ஆண்டில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்க மாட்டா.

இதனால், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கடந்த மார்ச் மாதம் அமெரிக்கா கொண்டு வந்து நிறைவேற்றிய தீர்மானத்துக்கு அமைய, இலங்கை எட்டியுள்ள முன்னேற்றங்கள் குறித்து அடுத்த ஆண்டு மார்ச் மாதக் கூட்டத்தொடரில் மீண்டும் விவாதிக்கப்படும் போது, இலங்கை கடும் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த திங்கட்கிழமை நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. பொதுச் சபையில் நடந்த இரகசிய வாக்கெடுப்பில் அமெரிக்கா 131 வாக்குகளுடன்

பார்க்க பக்கம் 4

# காணி, பொலிஸ் அதிகாரங்களை நீக்க அமைச்சர் வாசு கடும் எதிர்ப்பு

கொழும்பு, நவ.19

13ஆவது திருத்தச்சட்டத்தின் மாகாண சபைகள் சட்டம்- முக்கிய அம்சங்களான காணி, பொலிஸ் அதிகாரங்களை அதிலிருந்து நீக்க அரசு நடவடிக்கை எடுக்குமாயின், அதனைத் தாம் கடுமையாக எதிர்ப்பார் என்று ஆளுந்தரப்பின் பங்காளிக் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சித் தலைவரும், தேசிய மொழிகள் மற்றும் நல்லிணக்கத்துக்கான அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

''காணி, பொலிஸ் அதிகாரங்களை நீக்குவது குறித்து ஆளுந்தரப்பில் உத்தியோகபூர்வமான கருத்துப்பரிமாறல்கள் எதுவும் இதுவரையில் இடம்பெறவில்லை. அப்படியொரு கருத்து மேலோங்கும் தருணத்தில் நாம் எதிர்ப்போம்'' என்றும் அவர் தெரிவித்தார்.

13 ஆவது திருத்தம் இல்லாதொழிக்கப்படவேண்டும் என்ற ஆளுந்தரப்பினரின் கருத்தால் அரசியல் களத்தில் கடும் சர்ச்சை கிளம்பியது. '13' ஐ நீக்குவதற்கு பல்வேறு தரப்புகளிலும் கடும் எதிர்ப்புகள் கிளம்பின.

இதையடுத்து, காணி, பொலிஸ் அதிகாரங்களை அதிலிருந்து நீக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என வெளியான செய்தி குறித்துக் கேட்டபோதே அவர் மேற்கண்ட

பார்க்க பக்கம் 4



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்ததினம் நேற்று மட்டக்களப்பில் கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது.

## பம்பலப்பிட்டியில் கழுத்தறுபட்ட நிலையில் சடலம் காரில்

கொழும்பு, நவ.19

கொழும்பு, பம்பலப்பிட்டியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த புதிய காரொன்றிலிருந்து கழுத்து அறுக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட நிலையில் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

புத்தம்புதிய காரின் சாரதி ஆசனத்தில் அமர்ந்திருந்த நபரின் கழுத்துத் துண்டிக்கப்பட்டிருந்தது என்று பொலிஸார் கூறினர்.

பார்க்க பக்கம் 4

## 'உச்சிதனை முகர்ந்தால்' படத்துக்கு இங்கு தடை

யாழ்ப்பாணம், நவ.19

சன் தொலைக்காட்சியில் நேற்று மாலை 'உச்சிதனை முகர்ந்தால்' திரைப்படம் ஒளிபரப்பானது. அதனை யாழ்ப்பாணத்தில் கேபிள் தொலைக்காட்சி சேவையை வழங்கும் 'ஆஸ்க் நெற்வேக்' நிறுவனம் தடை செய்து 'நாடோடி' படத்தை ஒளிபரப்புச் செய்தது.

பார்க்க பக்கம் 4

# வல்லையில் புதிய படை முகாம்

### அமைக்கும் பணிகள் தீவிரம்

யாழ்ப்பாணம்,நவ.19

வல்லைச் சந்தியில் இராணுவத்தினர் படைமுகாம் ஒன்றை புதிதாக அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர் என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றர். குறித்த பகுதியில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் கடந்த இரு தினங்களாக கனரக வாகனங்கள் மூலம் புதிய கட்டடம் ஒன்றை நிர்மாணிப்பதாகவும் இது ஒரு படைத் தளம் ஒன்றை அமைக்கும் முயற்சியே என்றும் பொதுமக்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

வடமராட்சியின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த வல்லைப்பகுதியில் ஏற்கனவே ஒரு படைமுகாம் நிறுவப்பட்டிருந்தது. வடமராட்சிக்குச் செல்லும் பயணிகளும், பொதுமக்களும் இந்த முகாமில் அனேக நேரங்களில் பதிவுகளை மேற்கொண்டுவிட்டு உட்செல்ல முடிந்தது.

போர் முடிவுக்கு வந்த பின்னரும் வல்லை முகாமில் இரவு நேரங்களில் பயணிக்கும் சகலரும் படையினரிடம் பதிவுகளை மேற்கொண்ட பின்னரே பயணிக்கும் நிலை தொடர்கின்றது.

இந்த நிலையில் ஏற்கனவே இருந்த முகாமுக்கு எதிர்ப்பக்கமாக புதிய முகாம் ஒன்றை துரித கதியில் இராணுவத்தினர் கடந்த சில தினங்களாக அமைத்து வருகின்றனர்.

முகாம் அமைக்கும் பணிக்காக அந்தப் பகுதியில் நடுகை செய்யப்பட்டிருந்த சவுக்கு மரங்கள், பனை வடலிகள் என்பன தறிக்கப்பட்டு கடந்த சில தினங்களாக கனரக

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி, பொலிஸ் அதிகாரங்கள் மீது கை வைத்தால் நாட்டுக்கு பேராபத்து

## எச்சரிக்கிறார் விக்கிரமபாகு கருணாரத்ன



கொழும்பு, நவ. 19

மாகாண சபைகளின் அதிகாரங்களை இல்லாது செய்துவிட்டு வடமாகாணசபைத் தேர்தலை நடத்துவது நியாயமற்றது. அரசு மாகாணசபைகளின் அதிகாரங்களை அதிகரிப்பதற்கே நடவடிக்கை எடுக்க வேண்டும். மாறாக அவற்றின் அதிகாரங்களை ஒருபோதும் இல்லாதொழிக்கவோ, குறைக்கவோ முயற்சிக்கக் கூடாது. - இவ்வாறு அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டைப் பாதுகாக்கும் இயக்கத்தின் பிரதிநிதியும், நவசமசமாஜக் கட்சித் தலைவருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்குத் தவிர்ந்த ஏனைய எட்டு மாகாண சபைகளின் தேர்தல்களை அரசு நடத்திய போது, 13ஆவது திருத்தத்திலுள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களை நீக்குவது பற்றி ஆளும் தரப்பு வாய்திறக்கவில்லை. ஆனால் இப்போது வடமாகாண சபைத் தேர்தல் வரும்போதுதான் '13ஆவது திருத்தத்தை இல்லாதொழிக்கவேண்டும்' 'அந்தத் திருத்தத்தின் முக்கிய அம்சங்களான காணி, பொலிஸ் அதிகாரங்கள் அதிலிருந்து நீக்கப்படவேண்டும்' என்ற கோஷங்கள் எழுகின்றன.

வடமாகாணசபைத் தேர்தல் அடுத்த வருடத்தில் நடத்தப்படும் என்று அறிவித்துவிட்டு மாகாண சபைகளுக்குரிய காணி, பொலிஸ் அதிகாரங்களை இல்லாதொழிப்போம் என்று அரசு கூறுவது நியாயமற்றது. இந்த அதிகாரங்களை இல்லாதொழித்துவிட்டு வடமாகாண சபைத் தேர்தலை நடத்துவதிலும் எவ்வித பயனும் இல்லை.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வை அரசு வழங்கவேண்டும். அதற்காக மாகாணசபைகளுக்குத் தற்போது இருப்பதை விடவும் அதிகமான அதிகாரங்களை வழங்கவேண்டுமே தவிர, அவற்றைக் குறைக்கவோ அல்லது இல்லாதொழிக்கவோ கூடாது.

அவ்வாறானதொரு நடவடிக்கையில் அரசு ஈடுபடுமாயின் அதனை நாம் கடுமையாக எதிர்ப்போம்.

அத்துடன், அது நாட்டில் ஓர் அபாயகரமான நிலையைத் தோற்றுவிக்கும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை'' - என்றார். (ங-சி)

# ஏ.ரி.எம். பண மோசடி மாட்டினர் ரஷ்யர் ஐவர்

கொழும்பு, நவ. 19

ஏ.ரி.எம். மூலம் பண மோசடியில் ஈடுபட்ட ரஷ்ய நாட்டவர்கள் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு குற்றத் தடுப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

இவர்கள் போலிக் கடனட்டையைப் பயன்படுத்தி சுமார் 25ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான இலங்கை ரூபாவைக் கையாடியுள்ளனர்.

இலங்கையில் இருந்து நாளொன்றுக்கு சுமார் 2.1 மில்லியன் ரூபா போலிக் கடனட்டை மூலம் களவாடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களிடமிருந்து இரு இரகசியக் குறியீட்டுக் கருவிகள் மற்றும் 6 மடிக் கணினிகள் என்பனவற்றைத் தாம் கைப்பற்றியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வெள்ளவத்தைப் பகுதியில் வைத்து இவர்களைக் கைதுசெய்த கொழும்பு பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தினர்.

எதிர்வரும் 30ஆம் திகதி வரை இவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (உ-16)

# நாச்சிக்குடா - குருநகர் மீனவர் நேற்று மோதல்

யாழ்ப்பாணம், நவ. 19.

நாச்சிக்குடா கடற்பகுதியில் இழுவைப்படகு மூலம் கடற்றொழிலை மேற்கொண்ட குருநகர் பகுதி மீனவர்கள் சிலர் நேற்று தாக்குதலுக்கு இலக்காகினர்.

நாச்சிக்குடாக் கடற்பகுதியில் குருநகர்ப் பகுதி மீனவர்கள் இழுவைப் படகைப் பயன்படுத்தி கடற்றொழிலில் நேற்று ஈடுபட்டிருந்தனர். அப்போது அங்கு நாச்சிக்குடாவைச் சேர்ந்த மீனவர்கள் பிளாஸ்ரிக் படகுகளில் வந்தனர்.

''இழுவைப் படகுகள் மூலம் தொழில் செய்வது சிறு தொழிலை மேற்கொள்ளும் மீனவர்களை பாதிக்கின்றது'' என்று அந்த மீனவர்கள் தெரிவிக்க, பதிலுக்கு குருநகர் மீனவர்களும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இந்த வாக்குவாதம் பெரும் முறுகல் நிலையை அடைந்தது. அப்போது நாச்சிக்குடா மீனவர்கள் கற்கள், வெற்றுப் போத்தல்கள் என்வற்றைக் கொண்டு குருநகர் மீனவர்களைத் தாக்கினர்.

இந்தத் தாக்குதலினால் குருநகர் பகுதி மீனவர்கள் சிலர் காயமடைந்தனர்.

''எம்மைத் தாக்கிவிட்டு நாங்கள் பயன்படுத்திய நான்கு இழுவைப்படகுகளையும் நாச்சிக்குடா மீனவர்கள் தம்முடன் எடுத்துச் சென்றுவிட்டனர்'' என்று குருநகர் பகுதி மீனவர்கள்தெரிவித்தனர்.

இதேவேளை, ''நாச்சிக்குடா கடற்பகுதியில் சிறு தொழிலை மேற்கொள்ளும் மீனவர்களின் வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் என்பவற்றை இந்த இழுவைப்படகுகள் சேதப்படுத்தியுள்ளன'' என்று நாச்சிக்குடா மீனவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (ங-17)

## இருதடவைகள் இந்திய அதிகாரிகள் கேபியிடம் விசாரணை

கொழும்பு, நவ. 19

கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதனை இதுவரை இரண்டு தடவைகள் இந்தியப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைக்குட்படுத்தியுள்ளனர். ஆங்கில ஊடகமொன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியொன்றில் கே.பி. இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச செயற்பாட்டாளராக கே.பி. சர்வதேசப் பொலிஸாரால் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டவர்.

இவரிடம் இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை தொடர்பில் இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவினரும் 'றோ' உளவுப் பிரிவு அதிகாரிகளும் விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

''2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவினர் தன்னிடம் விசாரணைகளை மேற்கொண்டனர். இது முற்றிலும் விசாரணை என்பதற்கு அப்பால் சாதாரண கலந்துரையாடலாகவே அமைந்திருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்புத் தொடர்பிலும் ராஜீவ்காந்தி கொலைச் சம்பவம் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் கேள்விகளைக் கேட்டனர்.''- என்றார் கே.பி. (உ-16)

## பயணிகளை ஏற்றியதில் முறுகல்; தாக்கப்பட்டார் பஸ் நடத்துநர்

யாழ்ப்பாணம், நவ. 19

பயணிகளை ஏற்றுவதில் உண்டான முரண்பாடு ஒன்று காரணமாக வவுனியா தனியார் பஸ் நடத்துநர் ஒருவர் தாக்கப்பட்டார். குறித்த பஸ்ஸில் சென்ற பயணிகளும் தொடர்ந்து பயணத்தை மேற்கொள்ள முடியாமல் இரவுமுழுதும் அல்லற்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு சாவகச்சேரிப் பகுதியில் இடம்பெற்றது.

கொழும்பிலிருந்தும், வவுனியாவிலிருந்தும் யாழ்ப்பாணம் நோக்கி நேற்று முன்தினம் பி.ப 4.30 மணிக்கு இரண்டு தனியார் பஸ்கள் வந்துகொண்டிருந்தன. இந்த இரு பஸ்களும் குறுந்தூரப் பயணிகளை ஒன்றுக்கொன்று வட்டிக்குப் போட்டியாக ஏ-9 வீதியில் ஏற்றின. இவ்வாறு பயணிகளை போட்டிக்கு ஏற்றும் விடயம் முரண்பாடாக உருவெடுத்தது. இதன் விளைவாக பரந்தன் பகுதியில் வைத்து வவுனியா தனியார் பஸ்ஸின் நடத்துநரை, கொழும்பு பஸ் நடத்துநர் கண்மூடித்தனமாகத் தாக்கினார்.

அதன் பின்னரும் பயணிகளை ஏற்றிக்கொண்டு இரு பஸ்களும் யாழ்ப்பாணம் நோக்கி விரைந்தன. இந்த நிலையில், மீசாலைப் பகுதியில் கொழும்பிலிருந்து வந்த பஸ் மீது இனந்தெரியாதோர் கல்வீசித் தாக்குதல் நடத்தினர். இதனைத் தொடர்ந்து ''வவுனியா பஸ்ஸின் சாரதியும் நடத்துநருமே இவ்வாறு எங்கள் பஸ் மீது திட்டமிட்டு கல்வீசினர்'' என்று கொழும்பு பஸ்ஸின் நடத்துநரும் சாரதியும் சாவகச்சேரிப் பொலிஸில் முறைப்பாடு செய்தனர்.

இதனையடுத்து பொலிஸாரால் வவுனியா பஸ்ஸின் சாரதியும் நடத்துநரும் விசாரணைகளுக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். இதனால் தொடர்ந்து பயணிக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்ட பயணிகள் முச்சக்கர வண்டிகள் மற்றும் தனியார் பஸ்கள் மூலமே யாழ்ப்பாணத்தை வந்தடைய முடிந்தது.

இந்தச் சம்பவத்தில் தாக்கப்பட்ட வவுனியா பஸ் நடத்துநர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ங-14)

## காற்றுவாங்கியவரின் கமெரா போனது

யாழ்ப்பாணம், நவ. 19.

கசூரினா கடற்கரையில் காற்றுவாங்கச் சென்றிருந்த சுவிற்சர்லாந்துப் பெண் ஒருவரின் பெறுமதியான கமெரா திருடப்பட்டுள்ளது. இதுதொடர்பில் அவர் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

கடற்கரையில் காற்று வாங்கிவிட்டு உணவருந்திக் கொண்டிருந்தபோதே கமெரா திருட்டுப் போயுள்ளதென அவர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (ஐ-4)

## கடற்கரைகளில் வெடிபொருள் தமிழக மீனவருக்கு எச்சரிக்கை

தமிழகத்தின் கடற்கரையோரப் பகுதிகளுக்கும் மீனவர்களுக்கும், கடலில் மிதந்து வருகின்ற எந்த விதமான சந்தேகப் பொருள்களையும் தொடவேண்டாம் என இந்தியப் புலனாய்வுப் பிரிவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கைக் கடற்படை அதிகாரிகளினால் முறையற்றவகையில் தயாரிக்கப்பட்ட வெடிபொருள்களே இவ்வாறு மிதக்கவிடப்பட்டிருப்பதாக புலனாய்வு பிரிவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இதனையடுத்து இந்தியக் கடற்பகுதியில் வெடிபொருள் களை தேடும் விசேட பணி யில் கடலோரக் காவல் படையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். (3)

# இலங்கை - இந்திய ராஜதந்திர கொள்கைகளில் மாற்றம் தேவை

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை



**போர்க் குற்றச்செயல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்த சர்வதேசப் பொறி முறைமை ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.**

புதுடில்லி, நவ.19

இலங்கை தொடர்பான ராஜதந்திர கொள்கைகளில் இந்தியா மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியது அவசியமானது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கோரியுள்ளது.

இதுகுறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் டி. ராஜா தெரிவித்ததாவது:-

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

போர்க் குற்றச்செயல் கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சுயா தீன விசாரணை நடத்த சர்வதேசப் பொறிமுறைமை ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

இலங்கைத் தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியான மாற்றத்தை ஏற்படுத்த இந்திய மத்திய அரசு குரல் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றேன்.

சர்வதேச சமூகத்தால் நிறைவேற்றப்பட்ட எந்தவொரு தீர்மானத்தையும் இலங்கை அரசு பொருட்படுத்தவில்லை .

போர் நிறைவடைந்து மூன்றாண்டுகள் கடந்துள்ள நிலையிலும் தொடர்ந்தும் தமிழர் பிரதேசங்களில் அதிகளவான இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்-என்றார். (வ)

# டெசோ தீர்மானங்கள் குறித்த கூட்டம் இன்று சென்னையில்

டெசோ தீர்மானங்கள் குறித்த அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராயும் கூட்டம் ஒன்று இன்று திங்கட்கிழமை சென்னையில் நடைபெறவுள்ளது.

இலங்கைத் தமிழர்களின் வாழ்வுரிமைக்காக, சென்னையில் கடந்த மாதம், 12 ஆம் திகதி, டெசோ மாநாடு நடைபெற்றது. அதில் இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு காண வேண்டும் என்பது உட்பட14 தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

குறித்த தீர்மானங்கள், அண்மையில் தி.மு.க., பொருளாளர் ஸ்டாலின் தலைமையில் தி.மு.க., நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவினரால் ஐ.நா. சபை துணை பொதுச்செயலர், ஜெனீவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமை ஆணையகத் தலைவர் ஆகியோரிடம் கையளிக்கப்பட்டிருந்தன.

அடுத்த கட்ட நட வடிக்கைகள், போராட்டங்கள் குறித்து இன்று விரிவாக ஆராயப்படும் என்று தி.மு.க. வினர் அறிவித்துள்ளனர். (வ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்
19/11/2012



# கிளிநொச்சி– யாழ். நீர் வழங்கலில் மூன்று லட்சம் பேர் நன்மையடைவர்

## சுகாதாரத் திட்டத்தின் மூலம் 80 ஆயிரம் பேரும் நீர்ப்பாசனத்தில் 55 ஆயிரம் பேரும் பயன்பெறுவர்

யாழ்ப்பாணம், நவ.19

*கிளிநொச்சி - யாழ். நீர்வழங்கல் மற்றும் சுகாதார திட்டத்தின் கீழ் 4 லட்சத்து 35 ஆயிரம் ரூபா பேர் நேரடியாக நன்மை பெறவுள்ளனர். குடிதண்ணீர் வழங்கல் மூலம் சுமார் 3 லட்சம் பயனாளிகளும் கழிவு நீர் அகற்றல் மூலம் 80 ஆயிரம் பயனாளிகளும் நீர்ப்பாசனம் மூலம் 55 ஆயிரம் பயனாளிகளுமாக மொத்தம் 4 லட்சத்து 35 ஆயிரம் பேர் 2015 இல் நன்மை அடைவர்.*

இவ்வாறு யாழ்.- கிளிநொச்சி குடிதண்ணீர் மற்றும் சுகாதார திட்டப் பணிப்பாளரும் தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் உதவிப் பொது முகாமையாளருமான எந்திரி தி.பாரதிதாசன் நேற்று தெரிவித்தார்.

இரணைமடு அபிவிருத்திக்கான மொத்த முதலீட்டுத் திட்டம் தொடர்பாகவும் இதனால் மக்கள் அடையப் போகும் நன்மைகள் குறித்தும் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சுத்தமான குடிதண்ணீர் மற்றும் சுகாதார நடவடிக்கைகளுக்கான தேசிய கொள்கைகள் திட்டத்தின் கீழ் 2015 இல் மொத்த சனத்தொகையில் 85 வீதமான மக்களும் 2025 இல் 100 வீதமான மக்களுக்கும் பாதுகாப்பான குடிதண்ணீரை வழங்க வேண்டும் என்ற நோக்கில் இந்தத் திட்டம் முன்னகர்த்தப்படுகிறது. இதன் மூலம் சுமார் 3 லட்சம் பேர் பயனடைவர்.

அதேசமயம் சுகாதார திட்டத்தின் கீழ் கழிவு அகற்றலில் 80 ஆயிரம் பயனாளிகள் நன்மையடையவுள்ளனர். இதில் யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட பயனாளிகளே நன்மையடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. யாழ்.மாநகர சபைப் பிரிவில் மலசல கூடக் கழிவுகளைச் சேகரித்து கல்லுண்டாயில் வைத்து சுத்திகரிக்கும் திட்டத்தில் இது உள்வாங்கப்பட்டுள்ளது.

இதேநேரம் யாழ்.- கிளிநொச்சி பிரதேசங்களின் நீர்வழங்கல் திட்டத்தில் 2015 இல் யாழ்ப்பாண மக்களுக்கு 13 வீதமும், கிளிநொச்சி மக்களுக்கு 6.5 வீதமும் குடிதண்ணீர் கிடைக்கும்.

2020 இல் யாழ்ப்பாண மக்களுக்கு 22.74 வீதமும் கிளிநொச்சி மக்களுக்கு 10.86 வீதமும் குடிதண்ணீர் கிடைக்கும். 2030 இல் யாழ்ப்பாண மக்களுக்கு 43 வீதமும் கிளிநொச்சி மக்களுக்கு 21 வீதமும் பாதுகாப்பான குடிதண்ணீர் கிடைக்கும்.

இதற்காக மொத்த செலவாக நீர்வழங்கலுக்கு 10180.50 மில்லியன் ரூபாவும் கழிவு நீர் அகற்றல் மற்றும் சுகாதார திட்டத்துக்காக 3920.40 மில்லியன் ரூபாவும் செலவிடப்படும்.

அத்துடன் இரணைமடு அணைக்கட்டு மேம்படுத்தலுக்கு 1169.30 மில்லியன் ரூபா செலவிடப்படும்.

இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நகர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கி 9900 மில்லியன் ரூபாவும் பிரான்ஸிய முகவர் நிலையம் 5280 மில்லியன் ரூபாவும் இலங்கை அரசு 2864.40 மில்லியன் ரூபாவுமாக மொத்தம் 18044.40 மில்லியன் ரூபா செலவில் திட்டம் துரிதகதியில் முன்னெடுக்கப்படுகின்றது- என்று மேலும் கூறினார். (ம-50)

## 4 லட்சத்து 85 ஆயிரம் பேர் நயினாதீவுக்கு சுற்றுலா பயணம்

### டிசெம்பரில் மட்டும் ஒரு லட்சம் பேர் எதிர்பார்ப்பு

யாழ்ப்பாணம்,நவ.19

நயினாதீவுக்குக் கடந்த 10 மாதங்களில் மட்டும் 4 லட்சத்து 85 ஆயிரம் தென்பகுதி மக்கள் சுற்றுலா நோக்கில் பயணித்துள்ளனர். வேலணை பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா இந்தத் தகவலைக் கூறினார்.

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட இரு சுற்றுலா மையங்களை நோக்கி தென்பகுதி மக்கள் கடந்த காலங்களில் படையெடுத்துள்ளனர். அதில் வேலணை சாட்டி வெள்ளைக் கடற்கரை ஒன்று. மற்றொன்று நயினாதீவு.

இந்த வருடம் டிசெம்பர் மாதம் முதல் சாட்டி வெள்ளைக் கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள சுற்றுலாப் பயணிகளுக்கான நவீன குளியலறை வசதியுடனான ஓய்விடம் வாடகைக்கு விடப்படவுள்ளது. பல மில்லியன் ரூபா செலவில் இரு கப்பல் வடிவில் இக்குளியலறை சுற்றுலா பயணிகளுக்காக அமைக்கப்பட்டுள்ளது.

டிசெம்பர் மாதம் பாடசாலை விடுமுறையை அடுத்து, ஒரு லட்சம் மக்கள் வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்காக புங்குடுதீவில் அமைக்கப்பட்டுள்ள ஓய்வு இல்லம் மக்கள் பாவனைக்குத் திறந்து விடப்படும்.

இதேவேளை அராலியில் உள்ள டென்சில் கொப்பேகடுவ நினைவுச் சின்னத்தையும் மக்கள் பார்வையிட அதிகம் செல்வர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அல்லைப்பிட்டி கடற்கரைப் பகுதியையும் நவீனப்படுத்த வெளிநாட்டு முதலீட்டாளர்களின் ஆலோசனையைப் பெற்று வருகின்றோம் என்று அவர் மேலும் கூறினார். (ம-50)

## வழி அனுமதி பெறாத பஸ்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள்

### தனியார் பஸ் சங்கத் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.19

வழி அனுமதிப் பத்திரம் பெறாது வெளிமாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாணத்துக்குள் உள்நுழையும் பஸ்களுக்கு உயர் அதிகாரிகள் ஊடாக உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். இலங்கை தனியார் பஸ் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன இவ்வாறு கூறினார்.

யாழ்.மாவட்ட தனியார் பஸ் சாரதிகள் எதிர்கொள்ளும் தற்போதைய பிரச்சினைகள் தொடர்பாக நேற்று பிராந்திய அலுவலகத்தில் பஸ் உரிமையாளர்களுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. இதன் போது அவர் இந்தத் தீர்மானத்தை முன்வைத்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தனியார் பஸ்கள் யாழ்ப்பாணத்தில் மிக அதிகமான பிரச்சினைகளை எதிர்கொண்டிருக்கின்றன. இது தொடர்பான முறைப்பாடுகள் எமக்குக் கிடைத்துள்ளன. குறிப்பாக யாழ்ப்பாணத்துக்குள் வெளிமாவட்டங்களில் இருந்து அதிகளவான தனியார் பஸ்கள் வழி அனுமதிப் பத்திரம் இல்லாமல் வந்த வண்ணம் உள்ளன. இது தொடர்பாக உயர் அதிகாரிகளின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

கொழும்பு, திருகோணமலை போன்ற இடங்களில் இருந்து வருகை தரும் அனுமதிப் பத்திரம் உடைய தனியார் பஸ்கள் குறித்த இடங்களில் மட்டுமே தரிக்க முடியும். பஸ்தரிப்பு நிலையங்களில் பஸ்களை நிறுத்தி பயணிகளை ஏற்ற முடியாது. பொதுமக்கள் தூர இடங்களில் இருந்து வருகை தரும் பஸ்கள் வேகமாக பயணிக்கும் என்பதால் அந்த பஸ்களில் ஏறுகிறார்கள். இதனை நாம் தடுக்க முடியாது. எனினும் பஸ் சாரதிகள் இதனைக் கடைப்பிடிக்க வேண்டும்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுடன் இணைந்து ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளோம். இந்த சுற்றறிக்கையின் படி சாரதிகள் செயற்பட வேண்டும். பொது மக்களின் நலன்கருதி சேவைகளை வழங்க வேண்டும்.




வழி அனுமதிப் பத்திரம் பெறாமல் சாரதிகள் பஸ்களைச்சேவையில் ஈடுபடுத்த வேண்டாம். வழி அனுமதிப் பத்திரத்துக்கு தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவுக்கு விண்ணப்பம்செய்து உரிய அனும்திப் பத்திரம் பெற்ற பின்னர் போக்குவரத்து சேவையில் ஈடுபடலாம்.

தற்போது போதிய எண்ணிக்கையில் தனியார் பஸ்கள் உள்ளன. இதனால் பஸ் உரிமையாளர்கள் புதிய பஸ்களைக் கொள்வனவு செய்ய வேண்டாம். இருக்கக் கூடிய பஸ்களை சேவையில் சரிவர ஈடுபடுத்த முன்வரவேண்டும். பஸ் சேவை இடம்பெறாத இடங்களுக்கு சேவை வழங்க முன்வந்தால் உடனடியாக வழி அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்படும். எனவே பஸ் சாரதிகளோ, நடத்துநர்களோ முரண்பாடு இல்லாமல் மக்களுக்கான போக்குவரத்துச் சேவையை சரிவர வழங்க முன்வரவேண்டும்-,என்றார். (ம-14)

### 52 ஆவது படையணியின் விசேட வழிபாடுகள்

தென்மராட்சி, நவ.19

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 58 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு நேற்று 52 ஆவது படையணியின் ஏற்பாட்டில் கச்சாய் அம்மன் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடும் அந்தப் பகுதியைச் சேர்ந்த முதியோர்களுக்கு உடுபுடைவைகள் வழங்கலும் இடம்பெற்றன.

யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க நிகழ்வில் கலந்துகொண்டார்.

ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூசையிலும் கலந்து கொண்டார். அத்துடன் அங்கு வருகை தந்திருந்த முதியோர்களுக்கு உடுபுடைவைகளையும் வழங்கினார்.

'தேசத்துக்கு நிழல்' தேசிய மரம் நடுகைத் திட்டத்தின் கீழ் ஆலய வளாகத்தில் மரக்கன்றுகளையும் நட்டார். 52 ஆவது படையணியைச் சேர்ந்த படை அதிகாரிகளும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ம-9)

### வயலில் நின்றவரை பாம்பு தீண்டியது

தென்மராட்சி, நவ.19

நெற்பயிருக்கு களைநாசினி விசிறிய குடும்பஸ்தர் வரம்போரத்தில் மறைந்திருந்த பாம்பால் கடியுண்டார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வரணியில் இடம்பெற்றது.

மந்துவில் வடக்கைச் சேர்ந்த குமரேசு சிவஞானமூர்த்தி (வயது52)என்பவர் பாம்பு தீண்டிய நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-9)

### சாவகச்சேரி சந்தையில் பால் பொருள் நிலையம்

தென்மராட்சி, நவ.19

சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் பால் பொருள்கள் விற்பனை நிலையம் சாவகச்சேரி சந்தைப் பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

நிலைய ஆரம்ப நிகழ்வில் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ், லயன் மருத்துவர் எஸ்.எஸ்.அருளானந்தம் ஆகியோர் மங்கல விளக்கேற்ற யாழ்.மாவட்ட கால்நடைகள் வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் செ.சுப்பிரமணியம் நாடா வெட்டி ஆரம்பித்து வைத்தார்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட செயற்றிட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிகழ்வில் நிறுவனத்தின் செயற்பாட்டு அலுவலர் எஸ்.சர்வானந்தாவும் கலந்துகொண்டார். (ம-9)

### சாவகச்சேரி நகரில் வலம் வந்த சூரன்கள்

தென்மராட்சி, நவ.19

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் தென்மராட்சிப் பிரதேசத்து 'சூரன்கள்' நேற்று முன்தினம் வீதி வீதியாக வலம் வந்தனர்.

கந்தசஷ்டியை முன்னிட்டு பிரதேசத்தில் உள்ள பல ஆலயங்களில் சூரன் போர் நடைபெறவுள்ளதால் பத்துக்கு மேற்பட்ட சூரன்கள் வீதி வலம் வந்ததைக் காணமுடிந்தது. (ம-9)

### மர்மப் பொருள் வெடித்து இளைஞர் படுகாயம்

தென்மராட்சி, நவ. 19

தோட்டம் செய்வதற்கு நிலத்தைக் கொத்தி பண்படுத்தியபோது மர்மப் பொருள் வெடித்ததில் இளைஞருக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டன. இந்தச் சம்பவம் நேற்றுக்காலை சரசாலை வடக்கில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த கந்தசாமி எழில்கரன் (வயது 21) என்னும் இளைஞருக்கு முகம், கை மற்றும் உடலில் குண்டுச்சிதறல்களால் காயங்கள் ஏற்பட்டன.

உடனடியாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இளைஞர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ம-9)

## நிகழ்வுகள் இன்று

**பரிசளிப்பு நிகழ்வு**

யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் பரிசளிப்பு நிகழ்வு முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்திய துணைத்தூதுவர் வி.மகாலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். கௌரவ விருந்தினராகப் பேராசிரியர் கே.கபில சி.கே பெரேரா, மற்றும் தூதரகத்தைச் சேர்ந்த சுரேஷ் கே.மேனன் ஆகியோர் கலந்து கொள்வர். சிறப்பு விருந்தினர்களாக லயன் ஈ.எஸ்.பி நாகரட்ணம் மற்றும் லயன்.பி. பார்தீபன் ஆகியோர் கலந்து கொள்வுள்ளனர். (ம)

**செயலமர்வு**

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் சுகாதாரமும் உடற்கல்வியும் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு காலை 8.30 மணிக்கு வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் தெரிவித்துள்ளார். (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் சூரசங்கார நிகழ்வு நேற்று ஆயிரக் கணக்கான பக்தர்கள் புடை சூழ நடந்தேறியது. (86)

# பரிதியின் கொலைக்கும் எமக்கும் தொடர்பில்லை

## இலங்கைத் தூதுவர் தயான் ஜயதிலக விளக்கம்

கொழும்பு, நவ.19

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த தளபதிகளில் ஒருவரும் பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுப் பொறுப்பாளருமான பரிதி என்றழைக்கப்படும் நடராஜா மதீந்திரனின் கொலைக்கும் இலங்கைக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்று பிரான்ஸ் நாட்டுக்கான இலங்கைத் தூதுவர் கலாநிதி தயான் ஜயதிலக திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.


இது தொடர்பில் பிரான்ஸ் ஊடகங்களுக்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

''பரிதி என்பவரைக் கொலை செய்தால் 50ஆயிரம் யூரோவுடன் (86 இலட்சம் ரூபா) இலங்கைக்கான விமானச் சீட்டொன்றும் வழங்குவதாக பிரான்ஸிலுள்ள இலங்கைத் தூதரகம், குறித்த கொலைச் சம்பவத்தோடு நெருங்கிய தொடர்புகொண்டிருந்த ஒருவருக்கு உறுதியளித்திருந்தது'' என்று பெரிஸியன் என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

ஆயினும் இந்தச் செய்தி தவறானது. குறித்த செய்தியை வெளியிட்ட ஊடகவியலாளர் ஸ்டெபன் செலாமியை சந்திக்க நான் பலமுறை முயற்சித்த போதும் அது பயனளிக்கவில்லை.

பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் உள்ளகப் பிரச்சினை காரணமாகவே பரிதி என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார் என்றே பிரான்ஸ் பொலிஸார் அறிவித்திருந்தனர்.

இந்த நிலையில், குறித்த படுகொலையுடன் தொடர்புடையதான சந்தேகத்தின் பேரில் இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைதானவர்கள் தாம் இலங்கைத் தூதரகத்தின் தூண்டுதலின் பேரிலேயே இந்தக் கொலையை செய்ததாக பொலிஸாருக்கு தெரிவிக்கவில்லை. ஆயினும் குறித்த பத்திரிகை மாத்திரம், இலங்கைத் தூதரகம் அவர்களுக்கு பணம் கொடுத்தே இந்தச் செயலை நிறைவேற்றியதாக உண்மைக்குப் புறம்பான தகவலை வெளியிட்டுள்ளது - என்றார். (ங-16)



வரணி இயற்றாலைப் பகுதியில் நேற்று மீட்கப்பட்ட மனித எச்சங்கள்

# வவுனியா 'டிப்போ' சிக்கலில்

வவுனியா, நவ.19

வவுனியா இ.போ.ச. டிப்போ பஸ்களின் சேவைகள் மட்டுப்படுத்தப்படுகின்றன என்று சாரதிகள் கூறுகின்றனர்.

எரிபொருள் கையிருப்பில் இல்லாததால் கடந்த சில தினங்களாக தனியாரின் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் டீசல் பெற்றே சேவைகள் நடைபெற்று வருகின்றன என்று அவர்கள் கூறினர்.

குறிப்பிட்ட தனியார் எரிபொருள் நிலையங்களும் கடந்த வெள்ளிக்கிழமை முதல் டீசல் அடிப்பதற்கு மறுத்துவிட்டன என்றும், டிப்போ நிர்வாகத்தால் வழங்கப்பட்ட காசோலைகள் வங்கியால் நிராகரிக்கப்பட்டதால்தான் இந்த நிலைமை ஏற்பட்டது என்றும் கூறப்பட்டது.

இவ்வாறான நிலையால், வவுனியா டிப்போ பஸ்களின் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டன என்று ஊழியர்கள் கூறினர். பஸ் போக்குவரத்து பாதிப்பு குறித்து பயணிகளும் முறைப்பாடுகளைத் தெரிவித்திருந்தனர்.

வவுனியாவில் போக்குவரத்துப் பாதிப்பு குறித்து இ.போ.சபையின் வடக்கு முகாமையாளர் அஸ்ஹரிடம் தொடர்புகொண்டு கேட்டபோது, அவர் அதனை முற்றாக மறுத்தார்.

''டீசல் எடுத்துவருவதில் ஒருநாள் தாமதம் ஏற்பட்டது. அதனால் கூட்டுறவுச் சங்கத்துக்குரிய எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டீசல் நிரப்பப்பட்டு பணிகள் தொடர்ந்தன. டீசல் இல்லை என்ற காரணத்தால் பஸ்கள் எவையும் சாலையில் நிறுத்திவைக்கப்படவில்லை. போக்குவரத்துப் பணிகள் தொடர்ந்து இடம்பெறுகின்றன. சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பயன்பாடு குறைவு என்பதனால் பணியில் ஈடுபடும் பஸ்களின் எண்ணிக்கையைக் குறைத்துள்ளோம். எனினும் போக்குவரத்துப் பணிகள் எல்லா நாள்களும் தொடர்ந்து இடம்பெறுகின்றன.'' - என்றார் அஸ்ஹர். (உ-4-410)

## வல்லையில்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வாகனங்களின் உதவியுடன் துப்புரவுப் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டிருந்தனர். இந்த நிலையில் தற்போது இரும்புக் கேடர்கள், கனமான கூரைத்தகடுகள் என்பவை கொண்டுவரப்பட்டு, பலமிக்க வகையில் புதிய படைமுகாமை அமைக்கும் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதை அவதானிக்க முடிவதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே இருக்கும் முகாமுக்கு மேலதிகமாக இந்தப் புதிய முகாம் அமைக்கப்படுகிறதா? அல்லது புதிய முகாம் நிறுவப்பட்டவுடன் பழைய முகாமை படையினர் கைவிடுவார்களா என்பது குறித்த விவரங்கள் தெரியவரவில்லை. (ங-16-8)

## பிரதம...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

சட்ட விவகாரங்களில் தெரிவுக்குழுவுக்கு உதவ சுயாதீனமான சட்டத்தரணிகள் குழுவொன்று நியமிக்கப்படவேண்டுமென ஏற்கனவே ஓர் அணி வேண்டுகோள் விடுத்திருந்தது. இந்த வேண்டுகோள் பெரும்பான்மை உறுப்பினர்களால் நிராகரிக்கப்பட்டுவிட்டது. அதையடுத்தே நேற்று எதிர்க்கட்சித் தலைவர்கள் கூடி ஆராய்ந்துள்ளனர்.

அதேவேளை, பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க முக்கிய நீதிமன்ற நீதிபதிகளைச் சந்தித்து தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியுள்ளார். குற்றப் பிரேரணையில் உள்ளடக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்குத் தாம் முகம் கொடுப்பார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

''இந்தப் பிரேரணையால் நான் ஏற்கனவே நிலைகுலைந்துள்ளேன். சுயமாக முகங்கொடுப்பதைத் தவிர வேறு எந்த மாற்றமும் என்னிடமில்லை'' என்றும் அவர் நாட்டின் மூத்த நீதிபதிகளிடம் தெரிவித்துள்ளார். (உ-5)

## இயற்றாலையில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மீட்கப்பட்ட எலும்புக் கூடு அவனுடையதாக இருக்கலாமர என விசாரணை இடம்பெறுகிறது.

எலும்புக்கூட்டுடன் காணப்பட்ட உடைகளின் மூலம் சிறுவனுடையதை ஒத்த மாதிரி இருப்பதால் இந்தச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

## உச்சிதனை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ஈழத்தமிழர்களை மையப்படுத்தி 'உச்சிதனை முகர்ந்தால்' திரைப்படம் தயாரிக்கப்பட்டு அண்மையில் வெளிவந்தது.

இந்தப் படத்தை சன் தொலைக்காட்சி நிறுவனம் நேற்று மாலை 6 மணிக்கு ஒளிபரப்பப்போவதாக விளம்பரப்படுத்தி இருந்தது.

இதனை எதிர்பார்த்து, தமது வீடுகளில் காத்திருந்த மக்கள் ஏமாற்றமடைந்தனர். 'நாடோடி' படம் ஒளிபரப்பானதால் ஏமாற்றமடைந்தவர்கள். 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தனர். (உ-ஐ)

## மனித...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தெரிவானது.

ஜேர்மனி 127 வாக்குகளுடனும், அயர்லாந்து 124 வாக்குகளுடனும் தெரிவு செய்யப்பட்டன.

இவை தவிர, ஆஜென்ரீனா, பிரேஸில், ஐவரிகோஸ்ட், எஸ்தோனியா, எதியோப்பியா, காபோன், ஜப்பான், கஸகிஸ்தான், கென்யா, மொன்ரனிக்ரோ, பாகிஸ்தான், தென்கொரியா, சியராலியோன், ஐக்கிய அரசு எமிரேட்ஸ், வெனிசுவேலா ஆகிய நாடுகளும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்குத் தெரிவாகியுள்ளன.

இம்முறை பாகிஸ்தான் தெரிவாகியிருப்பது மட்டுமே, இலங்கைக்கு ஆறுதலளிக்கக் கூடிய ஒரே விடயம் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது. (உ-சி)

# இந்திய வாகன இறக்குமதி குறைப்பு ஜப்பான்,சீனாவுக்கு அதிக வாய்ப்பு

கொழும்பு,நவ.19

இந்தியாவில் இருந்து வாகன இறக்குமதிகள் கட்டுப்படுத்தப்படவுள்ளன.

அதற்கு பதிலாக ஜப்பானில் இருந்து அதிக வாகனங்களை இறக்குமதி செய்யும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சீனா வாகனத்துறையில் தமது ஆதிக்கத்தைச் செலுத்தும் முகமாக இலங்கையில் வாகன உற்பத்தி மையம் ஒன்றை அமைக்கவுள்ளது.

இந்திய வாகனங்களுக் கான கேள்வி குறைந்து வருவதாகத் தெரிவிக்கப்படும் நிலையிலேயே, இந்த நடவடிக்கைகளுக்கு இலங்கை அரசு முன்னுரிமை வழங்க முன்வந்துள்ளது.

இதன் அடிப்படையில் ஜப்பானில் இருந்து தற்போதைய வாகன இறக்குமதியைக் காட்டிலும் சீனாவில் இருந்து அதிக வாகனங்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளன.

பல மில்லியன் டொலர் ஒதுக்கீட்டில் சீனாவின் வாகன உற்பத்தி மையம் ஹம்பாந்தோட்டையில் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## பம்பலப்பிட்டியில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பம்பலப்பிட்டி மெரின் டிரைப் கடற்கரை வீதியில் நேற்று பிற்பகல் இந்தச் சடலம் மீட்கப்பட்டது.

பிரபல கப்பல் நிறுவனமொன்றில் முகாமையாளராகக் கடமையாற்றிவரும் நாராஹேன் பிட்டியைச் சேர்ந்த எம்.பி.விஜித டி.சொய்சா (வயது-52) என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டார் என்று பொலிஸார் கூறினர்.

குறித்த நபர் தனது எதிரியுடன் பல மணி நேரம் போராடிய பின்னரே கொலை செய்யப்பட்டிருக்கலாமென பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர். (உ-16)

## அமெரிக்க...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

அதிகாரி ஒருவர் முதன்முறையாக இலங்கை வரவுள்ளமை முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

ஜரிஸ் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவிச்செயலர் றொபேட் ஓ பிளேக்கிற்கு அடுத்த நிலையில் உள்ளவர்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 19ஆவது கூட்டத்தொடரில் அமெரிக்கா இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றியது.

இலங்கை அரசினால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றி, தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கு சிறந்ததோர் தீர்வை வழங்குவதற்கு அரசுக்கு அழுத்தம் கொடுக்கவே அமெரிக்க மேற்படி பிரேரணையைக் கொண்டுவந்து நிறைவேற்றியது. (உ-சி)

## காணி...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

''நாட்டின் அரசமைப்புத் திருத்தம் உள்ளிட்ட முக்கியமான விடயங்கள் தொடர்பில் விவாதங்களை மேற்கொள்வதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்படவேண்டும் என அரச எதிர்க்கட்சிகளால் தம்மிடம் வேண்டுகோள் விடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் சபாநாயகர் அதனை ஏற்று பரிசீலனை செய்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்திலிருந்து காணி, பொலிஸ் அதிகாரங்களை நீக்குவது குறித்து அரசினுள் உத்தியோக பூர்வமான கருத்துப் பரிமாறல்கள் எதுவும் இடம்பெறவில்லை.

இதனை நீக்குவதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நியமிக்கவேண்டும் என்று அரச தரப்பினர் வேண்டுகோள் விடுத்தால் அதனை ஏற்று பரிசீலனை செய்து சபாநாயகர் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

எது எவ்வாறிருப்பினும், 13 ஆவது திருத்தத்தை நீக்குவது அல்லது காணி, பொலிஸ் அதிகாரங்களை அதிலிருந்து நீக்குவது தொடர்பில் அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாயின் அதனை நாம் கடுமையாக எதிர்ப்போம் - என்றார் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார. (உ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## நச்சு இலக்கு நீளும் வரை நிலையான அமைதி வெற்றுவேட்டே...!

அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்கி மாகாணசபைகள் முறைமையை ஒழிக்கவேண்டும் என்றும், மாகாணசபை முறைமையில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்றும், மாகாணசபைகளுக்குள்ள பொலிஸ், காணி அதிகாரங்களை நீக்கவேண்டும் என்றும் சமீப காலமாகத் தென்னிலங்கையில் பல தரப்புகளாலும் அதி உச்சத் தொனியில் கோஷங்கள் எழுப்பப்பட்டு வருகின்றன. அவர்களின் அடிப்படை நோக்கம் ஒன்றுதான்.

வடமாகாணம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அதிகாரத்தின் கீழ் வரக்கூடாது என்பதே அது. இந்தத் தொடரில் இறுதியாக யோசனை ஒன்றை முன்வைத்திருப்பவர்கள் ஜாதிக ஹெல உறுமய கட்சியினர். வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட சிங்களவர்களையும் முஸ்லிம்களையும் மீளக்குடியேற்றும்வரை வடமாகாணசபைத் தேர்தலை நடத்தக்கூடாது என்று ஜாதிக ஹெல உறுமய தீர்மானித்து இது தொடர்பான பிரசாரங்களை முன்னெடுக்கவும் முடிவுசெய்துள்ளது.

பௌத்த சிங்கள மக்களின் கலாசாரத் தலைநகராக எப்படி அநுராதபுரம் இருக்கிறதோ, அதேபோன்று தமிழ் மக்களுக்கு யாழ்ப்பாணம் இருப்பதை சிங்கள இனவாதிகள் ஏற்க மறுப்பது துரதிஷ்டமே.

மாகாணசபைகள் முறைமை இலங்கையின் அரசமைப்புக்கு உட்பட்டது. அப்படி இருந்தும், கடந்த 25 வருட காலமாக அது தென்னிலங்கை ஆட்சியாளர்களினால் முழுமையாக அமுல்செய்யப்படவில்லை. அரசமைப்பின் பிரகாரம் ஏனைய எட்டு மாகாணங்களிலும் மாகாணசபைகள் இயங்கும்போது, வடக்கில் மட்டும் அதற்கு வகை செய்யப்படாதிருப்பது அரசமைப்பை மீறும் செயலன்றி வேறல்ல.

யாழ்ப்பாணத்தில் தமிழர்களுடன் முஸ்லிம்களும் சிங்களவர்களும் நல்லுறவுடனேயே வாழ்ந்து வந்தனர். 1958 கலவரத்தில் ஆரம்பமாகி தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள மக்களால் கட்டவிழ்த்து விடப்பட்ட பயங்கரவாதம் காரணமாக, யாழ்ப்பாணத்தில் தமக்குப் பாதுகாப்பு இல்லை என்பதை சிங்கள மக்கள் உணர ஆரம்பித்தனர். 1983 கலவரத்தின் போது அங்கிருந்த எஞ்சிய 193 சிங்களக் குடும்பங்களும் வெளியேறின. நாவற்குளியில், படையினரின் உதவியுடன் குடியேறியோர் தாம் முன்னர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்ததாகக் கூறுகின்றனர். ஆனால் அவர்களுக்கு அதற்கான சட்டபூர்வ ஆவணம் எதுவும் கிடையாது. அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களில் ஒன்றாகவே நாவற்குளி குடியேற்றம் தமிழ் மக்களால் பார்க்கப்படுகிறது. அங்கு குடியேற்றப்பட்டவர்களுக்குக் காணிப் பதிவுகள் வழங்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

1990 ஒக்ரோபரில் யாழ்ப்பாணத்தில் இருந்தும் சாவகச்சேரி, கிளிநொச்சி, மன்னார் ஆகிய இடங்களில் இருந்தும் 72 ஆயிரம் முஸ்லிம் மக்கள் மிகவும் குறுகிய நேர அவகாசத்தில் தமது சொத்துகள் அனைத்தையும் கைவிட்ட நிலையில் வெளியேற்றப்பட்டனர். அவர்களில் பெரும்பாலானோர் புத்தளத்திலும், ஏனையோர் முஸ்லிம்கள் செறிந்துவாழும் தென்னிலங்கையில் பல்வேறு பகுதிகளிலும் குடியேறினர்.

இந்த மக்கள் வெளியேற்றப்பட்டு, தற்பொழுது 22 வருடங்கள் பூர்த்தி அடைந்து விட்டன. 2002 இல் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசதரப்புக்கும் இடையில் நோர்வேயின் அனுசரணையுடன் போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தான பின்பு, விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் விடுத்த செய்தி ஒன்றில், முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு வருத்தம் தெரிவித்திருந்தார். முஸ்லிம் மக்கள் வடக்கே சென்று குடியேறலாம் என்று அப்போதே அறிவித்தார்.

இந்த அறிவிப்பு வெளியாகி பத்து வருடங்கள் கழிந்து விட்டன. சுமார் இரண்டாயிரம் முஸ்லிம்கள் மட்டுமே யாழ்ப்பாணம் வந்து மீள்குடியேறி உள்ளனர். யாழ்ப்பாணத்தில் தற்பொழுது ஒஸ்மானியாக் கல்லூரி மற்றும் இரு பள்ளிவாசல்கள் இயங்குகின்றன. முஸ்லிம்களின் கடைகளும் திறக்கப்பட்டு விட்டன. தென்னிலங்கையில் இருந்தும் முஸ்லிம்கள் வியாபார நோக்கத்துக்காக வந்து போகின்றனர்.

முஸ்லிம் மக்கள் தமது சொந்த இடங்களில் வந்து குடியேறுவதற்கு எந்தத் தடையும் இப்போது இல்லை. அவர்கள் மீண்டும் முந்திய வசதிகளுடன் வாழ்வதற்கான ஏற்பாடுகள் விரைந்து செய்யப்பட வேண்டும் என்பதே தமிழ்ச் சகோதரர்களின் விருப்பமும் ஆகும். அது குறித்த கரிசனை மிகக் கவனமாக யாழ். முஸ்லிம் மக்களுடனான உறவை முன்னரை விடவும் மேம்படுத்த வேண்டும்.

வடமாகாணசபைத் தேர்தலை பிற்போடுவதற்கு அல்லது நடைபெறாது தடுப்பதற்கு சிங்களப் பேரினவாதக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய இப்போது தேடிக் கண்டுபிடித்துள்ள நொண்டிச் சாட்டு இது.

வடமாகாணத் தேர்தலைத் தட்டிக்கழிப்பதற்கு முதலில் தெரிவிக்கப்பட்ட நொண்டிச்சாட்டு கண்ணிவெடிகளே. கண்ணிவெடிகளை முற்றாக அகற்றிய பின்னரே தேர்தல் என்று கூறப்பட்டது. தற்பொழுது சிங்களவர்களும் முஸ்லிம்களும் மீளக்குடியேற்றப்பட்ட பின்னரே தேர்தல் என்கிறார்கள்.

இனவாதிகளின் தாளத்துக்கு அரசு ஆடுமானால் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை எட்ட முடியாது. தமிழ் மக்களுக்குச் சேர வேண்டிய அரசியல் உரிமைகளைப் பிசிறின்றி வழங்கி, அவர்களையும் சமத்துவமான பிரஜைகளாக்குவதற்கான ஏற்பாடுகளையும், திட்டங்களையும் வழிமுறைகளையும் வகுப்பதும் செயற்படுத்துவதும் கடினமானதல்ல. மனமிருந்தால் இடமுண்டு. தமிழ் மக்களைத் தங்கள் சகோதரர்கள் போன்று அரவணைத்துச் செல்வதில் பெரும்பான்மைச் சமூகத்தினர் மனங்கொண்டால் அது சாத்தியம்.

ஆனால் அதற்கு நேர்மாறாக பெரும்பான்மையினர் ஆள்வோராகவும், தமிழ் மக்கள் ஆளப்படும் அடிமைகளாகவும் நடத்தப்பட வேண்டும் என்ற நச்சு இலக்கு நீடிக்கும் வரை, இந்த நாட்டில் இன முரண்பாடு நீங்கப் போவதும் இல்லை. நாடு நிலையான அமைதியையும் சுபீட்சத்தையும் காணப்போவதில்லை. எல்லாமே வாய்ப்பேச்சும் வெற்று வேட்டாகவுமே நீளும்.

# யாழ்.மாவட்ட நெல் வயல்களில் கபில நிறத் தண்டுத்தத்தி தாக்கம்

**உடன் நடவடிக்கை எடுக்குமாறு பிரதி விவசாயப் பணிப்பாளர் அறிவிப்பு**

யாழ்ப்பாணம், நவ.19

யாழ். மாவட்ட நெல் வயல்களில் கபில நிறத் தண்டுத் தத்திகளின் தாக்கம் அதிகரித்துள்ளது.

இதன் பெருக்கத்தை உடன் கட்டுப்படுத்தாது விட்டால் நெற்செய்கையாளர் இழப்பைச் சந்திக்க நேரிடும் என்று யாழ். மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் கே.ஸ்ரீபால சுந்தரம் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்போது நெற் பயிர்கள் அதி கூடிய மட்டம் பெயரும் பருவத்தில் காணப்படுகின்றன. இந்த நிலையில் தண்டுத் தத்தியின் தாக்கமும் அதிகரித்துக் காணப்படுகிறது.

இந்தப் பீடைகள் பயிர்களின் அடிப்பகுதியில் கூட்டமாகக் காணப்படும். இதனால் தாக்கப்பட்ட வயல்களில் பயிர்கள் எரிந்தது போன்று இருக்கும். நவாலி, அராலி, வட்டுக்கோட்டை, கைதடி, நாவற்குழி, கப்பூது போன்ற பகுதிகளில் வெப்பம் காரணமாக நெற் பயிர்கள் பழுப்பாகவே காணப்படும்.

எனவே இந்தநோய்த் தாக்கம் குறித்து சந்தேகம் கொள்பவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் என்று அவர் மேலும் கூறினார்.

நல்லூர், கைதடி கமநல சேவைப் பிரிவு- 0777245886, உரும்பிராய், புத்தூர் கமநல சேவைப்பிரிவு- 0776139134, சண்டிலிப்பாய் கமநல சேவைப்பிரிவு- 0772549877, உடுவில் கமநல சேவைப்பிரிவு- 0776110288, தொல்புரம், காரைநகர், கமநல சேவைப்பிரிவு- 0776305749, தெல்லிப்பழை கமநல சேவைப் பிரிவு- 0779073808, புங்குடுதீவு கமநல சேவைப்பிரிவு- 0777077856, வேலணை கமநல சேவைப்பிரிவு- 0776531820, சாவகச்சேரி, அம்பன் கமநல சேவைப்பிரிவு- 0776512373, கரவெட்டி, புலோலி கமநல சேவைப்பிரிவு- 0771708069, பாடவிதான உத்தியோகத்தர்(பயிர் பாதுகாப்பு) - 0779114399, பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகம்- 0212222175, 0778349847.. (ம)

## ஒக்ரோபரில் மின்சாரசபைக்கு வசூல் 2 கோடி 13 லட்சம் ரூபா

கொழும்பு, நவ.19

ஒக்ரோபர் மாதத்தில் மின்சார சபையால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்புக்கள் மூலம் இரண்டு கோடி ரூபா வருவாயாகப் பெறப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவிக்கிறது.

அந்தத் தொகையில் ஒரு கோடி 81 லட்சம் ரூபா மின்சாரசபைக்கு ஏற்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகை என்றும் 32 லட்சம் ரூபா நீதிமன்ற அபராதங்கள் என்றும் கூறப்பட்டது.

மின்மானிகளில் மாற்றங்களைச் செய்துள்ளமை, கொழுக்கிகளைப் பயன்படுத்தி மின்சாரம் பெறப்பட்டுள்ளமை போன்ற முறைகேடான விதத்தில் மின்சாரத்தைக் களவாகப் பெறும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அத்தகைய சம்பவங்கள் தொடர்பாக 0112422259 என்ற தொலைபேசி எண்ணுக்குத் தகவல் வழங்குமாறு மின்சார சபை கேட்டுள்ளது. (ம-22)

## கொழும்பு சென்ற பஸ் பயணியிடம் மதவாச்சியில் கொள்ளை முயற்சி

யாழ்ப்பாணம், நவ.19

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்ற இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் மதவாச்சியில் உணவு நிலையம் ஒன்றின் முன்பாக நிறுத்தப்பட்ட போது பஸ்ஸினுள் கொள்ளை முயற்சி இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பயணிகள் விரைந்து குறித்த நபரைப் பிடிக்க முற்பட்ட போது சந்தேகநபர் அங்கிருந்து மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்று விட்டார் எனக் கூறப்பட்டது.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட இ.போ.ச. பஸ் மதவாச்சியில் உணவகம் ஒன்றின் முன்பாக நிறுத்தப்பட்டது. அதிலிருந்தவர்களில் பெரும்பாலானோர் கடைக்குச் சென்று விட்டனர். சிலர் பஸ்ஸினுள் இருந்துள்ளனர்.

அந்தச் சந்தர்ப்பத்தில் பஸ்ஸில் ஏறிய சந்தேகநபர் வயோதிபப் பெண் ஒருவர் அணிந்திருந்த சங்கிலியை அபகரிக்க முற்பட்டுள்ளார்.

இதனையடுத்து குறித்த பெண் சத்தமிட பஸ்ஸில் இருந்த பயணிகள் அவனைப் பிடிக்க முற்பட்ட போது பஸ்ஸில் இருந்து இறங்கி மோட்டார் சைக்கிளில் தலைமறைவாகி விட்டதாகக் கூறப்பட்டது.

குறித்த பெண் சங்கிலியை இறுகப் பற்றிப் பிடித்திருந்த நிலையில் அது காப்பாற்றப்பட்டதாகக் கூறப்பட்டது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் பயணிகள் அவதானமாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகின்றனர். பஸ்ஸின் கதவை மூடி விட்டுச் செல்வது இவ்வாறான சம்பவங்களை ஓரளவு தடுக்க உதவும் என்றும் பயணிகள் குறிப்பிட்டனர். (ம-4)

## ரூ.22 மில்லியன் செலவில் மண்டைதீவுக்கு ஆஸ்பத்திரி

யாழ்ப்பாணம், நவ.19

மண்டைதீவுக்கு புதிய வைத்தியசாலை விரைவில் அமைக்கப்படவுள்ளது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

சுமார் 22 மில்லியன் ரூபா செலவில் நவீன வடிவில் மண்டைதீவு வைத்தியசாலை அமையவுள்ளது என்றும் முழுமையான ஆளணிகளும் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-50)

## சண்டிலிப்பாய் கிராம சேவகர்கள் டிசெம்பரில் உள்ளக இடமாற்றம்

யாழ்ப்பாணம், நவ.19

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 7 வருடங்களுக்கு மேல் தொடர்ச்சியாக பணியாற்றிய கிராம சேவகர்களது விவரங்களை பிரதேச செயலர் திரட்டியுள்ளார்.

கிராமங்களில் தொடர்ச்சியாக 7 வருடங்களுக்கு மேல் ஒரு பிரிவில் கடமையாற்றக் கூடாது என்பது பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கை ஆகும்.

இதற்கமைவாக 7 வருடங்களுக்கு மேல் கடமையாற்றிய கிராம சேவையாளர்களை டிசெம்பர் முதலாம் திகதியில் இருந்து இடமாற்றம் செய்ய பிரதேச செயலர் எஸ். முரளிதரன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஏனைய பிரதேச செயலர் பிரிவுகள், உதவி அரச அதிபர் பிரிவுகளிலும் 7 வருடங்களுக்கு மேல் கடமையாற்றிய கிராம சேவையாளர்கள் அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தின் பணிப்புக்கு அமைய ஏற்கனவே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் எதிர்வரும் முதலாம் திகதி முதல் கிராம சேவையாளர் உள்ளக இடமாற்றம் செய்யப்படவுள்ளனர். (ம)

# வேலணை பிரதேச மக்களுக்கு வடக்கின் வசந்தத்தில் மின்சாரம்

யாழ்ப்பாணம், நவ.19

வேலணை கிழக்கு, மத்தி, செட்டிபுலம் கிராமங்களுக்கு வடக்கின் வசந்தம் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மின் இணைப்பு வழங்க வடக்கின் வசந்தம் திட்ட முகாமையாளர் எந்திரி ஐ.குணசீலன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

கடந்த தீவக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் செட்டிபுலம் சனசமூக நிலைய தலைவர் க.மார்க்கண்டுதாசன் மின்சாரத் தேவை குறித்து சுட்டிக்காட்டினார்.

இதனை அடுத்தே வடக்கின் வசந்தம் திட்ட முகாமையாளர் செட்டிபுலம் சனசமூக நிலைய வீதி, செட்டிபுலம் கலைமகள் வீதி, செட்டிபுலம் அம்மன் கோயில் வீதி, செட்டிபுலம் முருகன் கோயில் வீதி, செட்டிபுலம் ஐயனார் கோயில் வீதி உள்ளிட்ட பிரதேசங்களுக்கு மின்கம்பம் நட்டு மின்வயர் இணைப்பு வழங்கி, மின் விநியோகம் செய்ய ஆரம்ப நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட மண்டைதீவு செட்டிபுலம் மின்சாரம் இன்றி இருளில் மூழ்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இன்னும் சில மாதங்களில் மின் விநியோகப் பணி ஆரம்பமாகும் என்று கூறப்பட்டது. (ம-41)

## கொமர்ஷல் வங்கியின் சாவகச்சேரி கிளை இன்று இடம்மாறுகிறது

தென்மராட்சி, நவ.19

சாவகச்சேரி நகரில் கொமர்ஷல் வங்கியின் சாவகச்சேரி கிளை இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

இதுவரை காலமும் நகருக்கு வெளியே யாழ்ப்பாண வீதியில் இயங்கி வந்த வங்கிக்கிளை இன்று சாவகச்சேரி சந்திக்கு அருகிலுள்ள இலங்கை வங்கிக்கிளைக்கு அருகில் உள்ள பீ. எம். கே கட்டடத் தொகுதிக்கு இடம்மாறுகிறது.

வங்கிக் கிளையின் உத்தியோக பூர்வ ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.07 மணிக்கு நடைபெறும் எனவும் ஆரம்ப நிகழ்வில் வங்கியின் தலைவரும் உயர் அதிகாரிகளும் கலந்து கொள்வர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகன்றன முகாம்கள்

முல்லைத்தீவு, நவ. 19

அம்பலவன்பொக்கணையில் சர்ச்சையை ஏற்படுத்தி வந்த இராணுவ முகாம் நேற்றுமுன்தினம் அகற்றப்பட்டுள்ளதாக அந்தப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அம்பலவன்பொக்கணை ஆலடிப்பிள்ளையார் கோயிலுக்கு அருகில் கடற்கரை ஓரமாக இருந்த இந்தப் படைமுகாம் நேற்றுமுன்தினம் பிற்பகல் இராணுவத்தினரால் அகற்றப்பட்டு, அங்கிருந்த இராணுவத்தினரும் வேறு இடத்துக்குச் சென்றுள்ளனர்.

அண்மையில் பெண் ஒருவர் தனித்திருந்தவேளை சிப்பாய் ஒருவர் வீடுபுகுந்தார் என்று சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த இந்த முகாமை அங்கிருந்து அகற்ற வேண்டும் என அந்தப் பகுதி மக்கள் இராணுவ அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதேவேளை மாத்தளன், பழைய மாத்தளன் பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாம்களும் நேற்றுமுன்தினம் அகற்றப்பட்டுள்ளன. (ஐ)

## மண் அணையை அகற்ற கோரிக்கை

உடையார்கட்டு வடக்கில் குடிமனைகளுக்கு ஊடாகச் செல்லும் இராணுவ மண் அணை அகற்றப்படாமையால் அந்தப் பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்ளுகின்றனர்.

இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டு ஒன்றரை வருடங்கள் கடந்த நிலையில் இந்தப் பகுதியில் மண் அணை அகற்றப்படவில்லை.

மண் அணை காரணமாக 10 குடும்பங்கள் காணிகளில் எதுவும் செய்யமுடியாதுள்ளதாகத் தெரிவிக்கின்றன. இதில் ஒரு சிலர் தமது சொந்தச் செலவில் மண் அணைகளை அகற்றியுள்ளனர்.

இது தொடர்பாக அந்தப் பகுதி இராணுவ முகாம் பொறுப்பதிகாரி, கிராம சேவையாளர், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் மற்றும், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ஆகியோர்களுக்கு அறிவிக்கப்பட்டபோதும் இதுவரை எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-400)

# புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் அரச ஊழியருக்கு வீடு இல்லை

### இந்திய வீட்டுத் திட்டத்தில் புறக்கணிப்பு

**புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த அரச அலுவலர்கள் இந்திய வீட்டுத் திட்டத்தில் மட்டும் புறக்கணிக்கப்படுகின்றனர் என விசனம் தெரிவிக்கின்றனர்.**

இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் நிரந்தர வீடுகள் வழங்குவதில் தாம் புறக்கணிக்கப்படுவதாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த அரச அலுவலர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்திய நிதி உதவியுடன் வன்னிப் பிரதேசத்தில் இறுதிக்கட்ட போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் அமைப்பதற்கென பயனாளிகள் தெரிவு இடம்பெற்று வருகின்றது.

புதுக்குடியிருப்புப் பகுதியில் அழிவடைந்த வீடுகளுக்குப் பதிலாக நிரந்தர வீடுகள் அமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் திட்டத்தின் கீழ் அரச அலுவலர்கள் உள்வாங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக வீட்டுத் திட்டப் பயனாளிகள் தெரிவில் பாதிக்கப்பட்ட அரச ஊழியர் ஒருவர் கூறியதாவது:-

இறுதிப் போரின் போது அரச ஊழியர்கள் சாதாரண மக்கள் என்ற பாகுபாடின்றி அனைத்து வீடுகளும் முற்றாக அழிக்கப்பட்டன. கிபிர் குண்டு வீசித் தாக்கும் போது வகைப்படுத்தித் தாக்கவில்லை.

ஆனால் இப்போது நடைமுறைப்படுத்தப்படும் இந்திய வீட்டுத் திட்டத்தில் மட்டும் அரச ஊழியர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர் என்றார் அந்த ஊழியர்

இது தொடர்பாக புதுக்குடியிருப்பு பதில் பிரதேச செயலரை தொடர்புகொண்டு கேட்டபோது

புதுக்குடியிருப்பு பகுதியிலுள்ள பெருமளவான வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. இருந்த போதும் தற்போது எமது பிரதேச செயலகத்திற்கென குறிப்பிட்ட அளவு நிரந்தர வீடுகளே கட்டுவதற்கு மாவட்டச் செயலகம் அனுமதி தந்துள்ளது.

புள்ளி வழங்கும் திட்டத்தின் அடிப்படையிலேயே பயனாளிகள் தெரிவு இடம்பெறுகின்றது. புள்ளிகளை கூடுதலாகப் பெறும் குடும்பங்கள் முன்னிலைப்படுத்தப்படுகின்றன-என்றார். (ஐ-400)

### விசேட தேவைக்குட்பட்டோரின் கண்காட்சி



வவுனியா,நவ.19

சர்வதேச விசேட தேவைக்கு உட்பட்டோர் தினம், வவுனியா தெற்கு வலயக் கல்வி பணிமனையின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் கொண்டாடப்பட்டது.

மு.ப.9 மணிக்கு அமைதி ஊர்வலம் நகரிலிருந்து ஆரம்பக்கப்பட்டு கண்டி வீதி வழியாக வவுனியா நகரசபையை அடைந்தது.

அங்கு விசேட நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் விசேட தேவைக்கு உட்பட்டோரின் கைவண்ணத்தில் உருவான பொருள்களின் கண்காட்சியும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறைகள் எமக்கு பொருட்டல்ல, எம்மாலும் சிறந்த ஆற்றல்களை வெளிப்படுத்தி சிறந்த சாதனையாளராக வளரமுடியும் என்ற தொனிப்பொருளில் கண்காட்சி அமைந்திருந்தது. (ஐ)

## புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் பட்டதாரி பயிலுநர்களுக்கு சம்பளம் கிடைக்கவில்லை

**10 ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. பணி ஏற்று ஒரு மாதம் கடந்தும் சம்பளம் வழங்கப்படவில்லை**

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் பணியாற்றும் பட்டதாரி பயிலுநர்களுக்கு இதுவரை சம்பளம் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் 19 பட்டதாரி பயிலுநர்கள் பணியாற்றுகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் யாழ். மாவட்டத்திலிருந்து நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. தினமும் யாழ்ப்பாணம் சென்று வருகின்றனர்.

இது தொடர்பாக அங்கு பணிபுரியும் பட்டதாரிப் பயிலுநர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்,

எமக்கு 10 ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. பணி ஏற்று ஒரு மாதம் கடந்தும் சம்பளம் வழங்கப்படவில்லை. விடுதி வசதிகள் செய்து தரப்படாத நிலையில் தினமும் எமது வீடுகளுக்கே சென்று வர வேண்டியுள்ளது. இதற்கென நாளாந்தம் 300 ரூபாவை செலவிடவேண்டியுள்ளது- என்றார். (ஐ-400)

## வீடமைப்பு துரிதம்

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் இந்திய உதவியுடனான நிரந்தர வீடுகள் அமைக்கும் பணிகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன.

இதன்படி முதற்கட்டமாக சுதந்திர்புரத்தில் 324 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அதனைத் தொடர்ந்து தேராவில், வள்ளிபுனம், தேவிபுரம், புதுக்குடியிருப்பு மேற்கு, ஆனந்தபுரம், மற்றும் மந்துவில் ஆகிய பகுதிகளில் புதிய வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

அதற்கேற்ற வகையில் திட்டத்துக்கு தகுதியானவர்கள் தெரிவு செய்யப்பட்டு அதற்கான படிவங்களை நிரப்பும் ஆரம்பக் கட்ட வேலைகள் இடம்பெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-400)

## மாற்று வலுவுடையோருக்கு சுயதொழில் கொடுப்பனவு

**மாற்று வலுவுடையோருக்கான தேசிய செயலகத்தினால் ஒவ்வொரு வருக்கும் 15 ஆயிரம் ரூபா**

புதுக்குடியிருப்பு, நவ. 19

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சுமார் 11 மாற்றுத் திறனாளிகளுக்கு சுயதொழில் ஊக்குவிப்புக் கொடுப்பனவாக ஒரு லட்சத்து 65 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

சமூக சேவைகள் அமைச்சின் மாற்று வலுவுடையோருக்கான தேசிய செயலகத்தினால் ஒவ்வொருவருக்கும் தலா 15 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளதாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.தசரதன் தெரிவித்தார்.

இவர்களுக்கான காசோலைகள் மேற்படி செயலகத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார்.

திருமதி ஜோர்ஜ் - சொரஞ்சன் செல்வசோதி (உடையார்கட்டு), சுப்பையா - நாகராசா (உடையார்கட்டு வடக்கு), பெரியண்ணன் - ஆனந்தராசா (கைவேலி), சஞ்சிப்காந் - மங்களேஸ்வரி (மூங்கிலாறு), கிட்டிணபிள்ளை - ஸ்ரீகரன் (மூங்கிலாறு வடக்கு)

குணரத்தினம் - பிறேமராஜா (மூங்கிலாறு தெற்கு), முருகேசு - கந்தசாமி (உடையார்கட்டு வடக்கு), சு.இராமலிங்கம் (மூங்கிலாறு), இளையதம்பி - சுந்தரலிங்கம் (மூங்கிலாறு வடக்கு), சின்னமூக்கன் - சந்திரபோஸ் (மூங்கிலாறு வடக்கு), திருமதி இராசேந்திரம் கோமதி (மூங்கிலாறு வடக்கு) ஆகியோரே கொடுப்பனவுக்காகத் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ-400)



பூநகரி பிரதேச செயலர் பிரிவின் சிறுவர், முதியோர், மாற்று ஆ[illegible] கடந்த வெள்ளிக்கிழமை ஜெயபுரம் உப அலுவலகத்தில் நடைபெற்றது. (ஐ-9)

## இளைஞர்களுக்கான ஆளுமை மேம்பாடு

### மன்னார், வவுனியா கழகங்களுக்கு பயிற்சி



மன்னார்,நவ:19

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் மன்னார் பிரதேச இளைஞர் கழகங்களின் அதிகாரிகளுக்கான மாவட்ட மட்ட பயிற்சி வேலைத்திட்டம் ஒன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை மன்னார் முருங்கன் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

மஹிந்த சிந்தனையின் கீழ் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் இளைஞர்களுக்கான தலைமைத்துவத்தை மேம்படுத்தி அவர்களை அபிவிருத்தி பணிகளில் ஈடுபடுத்துவது குறித்த பயிற்சி வேலைத்திட்டமாக இது அமைந்திருந்தது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆரம்பமான இந்தப் பயிற்சி வேலைத்திட்டம் இன்றுடன் முடிவடைகிறது.

மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் இருந்து 9 பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த இளைஞர் கழகங்களின் உறுப்பினர்கள் இதில் கலந்து கொண்டுள்ளனர். (ஐ-12)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தடம்புரண்டது ஓட்டோ; பயணி படுகாயம்

தென்மராட்சி, நவ.19
வீதியில் காணப்பட்ட குழியில் சில்லு இறங்கியதில் ஓட்டோ தடம் புரண்டது. அதில் பயணித்தவர் தூக்கி வீசப்பட்டு காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை இரவு மிருசுவில் - உசன் வீதியில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த குலராஜசிங்கம் சிவனேஸ்வரன்- (வயது-29) என்பவர் காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மிருசுவில் ஏ-9 வீதியிலிருந்து உசனுக்குச் செல்லும் வீதி மிகவும் மோசமாகச் சேதமடைந்து குன்றும் குழியு மாகக் காணப்படுவதால் அண்மைக் காலமாக இந்த வீதியில் செல்வோர் விபத்துக்குள்ளாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

# மின்சார வசதி இருந்தும் விளக்கில் படிக்கும் மாணவர்

## மறவன்புலோ பகுதியில் நிலைமை

தென்மராட்சி,நவ.19
தென்மராட்சி தெற்கு மறவன்புலோ பகுதியில் கடந்த இரண்டு வருடங்களாக மின்சாரம் இருந்தும் குப்பி விளக்கில் படிக்க வேண்டிய நிலைமை உள்ளதாக மாணவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மறவன்புலோ மேற்கில் மக்கள் மீளக்குடியமர்ந்த பின்னர் 2004 ஆம் ஆண்டு அப்பகுதியில் மின்மாற்றி பொருத்தப்பட்டு மின்விநியோகம் வழங்கப்பட்டது.

அவ்வேளையில் மின்சாரத்தை 150 குடும்பங்கள் பயன்படுத்தியமையால் போதிய அளவு மின்சாரம் கிடைத்தது. மறவன்புலோவின் ஏனைய பகுதிகளில் 300 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் மீள் குடியமர்ந்த பின்னரும் 2010 ஆம் ஆண்டு முதல் இந்த மின்மாற்றி மூலமே மின்விநியோகம் வழங்கப்பட்டது.

இதன்பின்னர் இப் பிரதேசத்திற்கான மின்விநியோகம் சீர்குலையத் தொடங்கியது.

தினமும் இரவு வேளையில் மங்கலான நிலையில் மின்வெளிச்சம் காணப்படுவதால் குப்பி விளக்கில் தாம் கல்வி கற்பதாகவும் மாணவர்கள் தெரிவித்தனர்.


450 குடும்பங்களுக்கு மேலாக குறித்த மின்மாற்றியில் இருந்து மின்சாரம் வழங்கப்படுவதால் அது மங்கலாக இருப்பதாகக் கூறப்பட்டது. புதிய மின்மாற்றி பொருத்துமாறு யாழ்ப்பாணம், சாவகச்சேரி மின்சார சபை அதிகாரிகளுக்கு பலதடவைகள் அறிவித்தும் பயன் கிடைக்கவில்லை எனவும் தெரிவித்தனர்.

இவ்விடயம் தொடர்பாக மின்சார சபை அதிகாரியுடன் தொடர்பு கொண்ட போது:-

லக்ஸபான மின்சார இணைப்பு, தென்மராட்சி பிரதேசத்துக்கு வழங்கப்பட்ட பின்னரே பல இடங்களில் இவ்வாறான நிலைமை காணப்படுகிறது.

இப்பகுதிக்கு மேலும் ஒரு மின்மாற்றியைப் பொருத்துவதற்கு கோரியுள்ளோம்.

யாழ்.மாவட்டத்துக்கு லக்ஸபான மின்விநியோகம் முழுமையாக கிடைக்கும் வரை சில இடங்களில் இவ்வாறான நிலை இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-9)



ஜனாதிபதி மஹிந்தவின் பிறந்த தினத்தை முன்னிட்டு வேலணை பிரதேச சபை தலைவர் சி.சிவராசா தலைமையில் 50 மரங்கள் நடப்பட்டன. இதில் பிரதம முகாமைத்துவ உதவியாளர் ஐ. குருச்சந்திரநாதன் மரம் நடுகிறார். (ம-50)

### மட்டுவில் பிரதேசத்தில்

## பால் உற்பத்தியை அதிகரிப்பது தொடர்பில் விரிவான ஆராய்வு

தென்மராட்சி, நவ. 19
தென்மராட்சி மட்டுவில் பிரதேசத்தில் கால் நடை வளர்ப்பு மற்றும் பால் உற்பத்தியை அதிகரிப்பது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

மட்டுவில் செல்வப்பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் உள்ள பொது நோக்கு மண்டபத்தில் வெள்ளிக்கிழமை இது தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது.

சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் செ.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட நிறுவன செயற்பாட்டு அலுவலர் எஸ். சர்வானந்தா, சாவகச்சேரி கால்நடை வைத்தியர் க.இரகுநாதன் உட்பட பலர் கருத்துரைகளை வழங்கினர். (ம-9)

## சீர்செய்யப்படாத கால்வாய்ப்பகுதி விழுந்து எழும்பும் பாதசாரிகள்

யாழ்ப்பாணம், நவ 19
யாழ்.நகரில் சத்திரச்சந்தியில் இருந்து தபாலக சுற்று வட்டச் சந்திவரையான வீதியோரத்தில் அமைக்கப்பட்டுள்ள வடிகால் வாய்க்குழி உரிய முறையில் சீர்செய்யப்படாமையால் பாதசாரிகள் கால்வாயின் அருகில் மூடப்படாத கிடங்கில் விழுந்து எழவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த 3 நாள்களில் இந்த கிடங்கில் 5 பேர் தவறுதலாக விழுந்து காயமடைந்திருக்கும் அதேசமயம், ஒருவர் கால் முறிந்தும் பாதிக்கப்பட்டுள்ளார்.

இந்த கால்வாய் அருகே



மூடப்படாத பகுதியை சீர் செய்வதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இப்பகுதி வர்த்தகர்கள் கேட்டுள்ளனர். (ம-17)

# வீதிகளில் மரணப் பொறிகள்

## நாச்சிமார் கோயில் அருகில் அநியாயச் சாவு


யாழ்ப்பாணம்,நவ.19
யாழ்.நாச்சிமார் கோயிலுக்கும் தட்டாதெருச் சந்திக்கும் இடையில், காணப்படும் மதகு ஒன்று அரைகுறையாகத் திருத்த வேலைகள் நடைபெற்று தற்போது பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில் அதற்குள் தவறி வீழ்ந்தநபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

கொக்குவில் தலையாளியைச் சேர்ந்த நடராஜா பத்மநாதன் (வயது- 55) என்ற நகைத் தொழிலாளியே இவ்வாறு உயிரிழந்தவராவார். இந்த மதகு புனரமைக்கப்படும் நிலையில் கடந்த சில மாதங்களில் ஏழு பேரைக் காயப்படுத்தியது என்று இந்தப்பகுதி மக்கள் கூறினர்.

குறித்த மதகு வேலைகளுக்குப் பொறுப்பான வீதி அபிவிருத்தி அதிகார சபையும், அதன் ஒப்பந்தகாரருமே இந்தச் சம்பவத்துக்கு பொறுப்புக் கூறவேண்டியவர்கள் என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.

வீதி அகலிப்புப் பணிகளின் போது பாலங்களும் உடைக்கப்பட்டு புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் இருத்தப் பணிகள் இடைநடுவில் விடப்பட்ட அல்லது திருத்தப் பணிகள் இடம்



பெறும் பாலங்களுக்கு அருகே எச்சரிக்கை வெளிச்சம் வைக்கப்பட வேண்டியது அவசியம்.

ஆனால், இந்த விடயம் குறித்துப் புதிய ஒப்பந்தகாரர்கள் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை.

இது குறித்து மக்கள் பல தடவை அவர்களுக்குத் தெரியப்படுத்திய போதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று கூறப்பட்டது.

இதே வேளை குறித்த பகுதியில் வெளிச்சம் எதுவும் ஏற்படுத்தப்படாத நிலையில் இந்த மதகு இன்னும் பல உயிர்களைக் காவு கொள்ளலாம் என்று மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இரண்டு மாதங்களுக்கு மேலாகக் குறித்த மதகின் திருத்தப் பணிகள் இடம்பெறாத நிலையில் கனரக வாகனங்கள், குறித்த வீதியால் பயணிப்பதால் அந்தப் பகுதி மிகவும் சேதமடைந்து காணப்படுகிறது.

சம்பந்தப்பட்டவர்களின் அசிரத்தையால் மக்கள் பெரும் இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்று இந்தப்பகுதி மக்கள் கூறினர்.

இதே வேளை குறித்த மதகு வேலைகள் நிறைவடையும் வரை மாற்றுப் பாதையைப் போக்குவரத்துக்கு ஒழுங்கு செய்யுமாறும் மக்கள் கேட்டுள்ளனர். (ம-7)

## வரவேற்கத் தயாராகிறது 'யாழ்.வளைவு'

யாழ்ப்பாணம், நவ. 19
ஏ-9 வீதியில் செம்மணியில் யாழ்.வளைவு புதிதாக அமைக்கப்பட்டு வருகிறது.

இதற்கான பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

வீதி அகலிப்புப் பணிகளின் போது இடையூறாகக் காணப்பட்ட குறித்த வளைவு உடைத்து அகற்றப்பட்டது.

அகற்றப்பட்ட இந்த வளைவை மீண்டும் அமைப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை நல்லூர் பிரதேச சபையிடம் ஒரு மில்லியன் ரூபா நிதியை வழங்கியிருந்தது.

இந்த நிதியுதவியில் நல்லூர் பிரதேச சபை குறித்த வளைவை மீண்டும் அமைக்கும் பணிகளைத் தொடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## தீவுப்பகுதியில் புகையிலை செய்கையில் ஆர்வம்

யாழ்ப்பாணம்,நவ.19
தீவுப்பகுதியில் விவசாயிகள் புகையிலைச் செய்கையில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

வேலணை, மண்டைதீவு விவசாயிகள் தமது விவசாய நிலங்களைப் பண்படுத்தி மும்முரமாகப் புகையிலைச் செய்கையில் ஈடுபடுகின்றனர்.

கடந்த ஆண்டை விட இந்தமுறை அதிக எண்ணிக்கையான விவசாயிகள் புகையிலைச் செய்கையில் ஆர்வம் காட்டியுள்ளனர்.

இந்தப் பகுதி விவசாயிகள் வடமராட்சிக்குச் சென்று புகையிலை நாற்றுகளை பெற்று வருகின்றனர்.

வலி.கிழக்குப் பிரதேச விவசாயிகளும் புகையிலைச் செய்கையில் ஆர்வம் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

# மனநோயால் பாதிக்கப்பட்ட முதியோருக்கு காப்பகம்

## ஜனவரி முதல் கைதடி இல்லத்தில்

யாழ்ப்பாணம், நவ 19
மனநோயால் பாதிக்கப்பட்ட வயோதிபர்களைப் பராமரிக்கவென கைதடியில் முதியோர் இல்லத்தில் தனியாகக் காப்பகம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

இதற்கென சமூக சேவைகள் திணைக்களம் 10.3 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது.

உறவினர்களால் கைவிடப்பட்ட நிலையில் மனநோயால் பாதிக்கப்படும் முதியோரைப் பராமரிக்கும் நோக்குடன் இந்தக் காப்பகம் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டு வருகின்றது.

மனநோயால் பாதிக்கப்பட்ட முதியோரைத் தனிமையாக வைத்துப் பராமரித்து, அவர்கள் குணமடையும் பட்சத்தில் இல்லவிடுதியில் இணைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முதல் முதலாகக் கைதடி முதியோர் இல்லத்திலேயே இந்தக் காப்பகம் அமைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

குறித்த காப்பகக்கட்டடப் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன. ஜனவரியில் இந்தக் கட்டடம் ... (ம-17)

## குடாநாட்டு மின்பாவனையாளரின் துன்பம் தீர்வது எப்போது...?

யாழ்ப்பாணம்,நவ.19
குடாநாட்டில் மின் பாவனையாளர்களின் துன்பம் எப்போது தீர்வது என்று விசனம் தெரிவிக்கப்படுகிறது.

வீதி அகலிப்புப் பணிகள், மற்றும் மின் விநியோகமார்க்கங்களில் இடம்பெறும் திருத்த வேலைகள் போன்றவற்றால் குடாநாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் அடிக்கடி மின்தடை ... டியுள்ளது என்று மின்பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர். காலை 8.30 மணிக்கு இடம்பெறும் மின்வெட்டு மாலை 6 மணிக்குப் பின்னரும் தொடர்கிறது என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சிலவேளைகளில் இரவு 7 மணியைத் தாண்டியும் மின்தடை தொடர்ந்து இருக்கிறது என்றும் கவலை கூறுகின்றனர். இதனால் மின் விநியோகத்தால் மாணவர்கள் பெரிதும் பாதிப்படைகின்றனர் என்றும் ... சிரமங்களை எதிர்கொள்ள வேண் ... தெரிவிக்கப்பட்டது. (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்மோகன் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம்

## அறிவித்தார் மம்தா

கொல்கத்தா, நவ.19

நாடாளுமன்றத்தின் குளிர்கால கூட்டத்தொடரில் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுக்கு எதிராக திரிணாமுல் காங்கிரஸ் கட்சி நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரும் என்று அந்தக் கட்சியின் தலைவரும் மேற்கு வங்க முதல்வருமான, மம்தா பானர்ஜி தெரிவித்தார்.

சில்லறை வர்த்தகத்தில் அந்நிய நேரடி முதலீட்டை அனுமதித்தது, பெற்றோல் விலை உயர்வு உட்பட மத்திய அரசின் முடிவுகளை எதிர்த்து சில மாதங்களுக்கு முன், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசிலிருந்து திரிணாமுல் காங்கிரஸ் கட்சி வெளியேறியது. இதனால் பெரும்பான்மை இழந்த அரசாக மாறியது மத்திய அரசு.

இதன்பின் டில்லியில், மத்திய அரசுக்கு எதிராக பெரியளவிலான போராட்டத்தை நடத்திய மம்தா பானர்ஜி, நாடாளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத் தொடரில் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்படும் என்று அறிவித்தார். இந்த நிலையில், கொல்கத்தாவில் தனது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நேற்று முன்தினம் ஆலோசனை நடத்தியபின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மம்தா தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத் தொடரின் முதல் நாளில் மத்திய அரசுக்கு எதிராக, திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சுதீப் பந்தோபாத் யாய், நம்பிக்கையில்லா தீர்மானத்தைக் கொண்டு வருவார்.



சில்லறை வர்த்தகத்தில் நேரடி அன்னிய முதலீடு, சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகத்தில் கட்டுப்பாடு என அடுத்தடுத்து மக்களுக்கு விரோதமான முடிவுகளை மத்திய அரசு எடுத்துள்ளது.

எனவே மத்திய அரசை தூக்கி எறியவும் பொதுத் தேர்தல் மூலமாக புதிய அரசை கொண்டு வரவும் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரப்படுகிறது.

எதிர்க்கட்சியான பா.ஜ. க. உள்ளிட்ட அனைத்து அரசியல் கட்சிகளுடனும் பேசுவதற்கு நாம் தயார். ஆளும். கூட்டணியில்இடம்பெற்றுள்ள தி.மு.கவும் எங்கள் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டுகிறோம். இதே போல் சமாஜ்வாடி மற்றும் பகுஜன் சமாஜ் கட்சியினரும் இடதுசாரி கட்சிகளும் எங்கள் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டும்- என்றார். (வ)

## மன்மோகன் கம்போடியாவுக்கு ஒபாமாவையும் சந்திக்கலாம்

டில்லி, நவ.19

கிழக்காசிய நாடுகளின் மாநாடுகளில் பங்கேற்பதற்காக பிரதமர் மன்மோகன் சிங் மூன்று நாள்கள் அரசு முறைப் பயணமாக நேற்று கம்போடியா பயணமானார்.



ஆசியான் கூட்டமைப்பில் புருனே தருஸ்ஸலாம், கம்போடியா, இந்தோனேசியா, லாவோஸ், மலேசியா, மியன்மார், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, வியட்நாம் ஆகிய நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.

பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல், உறுப்பு நாடுகளிடையே சமூக, பண்பாட்டு உறவுகள் மற்றும் அமைதியைப் பேணுதல் ஆகியவை ஆசியான் கூட்டமைப்பின் நோக்கமாகும்.

இதேபோல் இந்தியா, அமெரிக்கா, ரஷ்யா, சீனா உட்பட 18 நாடுகள் கிழக்கு ஆசிய கூட்டமைப்பில் உறுப்பினர்களாக உள்ளன.

கிழக்காசிய நாடுகளின் 7 ஆவது மாநா டும், திங்கள், செவ்வாய் ஆகிய நாள்களில் 21 ஆவது ஆசியான் மாநாடும் கம் போடிய தலைநகர் நாம் பென்னில் நடைபெறு கின்றன.

கிழக்காசிய மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன் மோகன் சிங், அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, தென் கொரிய அதிபர் லீ மியூங் பக், ஜப்பானியப் பிரதமர் யோஷிஹிகோ நோடா, சீனப் பிரதமர் வென் ஜியாபோ, ஆஸ்திரேலியப் பிரதமர் ஜூலியா கில்லார்ட், நியூ சிலாந்து பிரதமர் ஜோன் கீ உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

அமெரிக்க ஜனாதிபதியாக இரண்டாவது முறையாகப் பதவியேற்றுள்ள ஒபாமாவை பிரதமர் குறித்த மாநாட்டில் சந்திப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதமருடன் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன், வெளியுறவுத் துறைச் செயலர் ரஞ்சன் மத்தாய் மற்றும் இந்திய பத்திரிகையாளர் குழு ஒன்றும் சென்றுள்ளது.

## இந்திய எல்லையில் 170 கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் மீட்பு

இந்திய எல்லையில் 170 கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருள் எல்லைப் பாதுகாப்புப் படையினரால் மீட்கப்பட்டது.

பாகிஸ்தான் பஞ்சாப் மாநிலம் வழியாக இந்தியாவுக்குள் போதைப்பொருள் கடத்தப்பட்டு வருகிறது. அதைத் கட்டுப்படுத்தும் வகையில் எல்லைப் பாது காப்புப் படையினர் நேற்று முன்தினம் அஜ்னாலா பிரிவு எல்லை அருகே காலை ரோந்து சென்றபோது சந்தேகத்துக்கு இடமான வகையில் சிலர் நடமாடுவது தெரிந்தது.

அவர்களிடமிருந்து பாகிஸ்தானிலிருந்து 34 பொட்டலங்களில் கடத்தி வரப்பட்ட 170 கோடி ரூபா மதிப்பிலான ஹெரோயின்போதைப்பொருள் மற்றும் ஒரு கைத்துப்பாக்கியும் கைப்பற்றப்பட்டது. (வ)



பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட பின்னர் நாடு திரும்பிய பீகார் முதல்வர் நிதிஷ் குமாருக்கு பாட்னாவில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

## உலகின் சக்தி வாய்ந்த பெண்களின் பட்டியலில் இந்தியருக்கு 5 ஆவது இடம்

உலகின் மிகவும் சக்தி வாய்ந்த 50 பெண் தொழில் அதிபர்கள் பட்டியலில் ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கியின் பணிப்பாளர் சந்தா கொச்சார் 5 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.



உலகின் மிகவும் சக்தி வாய்ந்த 50 பெண் தொழிலதிபர்களின் பெயர்ப் பட்டியலை பார்ச்சூன் பத்திரிகை வெளியிட்டுள்ளது. அதில் ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கியின் பணிப்பாளர் சந்தா கொச்சார் 5 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

பெட்ரோபிராஸ் என்னும் மிகப்பெரிய எண்ணெய் மற்றும் எரிவாயு நிறுவனத்தின் தலைவராக உள்ள பிரேசிலைச் சேர்ந்த மரியாடாஸ் கிராஸஸ் போஸ்டர் உலகின் சக்திவாய்ந்த 50 பெண் தொழிலதிபர்கள் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளார். (வ)

## ‘ஆங் சான் சூகி கொலனி’ என பெயர் மாறிய ஆந்திர கிராமம்

ஆந்திராவின் அனந்தபூர் மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தில் தலித்துக்கள் வசிக்கும் பகுதி ஒன்றுக்கு மியன்மார் ஜனநாயகக் கட்சித் தலைவர் ஆங் சான் சூகியின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை அங்கு அவர் மேற்கொண்ட பயணத்துக்குப் பின்னர் அவரைக் கௌரவிக்கும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முன்னர் 'பப்பசனிப் பல்லி' என்று அழைக்கப்பட்ட மேற்படி கிராமமே உள்ளூர் அதிகாரிகளால் ஆங் சான் சூகி கொலனி எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மேலும் நோபல் பரிசு கிடைக்கப் பெற்ற பெண்மணியான ஆங் சான் சூகி அங்கு பயணம் செய்த போது அவரது பெயருடன் கூடிய பெயர் மாற்றம் செய்யப்பட்ட ஊரின் மிகப் பெரியபனர்க ளுடனும் ஆரவாரமாக கிராம மக்கள் வரவேற்றனர்.

இவ்வாறான கௌரவம் கிடைக்கப் பெற்ற சூகி கிராம மக்கள் முன்னிலையில் பேசுகையில் ''எனது பெயரின் அர்த்தம் மிகவும் வித்தியாசமான வெற்றிகளின் கூட்டம் என்பதாகும்.

எனவே இந்தப் பெயர் மாற்றம் செய்யப்பட்ட கிராமமும் பல எதிர்பார்க்காத வெற்றிகளைப் பெற வாழ்த்துகிறேன். வெற்றி என்பது தன் போக் கில் எவரிடமும் வருவதில்லை.

நீங்கள் அனைவரும் அதற்குக் கடினமாக உழைக்க வேண்டும்'' என்று தெரிவித்தார். (வ)

## பால் தாக்கரேயின் மறைவுக்கு அரசியல் தலைவர்கள் இரங்கல்

டில்லி, நவ.19

உடல்நலக்குறைவு காரணமாக சிகிச்சை பெற்று வந்த சிவசேனா கட்சித் தலைவர் பால்தாக்கரே (வயது86) நேற்று முன்தினம் காலமானார்.

உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்த அவர், மும்பை நகரின் முன்னணி மருத்துவமனைகளில் ஒன்றான லீலாவதி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். பால் தாக்கரேயின் உடல் பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக மத்திய மும்பையில் உள்ள சிவாஜி பூங்கா மைதானத்துக்கு நேற்றுக் காலை எடுத்துச் செல்லப்பட்டது. அவரது மறைவுக்கு, அரசியல் வேறுபாடுகளைக் கடந்து, அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

**ஜனாதிபதி பிரணாப்**


மூத்த அரசியல் தலைவர் ஒருவரை, நாடு இழந்து விட்டது. சாதாரண மக்களின் நலனுக்காகப் பாடுபட்டவர். ஊடகத்துறையிலும், முக்கிய பங்காற்றியவர்.

**பிரதமர் மன்மோகன்**

மகாராஷ்டிரா அரசியலில் தனித்துவமிக்க அரசியல் தலைவராக விளங்கியவர், பால் தாக்கரே. தன்னுடைய திறமையான அரசியல் நடவடிக்கை காரணமாக, சிவசேனாவை, மகாராஷ்டிராவின் பிரதான கட்சியாக மாற்றியவர்.

**அத்வானி (பா.ஜ.க., மூத்த தலைவர்)**

தாக்கரேயின் மறைவால், இந்திய அரசியலில்ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை, இனிமேல் நிரப்புவது கடினம். மிகச் சிறந்த பண்புகளைக் கொண்டவராகவும், விசுவாசமான தேசபக்தராகவும் விளங் கியவர்.



**நிதிஷ் குமார் (பீகார் முதல்வர்)**

மகாராஷ்டிராவின் மிகச் சிறந்த அரசியல் தலைவராக திகழ்ந்தவர் பால் தாக்கரே. அவரது இழப்பு ஈடு செய்ய முடியாதது.

**மம்தா பானர்ஜி (மேற்கு வங்க முதல்வர்)**

நீண்ட காலமாக, மகாராஷ்டிரா அரசியலில் ஆதிக்கம் செலுத்தியவர் பால் தாக்கரே. அவரின் மறைவுக்கு, என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பிரித்விராஜ் சவான் (மகாராஷ்டிரா முதல்வர்)**

அரசியல்வாதி, கார்ட்டூனிஸ்ட், ஓவியர், பேச்சாளர் என பன்முக திறமை உடையவர், பால் தாக்கரே. அவரது மறைவு, மகாராஷ்டிராவுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பை ஏற்படுத்தி விட்டது.

**நரேந்திர மோடி (குஜராத் முதல்வர்)**

மிகச் சிறந்த தேசபக்தர். அவரது மறைவால், அரசியலுக்கு பெரியளவில் இழப்பு ஏற்பட்டுள்ளது. இவர்கள் தவிர, காங்., தலைவர் சோனியா, ராஷ்டிரிய ஜனதாத் தள தலைவர் லாலு பிரசாத் யாதவ் மற்றும் பாலிவூட் பிரபலங்களும், தாக்கரே மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கனில் குண்டுவெடிப்பு

## 17 பேர் சாவு; 14 பேர் படுகாயம்




காபூல், நவ.19

ஆப்கானிஸ்தானில் வீதியோரம் புதைக்கப்பட்டிருந்த குண்டுகள் வெடித்ததில் 17 பேர் உயிரிழந்தனர். 14 பேர் படுகாயமடைந்தனர். மேற்கு ஆப்கனில், பரா மாகாணத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

திருமண நிகழ்வு ஒன்றுக்குச் சென்றுகொண்டிருந்த பஸ் ஒன்றே இந்தக் குண்டு வெடிப்பில் சிக்கியது. பஸ்ஸில் பயணித்த 17 பேர் உயிரிழந்தனர். 14 பேர் படுகாயமடைந்துள்ளனர். உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் பெண்கள் மற்றும் குழந்தைகள். இந்தத் தாக்குதலுக்கு எவரும் உரிமைகோரவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

# தரைவழித் தாக்குதலுக்கு தயாராகின்றது இஸ்ரேல்

## எல்லைகளில் 75 ஆயிரம் படைகள்



டெல்அபிவ், நவ.19

பலஸ்தீனம் மீது தரைவழித் தாக்குதல் நடத்த இஸ்ரேல் தயாராகி வருகிறது. காஸா எல்லையில் 75 ஆயிரம் ராணுவ வீரர்களைக் குவிக்க இஸ்ரேல் அமைச்சரவை ஒப்புதல் வழங்கி உள்ளது.

இஸ்ரேலுக்கும், பலஸ்தீனத்தைச் சேர்ந்த ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையே காஸா பகுதியில் கடும் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. கடந்த புதன்கிழமை முதல் நடைபெற்று வரும் மோதலில் 38 பாலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளனர். 345 இக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். 3 இஸ்ரேலியர்கள் உயிரிழந்துள்ளனர்.


இந்தநிலையில் ஹமாஸ் அமைப்பு, இஸ்ரேலின் டெல் அவிவ் மற்றும் ஜெருசலேம் நகரங்கள் மீது மூன்றாவது நாளாக வெள்ளிக்கிழமையும் தொடர்ந்து தாக்குதல் நடத்தியது. இதையடுத்து காஸாவை ஒட்டிய சாலைகளுக்கு இஸ்ரேல் ராணுவம் தடைசெய்துள்ளது.

''கடந்த வெள்ளிக்கிழமை பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு, பாதுகாப்பு அமைச்சர் இஹுத் பராக் உள்பட அமைச்சர்களுடன் தொலைபேசியில் கலந்துரையாடினார். இதன்போது பாலஸ்தீனம் மீது தரைவழித் தாக்குதல் நடத்துவது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. பாலஸ்தீனம் மீது தாக்குதல் நடத்துவதற்கு ஏதுவாக காஸா எல்லைப் பகுதியில் 75 ஆயிரம் ராணுவ வீரர்களைக் குவிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. முன்னதாக தொலைபேசி மூலம் அமைச்சர்களிடம் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு இந்த முடிவு எடுக்கப்பட்டது'' என்று இஸ்ரேலிய அமைச்சரவை செயலாளர் ஹாசர் தெரிவித்தார்.

இதேவேளை, காஸா பிரதமர் இஸ்மாயில் ஹனியாவின் அலுவலகம் உள்ளிட்ட ஹமாஸ் தலைமைச் செயலகம் மீது இஸ்ரேஸ் இராணுவம் நேற்றுமுன்தினம் காலையில் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில் கட்டடம் இடிந்து தரைமட்டமானது என்று ஹமாஸ் தெரிவித்துள்ளது. வடக்கு காஸா பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் ஜபலியா அகதிகள் முகாமைச் சேர்ந்த 8 பேர் உயிரிழந்தனர் என்றும் 35 பேர் காயமடைந்தனர் என்றும் ஹமாஸ் மேலும் தெரிவித்துள்ளது.

### பி.பி.ஸி. செய்தியாளரின் குழந்தை சாவு

இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் காஸாவைச் சேர்ந்த பி.பி.ஸி செய்தியாளர் ஜிஹாத் மிஷரவியின் 11 மாதக் குழந்தையும், அவரது சகோதரரின் மனைவியும் உயிரிழந்துள்ளனர். இந்தத் தகவலை டுவிட்டர் இணையதளத்தில் பி.பி.ஸி அதிகாரி பால் தனஹர் வெளியிட்டுள்ளார்.



காஸா நகரில் இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் தனது 11 மாதக் குழந்தையை இழந்து கதறியழும் ஜிஹாத் மிஷரவி.

# வயிற்றுக்குள் வைரக் கற்கள்: சிக்கினார் கடத்திய இளைஞர்

லெபனானைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் வைரக்கற்களை விழுங்கி கடத்த முயன்றுள்ளார். இந்தச் சம்பவம் தென்னாபிரிக்காவில் நடைபெற்றுள்ளது.

தென்னாபிரிக்காவில் உள்ள ஜோகன்ஸ் பெர்க் விமான நிலையத்தில் இருந்து துபாய் செல்ல இருந்த பயணிகளை அதிகாரிகள் சோதனையிட்டனர். அப்போது லெபனான் நாட்டைச் சேர்ந்த 25 வயது வாலிபரின் வயிற்றுக்குள் 220 வைரக்கற்கள் இருப்பது தெரியவந்தது. இதனையடுத்து அவரை அதிகாரிகள் கைது செய்து விசாரித்தனர். அப்போது அவர் வைரங்களை விழுங்கி கடத்த முயன்றதும் தெரியவந்தது. ரூ.36 கோடி ரூபா மதிப்புள்ள வைரக்கற்களை இவரிடமிருந்து அதிகாரிகள் மீட்டுவிட்டார்கள்.

## பலஸ்தீனம் மீதான

# தாக்குதலை நிறுத்தக்கோரி இஸ்ரேலில் ஆர்ப்பட்டம்




பலஸ்தீனம் மீதான இராணுவ தாக்குதலுக்கு இஸ்ரேலிய மக்களே எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் களமிறங்கியுள்ளனர்.

காஸா பகுதியில் இஸ்ரேல் இராணுவம் நடத்தும் தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து 200இக்கும் மேற்பட்ட இஸ்ரேல் நாட்டு மக்கள் தலைநகர் டெல் அவிவில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காஸா மீது இஸ்ரேல் நடத்தும் தாக்குதலை நிறுத்த வலியுறுத்தி பதாகைகளை ஏந்தி அமைதியான முறையில் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

கடந்த 4 நாள்களாக நடைபெற்ற தாக்குதலில் 30 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். இதில் 8 குழந்தைகளும் ஒரு கர்ப்பிணிப் பெண்ணும் அடங்குவர்.

இஸ்ரேலின் தாக்குதலுக்கு அமெரிக்கா, இஸ்லாமிய நாடுகளிடம் இருந்து எதிர்ப்பு வலுபெற்றுள்ள நிலையில் தற்போது இஸ்ரேல் மக்களும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

# புதிய சீன ஜனாதிபதி இராணுவத் தலைமை தளபதியாக ஏற்பு



சீன கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய பொதுச் செயலாளராக ஜின்பிங் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் அவர் சீனாவின் இராணுவத் தலைமைத் தளபதியாக முறைப்படி பொறுப்பேற்றார்.

இராணுவத்திற்கு கட்டளையிடும் அதிக அதிகாரம் படைத்த 11 பேர் கொண்ட குழுவுக்கு இவர் தலைமையேற்று நடத்துவார். 23 லட்சம் பேரைக் கொண்ட சீன இராணுவத்துக்கு கட்டளையிடும் அதிகாரம் படைத்த இந்தக் குழுவில் அதிபர் ஜின்பிங் மட்டுமே பொதுமகனாவார். மற்றைய 10 பேரும் இராணுவத்தின் முப்படையில் பணியாற்றும் அதிகாரிகள் ஆவர்.

# சேர்பியர் படுகொலை: குரேஷிய ஜெனரல் விடுதலை



முன்னாள் யூகோஸ்லாவியாவில் இடம்பெற்ற மோதல்களில் போர்க் குற்றம் புரிந்ததான குற்றச்சாட்டுக்களில் இருந்து முன்னாள் குரேஷிய ஜெனரலான அண்டே கொடோவினா என்பவரை தி ஹேக்கில் உள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் விடுவித்துள்ளது.

கொடோவினா மீது கடந்த ஆண்டு, நூற்றுக்கணக்கான சேர்பியர்களை கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

அவருக்கு விதிக்கப்பட்ட 24 வருட சிறைத்தண்டனை நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டபோது, நீதிமன்றத்தில் பெரும் ஆரவாரம் காணப்பட்டது.

தான் எந்தச் சந்தர்ப்பத்திலும் பொதுமக்களை வேண்டுமென்றே தாக்கவில்லை என்று கொடோவினா தனது விசாரணையின் போது கூறியிருந்தார்.

# சிறார்களின் பஸ்ஸை பந்தாடியது ரயில்

## 47 குழந்தைகள் உடல் சிதறிச் சாவு
## எகிப்தில் பயங்கரம்; அமைச்சர் ராஜினாமா




பாடசாலைக் குழந்தைகள் சென்ற பஸ்மீது ரயில் மோதியதில் 47 குழந்தைகள் உயிரிழந்தனர். இந்தக் கோர விபத்து எகிப்தில் இடம்பெற்றது.

எகிப்து, கெய்ரோவில் இருந்து சுமார் 350 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது அல் மந்தாரா கிராமம். நேற்றுமுன்தினம் காலை அங்குள்ள ரயில் கடவை ஒன்றைக் கடக்க முயன்றது பாடசாலைக் குழந்தைகளை ஏற்றிய பஸ். அப்போது வேகமாக வந்த ரயில் பஸ் மீது மோதியது. மோதிய ரயில் பஸ்ஸை நீண்ட தூரம் இழுத்துச் சென்றதாக விபத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இந்தக் கோர விபத்தில் 47 குழந்தைகள் பரிதாபமாக இறந்தனர். 13 குழந்தைகள் பலத்த காயம் அடைந்தனர்.

விபத்து நடத்த இடம் எங்கும் குழந்தைகளின் உடற்பாகங்கள், பாடசாலைப் புத்தகங்கள், சிறுவர்களின் புத்தகப் பை என்பன சிதறுண்டு இருந்தன. குழந்தைகளின் பெற்றோர் தமது குழந்தைகளை அடையாளம் காண முடியாது கதறி அழுதனர்.

இந்தக் குழந்தைகள் அனைவரும் 4 வயது முதல் 6 வயது வரை உள்ளவர்கள். மதப் பாடசாலையில் படித்து வரும் இவர்கள் அனைவரும் பாடசாலைக்குச் சென்ற போதே விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் இறந்த மற்றும் காயமடைந்த குழந்தைகளின் குடும்பத்தினருக்கு தேவையான உதவிகளை உடனடியாக செய்யும்படி எகிப்து ஜனாதிபதி முகமது முர்சி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

விபத்திற்கு பொறுப்பேற்றுள்ள எகிப்தின் போக்குவரத்துத்துறை அமைச்சர் ரஷாத் அல்-மெடினி பதவி விலகியுள்ளார். ரயில்துறைத் தலைவர் முஸ்தபா கெனாவியும் பதவி விலகினார்.

# எண்ணெய் மேடையில் பெரும் தீ விபத்து



மெக்ஸிகோ வளைகுடாவில் நேற்றுமுன்தினம் எண்ணெய் மேடை ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இதில் அங்கு பணியாற்றிக்கொண்டிருந்த இரண்டு தொழிலாளர்கள் காணாமற் போயுள்ளனர். நான்கு பேர் காயமடைந்தனர்.

காணாமற்போனவர்களைத் தேடும் முயற்சி தொடர்ந்து இரவு பகலாக நடைபெற்றுவருகிறது.

இதுகுறித்து கடலோரக் காவற்படையின் தலைமை அதிகாரி தெரிவிக்கையில்,

''காணாமற் போனவர்களைத் தேடும் பணியில் கடலோரக் காவற்படையினர் ஈடுபட்டுள்ளனர். இதுவரை எந்த முன்னேற்றமும் இல்லை.'' என்று தெரிவித்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரிட்டன் வந்திருந்த சிலி நாட்டு பிரதமர் செபஸ்டியான் பெனிரா, பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனை அவரது இல்லத்தில் சந்தித்தார்.

# விமானப்படை பெண்களை துன்புறுத்திய அதிகாரிகள்

## அமெரிக்கப் பயிற்சித் தளத்தில்

அமெரிக்க விமானப் படையில் புதிதாக இணைந்த பெண்கள், அதிகாரிகளால் பாலியல்ரீதியாக துன்புறுத்தப்பட்டுள்ளனர். சுமார் 50 வரையான பெண்கள் இவ்வாறு துன்புறுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் லேக்லாண்ட் என்ற இடத்தில் விமானப் படை பயிற்சித் தளம் உள்ளது.

விமானப் படைகளுக்கு புதிதாகத் தெரிவானோருக்கு இங்கு பயிற்சி அளிக்கப்படும். இவ்வாறு பயிற்சிக்கு வந்த பெண்களிடம், பயிற்சி கொடுக்கும் அதிகாரிகள் தவறாக நடந்து கொள்வதாக முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்த முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்டன. இந்த விசாரணைகளில் அதிகாரி ஒருவர் 35 பெண்களை பாலியல் ரீதியாக துன்புறுத்தியது தெரியவந்துள்ளது. இதனையடுத்து பயிற்சிப் பிரிவின் தலைவர் பணி நீக்கம் செய்யப்பட்டார்.

இது குறித்து பயிற்சிக் பிரிவின் தளபதி தெரிவித்ததாவது;

''விமானப் படையில் பாலியல் வன்முறைகளை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. பயிற்சிக்கு வந்த பெண்களைப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்திய அதிகாரிகள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். பல பெண்களை பாலியல் ரீதியாகத் துன்புறுத்திய லூயிஸ் வோக்கர் என்பவருக்கு 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது'' என்று தெரிவித்தார்.

# சிரிய விமானத் தளத்தை கைப்பற்றியது புரட்சிப்படை



சிரிய விமானத்தளம் ஒன்றை அரச எதிர்ப்புப்படை கைப்பற்றியுள்ளது.

சிரியாவின் கிழக்கு பகுதியில் ஈராக் எல்லையோரம் அமைந்துள்ள அல்பு கமல் என்னும் இடத்தில் உள்ள ஹாம்தான் என்னும் விமானத்தளத்தையே தாம் கைப்பற்றியதாக அரச எதிர்ப்புப் படை தெரிவித்தது.

''அரச படைகளுடன் நடைபெற்ற கடும் மோதலில், அசாத்தின் ஆதரவுப் படைகளை விரட்டியடித்து அந்தப் பகுதியின் பெரும்பான்மையான இடங்களை நாம் கைப்பற்றியுள்ளோம்'' என்று புரட்சிப் படையினர் தெரிவித்துள்ளனர்.

சிரியாவில் கடந்த 22 மாதங்களாக நடந்து வரும் உள்நாட்டு போரில் ஏராளமான அப்பாவி மக்கள் உயிரிழந்துள்ளனர்.

சிரியாவில் நடைபெறும் உள்நாட்டுபோரில் இது வரையிலும் 38,000 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று மனித உரிமை அமைப்புகள் தெரி விக்கின்றன.

# தண்டனையைக் குறைக்க 6 கோடி ரூபா வேண்டும்

## சவூதி அரசு நிபந்தனை



குற்றவாளி ஒருவரின் மரண தண்டனையை நிறுத்துவதற்கு 6 கோடி ரூபா அளிக்க வேண்டும். இவ்வாறு சவூதி அரசு நிபந்தனை விதித்துள்ளது.

பிலிப்பைன்ஸ் நாட்டை சேர்ந்தவர் ஜோஸலிட்டோ சபன்டா. இவர் 2009ஆம் ஆண்டு ஒருவரைக் கொலை செய்துள்ளார். இதையடுத்து சபன்டா கைது செய்யப்பட்டார். விசாரணைகளின் பின் அவரின் தலையைத் துண்டித்து தண்டனையை நிறைவேற்றுமாறு சவூதி நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இந்த நிலையில் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பெனிக்கோ அகினோவின், சபன்டாவின் தண்டனையைக் குறைக்குமாறு கோரியிருந்தார்.

சபன்டாவின் தண்டனையைக் குறைப்பதற்கு, கொலை செய்யப்பட்டவரின் குடும்பத்துக்கு ரூபா 6 கோடி வழங்க வேண்டும் என்று சவூதி அரசு நிபந்தனை விதித்துள்ளது.

# கொங்கோ போராளிகள் மீது ஐ.நா. படையினர் தாக்குதல்



கொங்கோவில் கடந்த ஒரு மாதமாக போராளிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையே மோதல்கள் அதி கரித்துள்ளன. கடந்த 15ஆம் திகதி வடக்கு கிவு மாகா ணத்தில் நடந்த மோதலில் 113 போராளிகள் கொல்லப்பட்டனர். கொங்கோ தலைநகர் கோமாவில் இருந்து 30 கி.மீற்றர் தொலைவில் உள்ள ருகாரி என்ற இடத்தில் நேற்று போராளிகளுக்கும், இராணுவத்துக்கும் இடையே வெடித்த நேரடி மோதலில் 151 போராளிகள் கொல்லப்பட்டனர். இதில் 7 இராணுவ உயர்அதிகாரிகள் உயிரிழந்தனர்.

இந்தநிலையில் நேற்றுக் காலை கிரும்பா என்ற இடத்தில் உள்ள போராளிகள் முகாம் மீது ஐ.நா. படையினர் ஹெலிகொப்டர் மூலம் தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதல் குறித்து அந்த மாநில ஆளுநர் கூறுகையில்,

''ருவாண்டா இராணுவத்தின் ஆதரவு பெற்ற 3 ஆயிரத்து 500 எம்.23 போராளிகள் நேற்று அதிகாலை இராணுவத்தளம் மீது தாக்குதல் நடத்தினர். இதற்கு பதிலடியாகவே ஐ.நா. படையினரின் ஹெலிகொப்டர்கள் போராளிகள் முகாம் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்'' என்றார்.

எம்.23 போராளிக் குழுவை உகண்டாவும், ருவாண்டாவும் ஆதரித்து வருகின்றன என்று ஐக்கிய நாடுகள் சபை குற்றம் சாட்டி வருகின்றது.

## நெஞ்சைவிட்டு நீங்கா... 17 ஆம் ஆண்டு நினைவுகளுடன்



மண் மகிழ 09.08.1972

மனம் நெகிழ 29.10.1995

அமரர் **வீரகத்தி ஜெயறூபன் (றூபன்)**

அன்பும் பாசமும் நிறைந்த
அரும்பெரும் பொக்கிஷமே! உன்
கனிவான பேச்சிற்கும் கருணை நிறைந்த உள்ளத்திற்கும்
எறும்புபோல் உன் சுறுசுறுப்பான உழைப்பிற்கும்
ஈடு இணை ஏது இவ் உலகினிலே..... நீ
எங்கு சென்று விட்டாய்? நாம் ஏங்கி நிற்கின்றோம்
கடுகதியாய் மறைந்தனையோ! உன்
உறவுகளை ஒரு கணம் சிந்தித்தாயா! உன்
பசுமையான நினைவுகளை நாம்
சுமந்து நிற்கின்றோம்.

சிவன் கோயில் வீதி,
எழுதுமட்டுவாழ்.

குடும்பத்தினர்.

(சி/2823)(45.6.7)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வி **மகேந்திரன் கௌரி**



அன்னை மடியில் 02.08.1989

ஆண்டவன் அடியில் 19. 11. 2008

நவின்றெடுத்த நறுமலரே!
நாலாண்டுகள் சென்றும்
சிந்தித்து நிற்கின்றது - உன்
நினைவலைகள்
கண்ணினிய சிரிப்பும்
கங்குல் விழும் பேச்சும்
கண்ணீர் சொரிய வைக்கிறது
உன்னினிய முகம் தேடும் போது....

கொடுக்குளாய் வீதி,
உடுத்துறை வடக்கு,
தாளையடி.

குடும்பத்தினர்
தாய், தந்தை, சகோதரிகள்
மைத்துனர், பெறாமகன்.

(25503)(45.6.7)


## மலிவு விற்பனை

நல்லின தென்னங்கன்றுகள்,
கொழும்பு வெற்றிலைக்
கன்றுகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு :
மீருஜா மல்ரி பாம் சென்ரர்
ரெயில்வே லேன், கச்சாய் வீதி,
சாவகச்சேரி.
தொ.பே.: 077 529 2141

(21696)(5-6-7)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி மகிழினி ஜெயராஜா
அவர்களின் பாசமிகு தாயார்
திருமதி **தவமணி வைரவப்பிள்ளை**
அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு
ஆழ்ந்த கவலையடைகின்றோம்.
அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு, அவரின் குடும்பத்தாரின்
துயரிலும் பங்கு கொள்கின்றோம்.
பாடசாலை சமூகம்
கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி.

(26487)(5-6-7)

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 03.03.1945

மறைவு 07.12.2005

திதி:- 19.11.2012

**மாணிக்கம் சின்னராசா**

ஏற்றமுடன் எம்மை வாழ வைத்து
அவையத்து முந்தி இருக்கச்செய்த - தந்தையே!
ஆண்டுகள் ஏழு ஆனபோதும்
ஆறவில்லை எம் துயரம்
தங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

திரவிய பவனம்
மனோகரா, அல்வாய்


குடும்பத்தினர்.

(25340)(45.6.7)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 26.01.1946

மறைவு 30.11.2011



திருமதி **ரஞ்சிதாதேவி அருள்**

திதி : சஷ்டி

ஈரைந்து மாதங்கள் எம்மைச் சுமந்து
பெற்றெடுத்த தாயே நாங்கள் உறங்கும் போது
எங்களைத் தாலாட்டினீர்கள்
இன்று நீங்கள் உறங்குகின்றீர்கள் உங்களைத் தாலாட்ட
வரிகளைத் தேடுகின்றோம்
எங்கும் கிடைக்கவில்லை எங்கள் கண்ணீரால்
உங்களைத் தாலாட்டுகின்றோம்
ஓராண்டு என்ன எத்தனை ஆண்டுகள் சென்றாலும் - எங்கள்
கண்ணீர் தான் உங்களுக்கு பாத காணிக்கை

விளையாட்டரங்க வீதி, கல்வியங்காடு.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் கவர்வதற்கு அற்புத வழிகள்

(33)



உங்கள் நிறுவனத்தில் உற்பத்தியாகும் ரீசேட்டுக்களை அதிக அளவில் விற்க எனக்குச் சில வழிகள் தெரியும்'' என்று சொல்லியிருக்க வேண்டும். உனக்கு வேலை கிடைத்திருக்கும்.

சுரேந்தர் சிந்தனை செய்தான். அவன் நண்பன் ஆனந்தன் எந்த அளவுக்கு புத்திசாலி? அவன் மனதில் தோன்றியது நமக்கு ஏன் தோன்றவில்லை என்று எண்ணி வெட்கப் பட்டான்.

ஒரு வாரம் கழித்து அவன் வேறு ஒரு ரீசேட் தயாரிக்கும் நிறுவனத்துக்குப் போனான். மனேஜரைப் பார்த்து ரீசேட்டுக்களுக்கு ஏற்பட்டிருக்கும் மவுசுகளைப் பற்றிச் சொல்லி விட்டு, 'என்னால் நிறைய விற்றுக் காட்ட முடியும். வேண்டுமானால் ஒரு மாதம் எனக்கு வேலை கொடுத்துப் பாருங்கள்' என்றான். மனேஜர் உடனே அவனுக்குச் சேல்ஸ்மேன் வேலை கொடுத்தார். பொதுவாக, ஏதாவது ஒரு வேலை வேண்டும் என்று கேட்பவர்கள் பெரும்பாலும் தோல்வியை அடைவார்கள்.

வேலை கிடைத்தால் போதும், மாதா மாதம் சம்பளம் வாங்க வேண்டும். பத்திரிகைகள் படிக்க வேண்டும். சினிமாவுக்குப் போக வேண்டும். ஹொட்டலுக்குப் போக வேண்டும். வேறு ஒன்றும் வேலை இல்லை. இப்படி நினைப்பவர்கள் தமது வேலையைப் பெரிதாக நினைப்பதில்லை.

அலுவலகங்களிலும் சரி, தொழிற்சாலைகளிலும் சரி, பத்துப் பேர்களில் ஒன்பது பேர்கள் சரியாக வேலை செய்வதில்லை. எப்படியோ நிறுவனங்களோ வங்கிகளோ இலாபம் சம்பாதிக்கின்றன. நமக்கு சம்பளம் வருகிறது. ஆனால் போதவில்லை. சம்பள உயர்வு மிகவும் குறைவு. போனஸ் போதவில்லை. தொழிலாளர் பிரச்சினைகள் அதிகமாகி வருவதாகத் தொழிற்சங்கம் சொல்லி வேலை நிறுத்த நோட்டீஸ் கொடுத்திருக்கிறது. ஆகையால் நாம் ஏன் வேலை செய்ய வேண்டும் என்ற எண்ணம்.

இப்படிப்பட்ட எண்ணத்தினால் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் தொழிலாளர்கள், அல்லது ஊழியர்கள்.

எத்தனையோ நிறுவனங்கள் நஷ்டத்தினால் கவிழ்ந்து விட்டிருக்கின்றன. தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. இதனால் ஆயிரமாயிரம் குடும்பங்கள் பட்டினியில் தவித்திருக்கின்றன.

ஆக, நாம் எந்த வேலையில் இருந்தாலும் நாம் உண்மையாக உழைத்தால் தான் உயர முடியும். நிறுவன இலாபம் சம்பாதித்தால்தான் நமக்குச் சம்பளம் மட்டுமல்ல, சம்பள உயர்வும் போனசும் கிடைக்க வழியுண்டு என்ற எண்ணத்துடன் வேலை செய்ய வேண்டும்.

வெறும் பணத்துக்காக மட்டும் ஆசைப்படாமல், தான் செய்யும் வேலைக்கு மதிப்புக் கொடுத்து வேலை செய்பவர்களை மற்றவர்கள் பாராட்டுவார்கள். விரும்புவார்கள். மற்றவர்கள் தேடி வந்து இவர்களிடம் நட்புக் கொள்வார்கள்.

சொந்தத் தொழில் செய்பவர்கள் கூடத் தமது தொழிலைப் பற்றி என்றும் மட்டமாக நினைக்கக்கூடாது. ஒருவன் துடைப்பங்களை மட்டும் அவன் கடையில் அடுக்கி வைத்து விற்றுக் கொண்டிருந்தான். கடை முழுவதும் வகை வகையான துடைப்பங்கள் - வேறு எதுவும் அவன் கடையில் இல்லை.

அவன் நண்பன் ஒருவன் தற்செயலாக அவனைக் கடையில் பார்த்தான். 'இது என்ன வியாபாரம்? வெறும் துடைப்பங்களா? நம்ப முடியவில்லை. வேறு வியாபாரம் கிடைக்கவில்லையா?' கடைக்காரன் சிரித்தான்.

'துடைப்பங்களைப் பற்றி மட்டமாக நினைக்காதே. ஒவ்வொரு வீட்டையும் சுத்தமாக வைத்துக் கொள்ளத் துடைப்பம் தேவை. அலுவலகங்களையும், கடைகளையும் சுத்தம் செய்ய நம் நாட்டில் துடைப்பங்களையே பயன்படுத்துகிறார்கள். தெருக்களைக் கூட்டவும் துடைப்பங்களையே உபயோகிக்கிறார்கள். நாடு முழுவதும் ஒரு நாளைக்கு எத்தனைத் துடைப்பங்கள் தேவைப்படுகின்றன என்று கணக்கெடுத்துப் பார். என்னால் சப்ளை செய்ய முடியாது. என்னிடம் நிறையப் பேர் மொத்தமாக வந்து வாங்கிப் போகிறார்கள். நான் வசதியாக வாழ்கிறேன்' என்றான்.

நண்பனுக்கு வெட்கமாகி விட்டது. எதையும் நாம் மட்டமாக, தரக் குறைவாக, தாழ்வாக நினைக்கக்கூடாது.

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஜோன் கென்னடி ஒரு பெரும் பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவர். சம்பளம் வாங்காமல் ஜனாதிபதி வேலை பார்த்தவர். 40 வயதில் அமெரிக்க ஜனாதிபதி பதவியை ஏற்று சரித்திரம் படைத்தவர். அவர் என்ன சொன்னார் தெரியுமா? 'நான் ஒரு தோட்டியாக வேலை பார்த்தால்கூட சரி, மிகச் சிறந்த தோட்டி என்று பெயர் எடுப்பேன்' என்றாராம்.

ஜனாதிபதியாகப் பதவி ஏற்றதும், அவர் மிகச் சிறந்த ஜனாதிபதி, துடிப்பான ஜனாதிபதி என்று பெயர் எடுத்தார்.

(தொடரும்)

-தமிழ்வாணன்-

# பிள்ளைகளின் கல்வி முன்னேற்றமும் நல்வாழ்வும் பெற்றோரின் கைகளில்

## முன்பள்ளி பெற்றோர் தின விழாவில் உரை

அச்சுவேலி,நவ.19

''பிள்ளைகளின் எதிர்கால நல்வாழ்வும், கல்வி முன்னேற்றமும் பெற்றோரின் கைகளில் தங்கி இருக்கின்றது. இதனைக் கருத்தில் கொண்டு பெற்றோர் தமது பங்களிப்பை உரியமுறையில் பொறுப்புக் கூறுவதற்கு ஏற்ற வகையில் நிறைவுசெய்ய வேண்டும்.

குழந்தைகளின் எதிர்கால நல்வாழ்வுக்கான உறுதியான அடித்தளம் முன்பள்ளிப் பருவத்திலேயே இடப்பட்டு உரியமுறையில் கட்டி வளர்க்கப்பட வேண்டும்'' என்று அச்சுவேலி லங்கா மாதா மடத்தின் தலைவி அருட்சகோதரி தெரசில்டா தெரிவித்தார்.

அச்சுவேலி லங்கா மாதா மடம் குழந்தை யேசு முன்பள்ளியின் பெற்றோர்தின விழா அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு தலைமை உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

குழந்தைகள் மனமகிழ்வான சூழலில் உடல் ஆரோக்கியத்துடன் வளர்க்கப்பட வேண்டும். குழந்தைகளின் நல்வாழ்வும் கல்வி முன்னேற்றமும் பெற்றோரின் கைகளில் தங்கியுள்ளது. குழந்தைகள் நல்லவர் ஆவதும், தீயவர் ஆவதும் அன்னை வளர்ப்பினால் என்பதைத் திருத்தி பெற்றோரின் வளர்ப்பில் என்பதை தந்தையும் தாயும் கூட்டுப்பொறுப்புடன் உணர்ந்துகொள்ள வேண்டும்.

குடும்பத்தின் கூட்டுப்பொறுப்பும் முன்மாதிரியான வாழ்க்கை முறையும் பிள்ளைகளுக்கு வழிகாட்டியாக அமைவதோடு, மனமகிழ்ச்சியோடு வளர்வதற்கும் நேர்மையான வாழ்க்கை முறையைக் கற்றுக்கொள்வதற்கும் ஏதுவாக அமைகின்றது.

பிள்ளைகளின் உடல் ஆரோக்கியமும், உள ஆரோக்கியமும் உரிய முறையில் பேணப்பட வேண்டும். குழந்தைகள் பெரியவர்களை பின்பற்றியே, தமது நடத்தைக் கோலங்களை வடிவமைத்துக் கொள்வதால், பெரியவர்கள் குழந்தைகளுக்கு முன்மாதிரியாக வழிகாட்டியாக நடந்துகொள்ள வேண்டும்.

பிள்ளைகளின் எதிர்கால நல்வாழ்வுக்கு பொறுப்புக் கூறுவதற்கு ஏற்றவகையில் பெற்றோர் தமது முன்னெடுப்புக்களை மேற்கொள்ள வேண்டும். பாடசாலையில் சேர்த்து விட்டால் மட்டும் போதாது. நாளும் பொழுதும் பிள்ளைகளின் நடத்தைகளைக் கண்காணிப்பதோடு தேவையை அறிந்து உரியமுறையில் நிறைவு செய்ய வேண்டும். இந்த விடயத்தில் பெற்றோரின் காலதாமதமோ கருத்துநிலை மாற்றமோ பிள்ளைகளைக் குழப்பத்துக்கு உள்ளாக்கி திசைமாற்றிவிடும்.

குழந்தைகள் தெய்வத்துக்கு சமமானவர்கள். அவர்களின் இயல்பான செயற்பாடுகள் மகிழ்ச்சியைத் தரும். அவர்களின் செயற்பாடுகள் நேர்மையான வழிப்படுத்தல் மூலம் மேல்நிலைப்படுத்தப்பட வேண்டும்-என்றார். (எ-11)



அராலி குடும்ப முன்பள்ளியின் கண்காட்சியும், கலைவிழாவும் அராலி அ.மி.த.க.பாடசாலையில் நடைபெற்ற வேளை குடும்ப முன்பள்ளி மாணவர்கள் நிகழ்த்திய நடனக் காட்சி இது. (எ-50)

### கைதடி பொதுநூலகம் நடத்திய

# தேசிய வாசிப்பு மாத போட்டிகளின் முடிவுகள்

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி பொதுநூலகம் வாசகர் மத்தியில் போட்டிகளை நடத்தியுள்ளது. போட்டி முடிவுகள் வெளிவந்துள்ளன.

**பொது அறிவு நுண்ணறிவுப் பரீட்சை க.பொ.த (சா/த)**

1 ஆம் இடம்-க.லக்சுதன் (கைதடி விக்னேஸ்வரா), 2 ஆம் இடம்-செ.ருபிந்தன் (கைதடி விக்னேஸ்வரா), 3 ஆம் இடம்- எஸ்.லவண்ராஜ் (கைதடி விக்னேஸ்வரா).

**பொது அறிவு நுண்ணறிவுப் பரீட்சை க.பொ.த (உ/த)**

1 ஆம் இடம்-ச.விக்னேஸ்வரன் (கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி.), 2 ஆம் இடம்-ப.தர்சானியா (கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி.), 3 ஆம் இடம்-ஜெ.நித்தியா (கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி.), சே.டீலக்சி (கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி.).

**கிரகித்தல் பயிற்சி ஆரம்பப் பிரிவு**

1 ஆம் இடம்-சு.சங்கீர்த்தனன் (கைதடி கலைவாணி வித்தி.), 2 ஆம் இடம்-த.கபிலசா (கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி.), 3 ஆம் இடம்-செ.ஜதுர்சன் (கைதடி விக்னேஸ்வரா), வ.அபிநந்தா (கைதடி குருசாமி வித்தி.), அ.தமிழ்த்தூஸ் (கைதடி கலைவாணி வித்தி.)

**கட்டுரைப் போட்டி தரம் 6,7**

1 ஆம் இடம்-க.தனுசா (கைதடி விக்னேஸ்வரா), 2 ஆம் இடம்-அ.லகுலன்(கைதடி விக்னேஸ்வரா), 3 ஆம் இடம்-மோ.கயலினி (கைதடி குருசாமி வித்தி.).

**கட்டுரைப் போட்டி தரம் 8,9**

1 ஆம் இடம்-அ.பிரியந்தினி (கைதடி முத்துக்குமாரசுவாமி மவி), 2 ஆம் இடம்-சி.வினித்தா(கைதடி விக்னேஸ்வரா), 3 ஆம் இடம்-ம.சர்மினி (கைதடி குருசாமி வித்தி.).

**கட்டுரைப் போட்டி தரம் 10,11**

1 ஆம் இடம்-ஆர்.அஜந்தா (கைதடி விக்னேஸ்வரா), 2 ஆம் இடம்-ப.பவித்திரா(கைதடி குருசாமி வித்தி.), 3 ஆம் இடம்-செ.ருபிந்தன் (கைதடி விக்னேஸ்வரா).

**முன்பள்ளி மாணவர்களுக்கான கதை சொல்லல் போட்டி**

1 ஆம் இடம்-ரிசாந்தன் மதுசன் (கைதடி மேற்கு சரஸ்வதி முன்பள்ளி), 2 ஆம் இடம்-சத்தியசீலன் இசையாளன் (கைதடி மேற்கு சரஸ்வதி முன்பள்ளி), 3 ஆம் இடம்-சுதாகரன் மகிழ்நிலா (கைதடி விநாயகர் முன்பள்ளி), 4 ஆம் இடம்-செல்வரத்தினம் பானுஜா (கைதடி விநாயகர் முன்பள்ளி), 5ஆம் இடம்-காந்தசீலன் கார்த்திகன் (கைதடி மேற்கு சரஸ்வதி முன்பள்ளி). (எ)

## போட்டி முடிவுகள்

தென்மராட்சி, நவ.19

சாவகச்சேரி நகர சபையினரால் உள்ளூராட்சி வாரத்தையொட்டி நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளின் முடிவுகள் கடந்த திங்கட்கிழமை வெளியிடப்பட்டன.

சிறந்த ச.ச.நிலையம் மீசாலை வீனஸ் சனசமூக நிலையம், சிறந்த பொது நூலகம்- நுணாவில் பொது நூலகம், சிறந்த குளிர்பான நிலையம்-சாவகச்சேரி வீனஸ்பார், சிறந்த வெதுப்பகம்- சாவகச்சேரி ஸ்ரீ ஐங்கரன் வெதுப்பகம், சிறந்த தேநீர் அகம்- சங்கத்தானை மோகன் தேநீரகம், சிறந்த உணவகம்- சாவகச்சேரி உதயா உணவகம். (எ-9)

## உள்ளூராட்சி வார இறுதி நாள் நிகழ்வு

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வேலணைப் பிரதேச சபையின் இறுதி நாள் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு வேலணை தேவா அரங்கில் நடைபெறவுள்ளது.

வேலணைப் பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பா.ஜெயகரன் பிரதம விருந்தினராகவும் வேலணைப் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளா தேவி சதீஸன், தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஐ.யோன் குயின்ரஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா விதி, முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' -மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' - மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# வாய் பிளந்து காத்திருக்கும் மரணப் பள்ளங்கள்

குடாநாட்டு வீதிகள் முழுவதையும் அகலித்து, அவற்றை 'காப்பெற்' வீதிகளாக மாற்றும் பணிகள் பரவலாக நடைபெற்று வருகின்றன. ஆனால் இவ்வாறு அகலிப்புக்குள்ளாகும் வீதிகளை எல்லாம் ஒரே நேரத்தில் பிரித்து, மேய்ந்து நடைபெறும் பணிகளால் பயணிகளுக்கே பாதிப்பு.

முன்னரெல்லாம் ஒரு வீதி புனரமைக்கப்படும்போது, அதனூடான போக்குவரத்து நிறுத்தப்பட்டு, மாற்றுப்பாதையூடாகவே பயணங்கள் நிகழும். இந்த ஏற்பாட்டால் புனரமைப்புப் பணியில் ஈடுபடுவோர் எந்தவித தொந்தரவுமின்றி முழுவீச்சில் தமது வேலையைத் தொடரமுடிந்தது. அத்தோடு பயணிகளும் மாற்றுப்பாதையூடாக சிரமங்களின்றி போக்குவரத்தை வேண்டிய நேரத்தில் மேற்கொள்ள முடிந்தது. ஆனால் இந்த முறை எல்லா வீதிகளும் ஒரே நேரத்தில் புனரமைக்கப்படுவதால் எந்த வீதியை மாற்றுப்பாதையாகப் பயன்படுத்துவது என்று பயணிகளுக்கும் தெரியவில்லை: பணிகளை மேற்கொள்வோர்க்கும் புரியவில்லை.

மாற்றுப்பாதை இல்லாத காரணத்தால் புனரமைப்புப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வீதியூடாகவே பயணங்களும் தொடர்ந்துகொண்டிருந்தன. எந்தநேரமும் சறுக்கி விழுத்தக் காத்திருக்கும் கருங்கல், வீதி நெடுகப் பரவப்பட்டிருக்கும். எதிரே வரும் வாகனங்களைக்கூடக் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு தூசு மண்டலத்தை எழுப்பும் கிரவல் மண் வீதியின் இரு மருங்கிலும் கொட்டப்பட்டிருக்கும். அத்தோடு தாறுமாறாக பெக்கோ, ஹன்டர் வாகனங்கள் அலைந்து திரிந்துகொண்டிருக்கும். இவற்றையெல்லாம் தாண்டித்தான் பயணித்தாக வேண்டும்.

இந்த புனரமைப்பின்போது சில இடங்களில் வீதிகளில் ஏற்கனவே இருந்த மதகுகள் பிரிக்கப்பட்டு, அவையும் அகலமாகவும் புதிதாகவும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் மதகுகள் இருந்த இடத்தில் பள்ளங்களைத் தோண்டிய ஒப்பந்தக்காரர்கள், அதை நிர்மாணிக்க மறந்துவிடுகிறார்கள். கட்டட வேலை செய்பவர்களிடம் ஒரு பழக்கமுண்டு. புதிதாக ஒரு வீடு கட்டுவதற்கு அத்திபாரம் போடுவார்கள். திடீரென அந்த வீட்டுப்பணிகளை அரைகுறையில் விட்டுவிட்டு, இன்னொரு வீட்டுக்கான அத்திபாரத்தைப் போடக் கிளம்பிவிடுவார்கள். பின்னர் அங்கு பாதி, இங்கு பாதியாக மாறிமாறி வேலையைத் தொடருவார்கள். இத்தகைய மனோநிலையே வீதி ஒப்பந்தக்காரர்களிடமும் வியாபித்திருக்கிறது. அதனால் மாதக் கணக்கில் வீதிகள் வாய்பிளந்து கிடக்கின்றன.

மதகுக்கான அடித்தளம் இடப்பட்டு, அவற்றின்மீது நீட்டிக் கொண்டிருக்கும் கம்பிகளோடு காட்சியளிக்கும் இந்தப் பள்ளங்களில் மழை வெள்ளமும் தாராளமாகத் தேங்கிநிற்கிறது. [ஆனால் இவ்வாறு யாழ்ப்பாணத்து வீதிகளெங்கும் தோண்டப்பட்ட பள்ளங்களில் மழை வெள்ளம் தேங்கிநிற்பது பற்றியோ, அதனால் டெங்கு முதலான நோய்கள் பரவும் அபாயம் பற்றியோ பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் கவனத்தில் கொண்டதாகவும் தெரியவில்லை.]

குறுக்காக வெட்டப்பட்டிருக்கும் இந்த வீதிகளூடாகவே பயணங்களும் நிகழ்வதால் குறித்த இடங்கள் ஆபத்தானவை என்று அடையாளப்படுத்தவேண்டியது புனரமைப்பில் ஈடுபடும் ஒப்பந்தக்காரர்களின் கட்டாய கடமை. ஆனால் அவ்வாறு செய்வதில் அசமந்தமே தொடர்கிறது. மஞ்சள், கறுப்பு நிறங்களாலான நீண்ட 'பிளாஸ்ரிக் ரேப்பை' சாட்டுக்கு இழுத்துக்கட்டிவிட்டு தமது கடமை முடிந்ததென்று எண்ணிவிடுகிறார்கள். பகல் வேளையில் ஓரளவுக்காவது இந்த மஞ்சள், கறுப்புப் பட்டியைப் பார்த்து பொதுமக்கள் பாதுகாப்பாகப் பயணிக்க முடியும். இரவு வேளையில் இது சாத்தியமன்று. அதனால் புதிதாக அந்த வீதியூடாக பயணிப்பவர்கள் பள்ளத்துக்குள் வீழவேண்டிய அபாயம் உண்டு. எனவே ஆபத்தைக் குறிக்கும் வகையில் அந்த இடம் வெளிச்சமூட்டப்பட்டிருக்க வேண்டும் அல்லது குறியீட்டு விளக்குகளாவது பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

அண்மையில் தெல்லிப்பழையிலும், நேற்றுமுன்தினம் வண்ணார் பண்ணையிலும் இவ்வாறு உரியமுறையில் வெளிச்சமூட்டப்படாத பள்ளங்களில் வீழ்ந்து இருவர் உயிரிழந்திருக்கிறார்கள். இதற்குரிய முழுப்பொறுப்பும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கும், புனரமைப்புப் பணியை மேற்கொண்டு வரும் ஒப்பந்தக்காரர்களையுமே சேரவேண்டியது. இவர்களின் அலட்சியத்தால் இரு உயிர்கள் பறிக்கப்பட்டுவிட்டன. இன்னமும் நிறைய இடங்களில் மரணப்பள்ளங்களாக மாறுவதற்குத் தயாராக வீதிகள் வாய்பிளந்தபடியே இருக்கின்றன. இனியாவது இந்த இடங்களை உரிய முறையில் சுற்றிவர பாதுகாப்பு வேலியிட்டு, வெளிச்சமூட்டி, அபாய விளக்கைப் பொருத்த ஒப்பந்தக்காரர்கள் முன்வரவேண்டும். இல்லாவிட்டால் இன்னும் இதுபோன்ற சாவுகள் தொடரவே செய்யும்.

# பிரதம நீதியரசர் மீதான விசாரணை ஐ.நா. விடுத்துள்ள அறிக்கை

*சண்டே ரைம்ஸ் அரசியல் கட்டுரையிலிருந்து*

**■ கோகுலன்**

**ஐ.நா. மனித உரிமை பேரவை உறுப்பு நாடுகள் மாற்றம். ரஷ்யா, சீனா, கியூபா அவுட். அமெரிக்கா மீண்டும் தெரிவு**

ஐக்கிய சுதந்திர மக்கள் முன்னணி அரசானது கடந்த வாரம் கடும் சவால்களை எதிர்நோக்கியிருந்தது. உள்நாட்டில் மட்டுமல்ல வெளிநாட்டிலும் நிலைமை அவ்வாறுதான் இருந்தது. கொழும்பில் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீதான குற்றப் பிரேரணை தொடர்பான அதிகார பூர்வ நடைமுறைகள் கடந்த புதன் கிழமை ஆரம்பமாகியிருந்தன.

அமைச்சர் அனுரபிரியதர்ஷன யாப்பா தலைமையிலான 11 பேர் அடங்கிய நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் முதல் கூட்டம், அன்றைய தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது. இக்குழுவின் செயற்பாடுகளை பத்திரிகைகளில் வெளியிடுவதை நிலையியற் குழு விதிகள் தடை செய்கின்றன.

குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக சபையில் தவிர வெளியில் எதுவும் விவாதிக்கப்படலாகாது என்று சபாநாயகர் சமல் ராஜபக்ஷ உறுப்பினர்களுக்கு எச்சரிக்கை விடுத்தார். ஊடகங்களும் நிலையியல் விதிகளைப் பின்பற்றும்படி அறிவுறுத்தப்பட்டன.

கடந்த புதன் கிழமை விசாரணை செயற்பாடுகள் ஆரம்பித்ததிலிருந்து ஒரு மாத காலத்தில் அதன் அறிக்கை சபாநாயகரிடம் வழங்கப்பட வேண்டும். இருந்தாலும் குழு விரும்பினால் மேலும் அவகாசம் வேண்டுமெனில் விண்ணப்பித்துக் கொள்ளமுடியும்.

அடுத்த நாள் வியாழக்கிழமை பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு குழுவிடமிருந்து வந்த கடிதத்தில் அவருக்கு எதிரான 14 குற்றச்சாட்டுகளுக்கும் ஏழு நாள்களுக்குள் பதில் வழங்குமாறு கேட்கப்பட்டிருந்தது. அவர் குழுவின் முன் இம்மாதம் 23 ஆம் திகதி தோன்ற வேண்டும் என்று கேட்கப்பட்டிருப்பதாக அவரது சட்டத்தரணிகளில் ஒருவர் தெரிவித்தார். சட்ட நிபுணர் ரொமேஷ் டி சில்வா தலைமையிலான பிரபல்யமிக்க சட்டவாளர்கள் அணியொன்று பிரதம நீதியரசர் சார்பில் வாதிடவிருக்கின்றது.

குற்றச்சாட்டுகளுக்கான பதில்களை அவர்கள் இப்போது தயாரித்து வருகிறார்கள். இவை இவ்வாறு நடைபெற்றுக்கொண்டிருக்க குற்றப் பிரேரணை தொடர்பான விடயம் மனித உரிமைகளுக்கான ஐ. நா உயர்ஸ்தானிகரின் [illegible] கவனத்தை ஈர்த்துள்ளது.

ஜெனிவாவிலுள்ள ஐ. நா தலைமையகத்திலிருந்து நீதிபதிகளின் மற்றும் சட்டவாளர்களின் சுதந்திரம் தொடர்பான ஐ.நா வின் விசேட அறிக்கையாளர் கப்றியேல் கினோல் விவரமான அறிக்கையொன்றை விடுத்தார். அந்த அறிக்கையில் அவர் குறிப்பிட்டிருந்த முக்கியமான விடயம்:

பாரதூரமான தவறான நடத்தை அல்லது தகுதியின்மை விடயத்தில் சரியான முறையிலும் நியாயமான விசாரணை உத்தரவாதங்களின் அடிப்படையிலும் விசாரணைகள் நடைபெற்று வழங்கப்படும் தீர்மானம் சுயாதீனமாக மீளாய்வுக்குட்படுத்தியதன் பின்னர் மட்டுமே நீதிபதிகள் [illegible]

அவர்மேலும் குறிப்பிடுகையில் சுயாதீனமான நீதிபதிகளின் மீது ஒரு பழிவாங்கும் முறையிலான பொறிமுறையொன்றின் மூலம் ஒழுக்கம் தொடர்பான செயற்பாடுகள் தவறாக பயன்படுத்தப்படுவது ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை. அவரது கருத்தின்படி, உயர்நீதிமன்றத்தின் நீதிபதிகளை பதவி நீக்கம் செய்வதற்கான நடைமுறைகள் இலங்கை அரச அமைப்பின் 107 ஆவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கிணங்க நாடாளுமன்றம் நீதித்துறையின் மீது கணிசமான அளவு கட்டுப்பாடுகளை செயல்படுத்துவதற்கு அனுமதிக்கப்படுகின்றது. எனவே அதிகாரம் தனியாக செயற்படுத்தப்பட வேண்டும் என்ற கொள்கைக்கும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பாக சர்வதேச நியமங்களின் 14 ஆவது அத்தியாயத்துக்கும் இது இணக்கமானதாகக் காணப்படவில்லையென்பதாகும்.

இந்த நிலைமைகளின் பின்னணியில்தான் ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நவிபிள்ளை இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ள விருப்பது முக்கியத்துவம் பெறுகின்றது.

கடந்த மார்ச் மாதம் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்காவின் அனுசரணையில் நிறைவேற்றப்பட்ட இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை எந்த அளவுக்கு இலங்கை அரசு செயற்படுத்தியுள்ளது என்பது பற்றி ஆராய்ந்து மனித உரிமை பேரவைக்கு அறிக்கை சமர்ப்பிப்பது அவரது இலங்கை விஜயத்தின் நோக்கமாக இருக்கும்.

ஆனால் இங்கு நிலைமை மோசமடைந்தே காணப்படுகின்றது. அரசாங்க மட்டத்தில் மட்டுமில்லை முழு இலங்கை நாட்டையே அது பிரதிபலிக்கின்றது. வெளியுறவு அமைச்சின் கவலையளிக்கும் குறைபாடுகள் பெரிதாக எடுத்துக்காட்டப்படுகின்றன.

பிரதம நீதியரசர் மீதான குற்றப்பிரேரணையின் சரி, பிழை எதுவாக இருந்தாலும் அரசின் நிலைப்பாட்டை நாட்டின் வெளிநாடுகளிலுள்ள தூதரகங்களுக்கு தெளிவாக எடுத்துக் கூறுவதற்கு வெளியுறவு அமைச்சு தவறியிருக்கிறது. அவ்வாறு செய்யப்பட்டிருந்தால் இலங்கையைப் பாதுகாப்பதில் ஒரு நாடு மட்டும் ஈடுபட்டிருக்கமாட்டாது.

ஐ.நா. அறிக்கையாளர் விடுத்துள்ள அறிக்கைக்கு வெளிநாட்டமைச்சு இன்னமும் பதில் அளித்திருப்பதாகத் தெரியவில்லை. மற்ற நாடுகள் அவரது கருத்தை ராஜதந்திர ரீதியில் கவனத்தில் எடுத்துச் செயற்படுவதுண்டு. இது ஒரு குறைபாடு என்றாலும் இன்னும் பல குறைபாடுகள் உண்டு. வெளியுறவு அமைச்சின் அதிகாரிகள் அமைச்சர் ஜி.எஸ்.பீரிஸுக்கு விருப்பமான ஆபிரிக்காவை நோக்கும் கொள்கையில் தீவிரமாகக் கவனம் செலுத்தி வரும் நேரத்தில் முக்கிய விடயங்கள் எல்லாம் வேறு இடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

கடந்த வாரம் ஜெனிவாவிலுள்ள மனித உரிமைகள் பேரவையில் பணியாற்றுவதற்கென நியூயோர்க்கிலுள்ள பொதுச்சபையானது 18 உறுப்பு நாடுகளை இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்தது.

அமெரிக்காவுக்கு 131 வாக்குகளும் ஜேர்மனிக்கு 127 வாக்குகளும் அயர்லாந்துக்கு 124 வாக்குகளும் கிடைத்துள்ளன. அமெரிக்கா மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.


இந்த நாடுகளுடன் அங்கோலா, ஆஸ்ரியா, பெனின், பொட்ஸ்வானா, போர்க்கினா பாஸோ, சில்லி, கொங்கோ குடியரசு, கொஸ்டாரிக்கா, செக் குடியரசு, ஈக்குவேடா, கவுத்தமாலா, இந்தியா, இந்தோனேஷியா, இத்தாலி, குவைத், லிபியா, மலேசியா, மாலைதீவுகள், மொரிட்டானியா, பெரு, பிலிப்பைன்ஸ், போலந்து, கட்டார், மொல்டோவா குடியரசு, ரொமானியா, ஸ்பெயின், சுவிறஸர்லாந்து, தாய்லாந்து மற்றும் உகண்டா ஆகியவை தொடர்ந்தும் உறுப்புரிமையுடன் இருந்து வருகின்றன.

இலங்கைக்கு மிக நெருங்கிய நாடுகளான சீனா, ரஷ்யா மற்றும் கியூபா ஆகியவை அடுத்த வருடம் தொடர்ந்து பேரவையில் பணியாற்ற மாட்டா. கடந்த மார்ச் மாதம் இலங்கைக்கு எதிரான தீர்மானம் மீதான மீளாய்வு வரும் மார்ச் மாதம் பேரவையில் நடைபெறும்போது இந்த நாடுகள் இல்லாதிருப்பது இலங்கைக்குப் பெரும் சங்கடமாக இருக்கப் போகின்றது. குறித்த தீர்மானம் தொடர்பான விடயங்களில் அமெரிக்கா தீவிர கவனம் செலுத்தி வருகின்றது. ராஜாங்க அமைச்சைச் சேர்ந்த பிரதி உதவிச் செயலாளர் அலிஸ்ஸா அயரெஸ் இந்த வாரம் கொழும்புக்கு வருகை தருவது இதனை வலியுறுத்துகின்றது. பேரவையில் இந்த முறை பாகிஸ்தான் இடம்பெற்றிருப்பது இலங்கைக்கு ஆறுதல் எனலாம்.

ஐ.நா. சில நாள்களுக்கு முன் ஐ.நா. செயலாளர் நாயகத்தின் இலங்கை மீதான உள்ளக மீளாய்வுக் குழு வெளியிட்ட அறிக்கையின் போது வெளியுறவு அமைச்சின் மேலும் முக்கிய குறைப்பாடுகள் வெளிக்கு வந்தன. அந்த அறிக்கையின் சில பகுதிகள் கறுப்பு மையினால் அழிக்கப்பட்டுள்ளன.

அந்தப் பகுதிகளைப் பார்க்கும் போது ஐ.நாவானது தனக்குள் தானே முரண்பட்டிருப்பது மட்டுமல்ல அப்போது மனிதநேய விடயங்கள் தொடர்பான கீழ்நிலை செயலாளராகவிருந்தவரான சேர்.ஜோன் ஹோம்ஸ் இலங்கை தொடர்பான விடயங்களில் போர்க் குற்றங்கள் என்ற சொல் பாவிக்கப்படுவதை விரும்பவில்லை என்பது தெரிய வந்துள்ளது. இன்னும் முக்கியமான விடயம் என்னவென்றால் போரின் போது கொல்லப்பட்ட பொதுமக்களின் எண்ணிக்கை தொடர்பாக ஐ.நாவில் உள்ளவர்களே சரியான புள்ளி விவரங்கள் குறித்து சந்தேகம் கொண்டிருந்துள்ளனர். ஐ.நாவின் அணுகுமுறை எப்படியிருக்க வேண்டும் என்பது குறித்தும் குளறுபடிகள் காணப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



■ அருள்

கந்தசஷ்டி நாள்களில் மட்டுமன்றி வாழ்நாள் முழுவதும் முருகனையே நினைந்து, உலகத்தில் தாண்டவமாடும் அநீதிகள், தீமைகள், அறியாமைகள் யாவும் அழிந்து,எல்லோரும் இந்த மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்.

# மண்ணில் நல்லவண்ணம் வாழ வழிகாட்டும் விரதம் 'கந்தசஷ்டி'

ஐப்பசி மாதம் வளர்பிறையில் அமாவாசையை அடுத்துவரும் பிரதமை முதல் சஷ்டி திதி ஈறாக ஆறு நாள்கள் கந்தப்பெருமானை வேண்டி அனுஷ்டிக்கப்படுகின்ற விரதம் கந்தசஷ்டியாகும்.

கந்தப்பெருமான், சூரபத்மனைத் தலைவனாகக் கொண்ட அசுரப்படையை வாட்டி அழித்த திருவிளையாடலைத்தான் கந்தசஷ்டி விரதமாக அனுஷ்டித்து வருகின்றோம்.

பரமேஸ்வரனுக்கும் - பார்வதிதேவிக்கும் குமாரனாக உதித்த முருகப் பெருமான் தேவர்களுக்குச் சொல்லொணாத் துன்பம் செய்த சூரபத்மன், சிங்கமுகன், பானுகோபன் போன்ற கொடிய அசுரத்தலைவர்களையும், அசுர குலத்தையும் ஆறுநாள் போரில் அடக்கி ஒடுக்கி சம்ஹாரம் செய்தார்.

வேலினால் சூரபத்மனைப் பிளந்த முருகப் பெருமான் அவனின் ஒரு பகுதியை மயில்வாகனமாகவும் மற்றொரு பகுதியை சேவற்கொடியாகவும் தமதாக்கி ஆட்கொண்டு தேவலோகத்தை காத்தருளினார்.

"ஆறாறையும் நீத்து அதன் மேல் நிலையை
வேறா அடியேன் பெறுமாறு உளதோ
கீறா வரு சூர் சிதை வித்து
கூறா உலகம் குளிர்வித்தவனே"

என்பது இந்த சூரசம்ஹாரத்தை எடுத்து உரைக்கும் கந்தரநுபூதிப் பாடலாகும்.

உலகிலே ஜீவராசிகளுக்குத் தாயாய் தந்தையாய் இறைவனாய் இருந்து அருள் பரிபாலிக்கும் கந்தவேள் யாரை அழிப்பது? யாரை காப்பது? மறக் கருணையால் அசுரர்களின் இயல்பை அழித்து தேவ இயல்புடன் அவர்களை ஆட்கொண்ட திருவிளையாடலே சூரசம்ஹாரம் ஆகும்.

பிளக்கப் பிளக்க முளைத்த சூரன் ஈற்றில் கடலில் மரமாக வளர்ந்து நின்றான். கடலில் மரமாக நின்ற சூரனை கந்தப்பெருமான் சஷ்டியில் அறுத்தார் என்பது பிளவுதோறும் முளைத்த அவனது ஆணவத்தை அழித்து அவனை ஆட்கொண்டான் என்பதே சூரசம்ஹாரத்தின் கருத்தாகும்.

எமது வாழ்க்கைத் தத்துவத்தை விளக்குவதற்கு ஏற்பட்ட ஒரு புற உபகாரத் திருவிளையாடலே கந்தவேளுக்கும் அசுரப்படைக்கும் இடையில் நடந்த போரும் சூரசம்ஹாரமும் ஆகும்.

பிரபஞ்ச வாழ்வும் ஒரு தொடர்ச்சியான போராட்டமே. ஒவ்வொருவரின் உள்ளத்தில் எழுகின்ற தேவ இயல்புக்கும் அசுர இயல்புக்கும் இடையில் இடையறா போரும் பூசலும் சம்ஹாரமும் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன.

எம்மில் எழும் அகங்கார, காம, குரோத, மதமாச்சர்ய விருத்திகளே, அசுரத் தலைவர்கள் என்றும் தீய எண்ணங்களே அசுரப்படை என்றும், சொல்லலாம். இந்த அசுர இயல்புடன் தொடர்ச்சியாக இருக்காது போராடி அடக்கி ஒடுக்கி அழித்து நற்பேறு அடைய வேண்டும் என்பதே மனித வாழ்க்கையின் குறிக்கோளாகும்.

நாம் உடம்பைப் பெற்றது இறைவனை வணங்கி முக்தியடைவதற்கே என்பது ஆன்றோர் மொழி.

கந்தசஷ்டி விரதம் முருகப் பெருமானுக்கு உரிய விரதங்களுள் முதன்மையானதாகும். இதை முறைப்படி கடைப்பிடிப்போர் மற்ற எல்லா விரதங்களையும் நோற்ற பலனைப் பெறுவர் என்பது எம் முன்னோர் எமக்குச் சொல்லித் தந்தது.

கந்தசஷ்டி விரதம் ஆறு நாள்களை உள்ளடக்கியது. ஆறு நாள்களும் முழு விரதம் இருப்போர் பூரண உபவாசமிருந்து ஏழாம் நாள் காலை பாரணை பண்ணுவர்.

அவ்வாறு கடைப்பிடிக்க இயலாதவர்கள் முதல் ஐந்து நாள்களும் பால், இளநீர்,பழம் ஏதாவது உட்கொண்டு ஆறாவது நாளாகிய சஷ்டியிலாவது பூரண உபவாசமிருக்க வேண்டும்.

இவ்வாறு கடைப்பிடிக்க இயலாதவர்கள் தம் தேக, மன நிலைக்கு ஏற்ப திரிகரண சுத்தியுடன் இயன்ற மட்டும் கடைப்பிடிக்கலாம். மனச்சுத்தமும், ஆழ்ந்த பக்தியும் தெய்வ நம்பிக்கையுமே இந்த விரதத்துக்கு முக்கியமானவை.

இந்த விரத நாள்களில் கந்த சஷ்டி கவசம், கந்தர் கலிவெண்பா, கந்தர் அலங்காரம், கந்தர்அநுபூதி, திருப்புகழ், சண்முக கவசம் ஆகியவற்றில் மனதுக்கு உகந்த பாடல்களைப் பாடி கந்தப்பெருமானின் பேரருளைப் பெற்று உய்யலாம்.

ஆகவே இந்த கந்தசஷ்டி நாள்களில் மட்டுமன்றி வாழ்நாள் முழுவதும் நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் முருகனையே நினைந்து அவன் அருட்பாடல்களைப் பாடிப் பரவி உலகத்தில் தாண்டவமாடும் அநீதிகள், தீமைகள், அறியாமைகள் யாவும் ஒழிந்து, அழிந்து எல்லோரும் இந்த மண்ணில் நல்ல வண்ணம் வாழப் பிரார்த்திப்போமாக.

# இலட்சியப் பெண்களை உருவாக்கித் தந்தவர் சேர்.பொன். இராமநாதன்

■ கலாபூஷணம் பண்டிதை
திருமதி. வை.கணேசபிள்ளை

"ஓர் ஆணுக்கு கொடுக்கும் கல்வியிலும் ஒரு பெண்ணுக்கு அளிக்கப்படும் கல்வி, சமூகத்தை மட்டுமல்ல நாட்டையே வாழ வைக்கும்.

சேர். பொன். இராமநாதன் அவர்கள் ஈழத்தாய் பெற்றெடுத்த தவப்புதல்வர். சைவப்பெருங்குடி மகன். 1851 ஆம் ஆண்டு இந்த மண்ணில் அவதரித்து 80 ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்து, வாழும் காலத்தில் அரிய சாதனைகளை நிலைநாட்டியவர். அவர் சமாதி அடைந்த கார்த்திகை மாதத் திருவோண நட்சத்திரத்தில் அவர்தம் பணிகளை சைவ, தமிழ் மக்களாகிய நாம் நன்றியுணர்வோடு நினைவுகூர்ந்து நிற்கிறோம். இவரது பணி கல்வி, அரசியல், சமயம், சமூகம், பொருளாதாரம், கலை, கலாசாரம் எனப் பரந்திருந்தாலும் கல்விப்பணி இன்றும் போற்றுதற்குரியது.

19 ஆம் நூற்றாண்டு பிரித்தானிய ஏகாதிபத்தியம் நம் நாட்டில் வேரூன்றி இருந்தது. அந்த நேரத்தில் சைவ மக்கள் மதம் மாற்றப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இந்த நிலையில் மதமாற்றம் கண்டு மனம்புழுங்கிய இராமநாதன், ஆறுமுகநாவலர் வழியில் நின்று செயற்பட முன்வந்தார். பெண்கல்வியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். ''ஓர் ஆணுக்கு கொடுக்கும் கல்வியிலும் ஒரு பெண்ணுக்கு அளிக்கப்படும் கல்வி, சமூகத்தை மட்டுமல்ல நாட்டையே வாழ வைக்கும்'' என நம்பினார். இதனால் சைவத் தமிழ் பண்பாட்டு விழுமியங்களைப் பேணும் வகையில் 1913 ஆம் ஆண்டு ஜனவரிமாதம் இருபதாம் திகதி மருதனார் மடத்தில் இராமநாதன் பெண்கள் கல்லூரியை நிறுவினார். இது இலங்கையின் முதற் பெண்கள் கல்லூரி என்னும் பெருமைக்குரியதாகும். 25 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்த இந்தக் கல்லூரி பெரும் கட்டட அமைப்புக்களைக் கொண்டது. கலை நுணுக்கம் வாய்ந்தது. ஆசிரியரும் மாணவரும் தங்கியிருந்து கல்வி கற்கும் வசதியினையுடையது. வழிபாட்டிற்கென அமைந்த நடராஜர் ஆலயத்தையும், சரஸ்வதி மண்டபத்தையும் உள்ளடக்கியதாக விளங்குகின்றது. இது இந்து கலாசாரப் பண்பாட்டுப் புரட்சியின் சின்னமாகவும் காணப்படுகின்றது..

இந்தக் கல்லூரியில் கற்பிக்கும் ஆசிரியர்கள் ஆழமான அறிவும், சைவாசார ஒழுக்கமும் பண்பாடும் உள்ளவர்களாக இருக்க வேண்டுமென்பதில் இராமநாதன் குறியாக இருந்தார். தேர்ந்தெடுத்த ஆசிரியர்களைக் கற்பிக்கும் பணியில் ஈடுபடுத்தினார். பெண்கள் அனைவரும் சிறந்த இல்லத்தரசிகளாகவும், சமய, தமிழ் இலக்கியங்கள் கூறும் இலட்சியப் பெண்களாகவும் திகழ வேண்டுமென விரும்பினார்.



சைவத்தமிழ் கலாசாரம் பேணும் வகையில் மாணவிகளை உருவாக்க குருகுலக் கல்வி முறையைப் பேணினார். இதனால் விடுதியும், ஆலயமும் இணைத்துக் கட்டப்பட்டது. இலங்கையின் பலபாகங்களில் இருந்தும் சைவப் பெண்பிள்ளைகள் வந்து தங்கியிருந்து கற்றனர். பெண்பிள்ளைகள் நீண்ட பாவாடையும், தாவணியும் அணிந்தனர். கூந்தலைப் பின்னிக் கொண்டனர். அவர்கள் நெற்றியில் அணிந்த திருநீறும், திலகமும் சைவப் பண்பாட்டைப் பறைசாற்றியது. மாணவர்களுக்கு இசைப்பயிற்சியோடு ,கோலம் போடுதல், மாலைகட்டுதல், தையல் போன்ற பயிற்சிகளும் கற்றுக்கொடுக்கப்பட்டன. எல்லா வகையிலும் இவர்கள் இராமநாதன் கல்லூரி மாணவர்கள் என இனங்காணப்பட்டனர். இலட்சியப்பெண்களை உருவாக்கும் வகையிலேயே கல்லூரியில் கல்விகற்ற பெண்கள் உலகில் பல பாகங்களிலும் சென்று பெரும்பதவிகள் வகித்தும் பண்பாட்டு விழுமியங்களைக் காத்தும் வருகின்றனர். இந்தப் பெருமைக்கு உரியவர் சேர். பொன். இராமநாதன் அவர்களே என்றால் மிகையாகாது.

கல்வியோடு நில்லாது கலாசாரம் பேணும் வகையில், கடவுள் வழிபாடும் அமைந்தமையை அறிஞர் திரு.சு.நடேசபிள்ளை அவர்கள் பாடிய கல்லூரி கீதம் அழகாக உணர்த்தி நிற்கின்றது.

சேர்.பொன். இராமநாதன் அவர்கள் பெண்கள் கல்லூரியை நிறுவியது போல இந்துப்பாரம்பரிய முறையில் ஆண்களுக்கெனப் பரமேஸ்வராக் கல்லூரியையும் நிறுவினார். இது இன்று யாழ்ப்பாண பல்கலைக்கழகமாக விளங்குகின்றது. இவரது பல்தரப்பட்ட பணிகளை எம்மால் அளவிட முடியாது. ஆயினும் யாழ்ப்பாணபரமேஸ்வரன் ஆலயம், கொச்சிக்கடையில் அமைந்த பொன்னம்பலவாணேச்சரம், சைவ மங்கையர் கழகம், சைவ வித்தியா விருத்திச்சங்கம், அரசியலில் ஐம்பதாண்டுச்சேவை என்பன இன்றும் தமிழ் கூறும் நல்லுலகில் நினைவு கூரத்தக்கன. இத்தனை பணிகளுக்கிடையேயும் சேர். பொன். இராமநாதன் அவர்கள் பற்றற்ற ஞானியாக விளங்கினார். அருட்பரானந்த சுவாமிகளைக் குருவாகப் பெற்றார். பல்வேறு சாதனைகளைப் படைத்த பெருந்தகை 1930 ஆம் ஆண்டு இறைநிலை எய்தினார். இவர் குருவிடம் சந்நியாசம் பெற்ற பரமஞானி. ஆகையால் இவரது பூதவுடல் கல்லூரி முன்றலில் அமைந்துள்ள சமாதி ஆலயத்தில் அமர்த்தப்பட்டு சிவபிரதிஷ்டை செய்து பூசைகள் நடைபெற்று வருகின்றன. இன்று அவரது குருபூசைத்தினமாகும். சைவத்தமிழ்ப் பெண்கள் கல்வியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய சேர். பொன். இராமநாத வள்ளலை என்றும் நினைவு கூர்ந்து வணங்குவோம். அவர் காட்டிய வழியில் நடப்போமாக. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடப்பதெல்லாம் நன்மைக்கே...

உன் வாழ்வில் நன்மையோ, தீமையோ எது நடந்தாலும் நன்மைக்கே என்று எண்ணிக்கொள்.

இறைவன் விருப்பு வெறுப்பு அற்றவன். உன்னைக் காப்பதும் அவன் கடனே. இறைவன் அனைத்துயிர்க்கும் நல்லது செய்கிறான் என்பதே உண்மை.

உனக்குத் துன்பங்கள் வருகின்றனவா? இறைவன் உன்னைப் பக்குவப்படுத்துகிறான் என்று உணர்க.

உனக்குத் தன் அருளை வழங்க நேரம் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்று பொருள்.

சோதனை முடிவில் தான் சாதனை இருக்கிறது.

சோதனைகளைச் சுகமாக ஏற்றுக்கொள்.

அப்போது நிலையான இன்பம் உன்னைத் தேடி வரும்.

இதை விளக்க ஓர் அற்புதமான கதை உண்டு.

சிற்பி ஒருவன் சிலை வடிப்பதற்காக இரண்டு கற்களைத் தெரிவு செய்தான்.

அவை இரண்டும் பெரிய கற்கள்.

அதில் ஒன்றில், அவன் சிற்றுளியால் செதுக்கத் தொடங்கினான்.

அப்போது அந்தக் கல், "சிற்பியே! என்னைச் செதுக்காதே எனக்கு வலிக்கிறது" என்றது.

சிற்பி மற்றொரு கல்லைச் செதுக்கத் தொடங்கினான். கல் அமைதியாக இருந்தது.

சிற்பி கேட்டான், "கல்லே! உனக்கு வலிக்கவில்லையா?" என்றான்.

அதற்குக் கல் "சிற்பியே எனக்கும் வலிக்கத்தான் செய்கிறது. ஆனால் அதைத் தாங்கிக் கொள்கிறேன்" என்றது.

சிற்பி மிகவும் அழகான ஒரு சிலை வடித்தான்.

அது ஒரு தெய்வச் சிலை.

சிற்பி அந்தச் சிலையை அங்கேயே வைத்துவிட்டுச் சென்று விட்டான்.

அந்த வழியாக வந்த வழிப்போக்கர்கள் அந்த சிலையைக் கண்டு வணங்கினார்கள்.

வேறு சிலர், அந்தச் சிலைக்கு மாலையிட்டு வணங்கி வழிபாடு செய்தனர்.

பின்பு அந்த ஊர்க்காரர்கள் எல்லோரும் சேர்ந்து அந்தச் சிலையைப் பிரதிஷ்டை செய்து கோயில் கட்டினார்கள்.

கும்பாபிஷேகமும் நடத்தினார்கள். சிற்பி, சிலை வடிக்காமல் விட்டுச் சென்ற அந்தக் கல்லைப் படிக்கல்லாக அமைத்தார்கள்.

பக்தர்கள் அந்தப் படிக்கட்டில் தினமும் தேங்காய் உடைத்துச் சென்றனர்.

இப்போது அந்தக் கல் கண்ணீர் விட்டு அழுதது.

"ஒரு நாள் வலி பொறுத்திருந்தால், இன்று நானும் மக்கள் வணங்கக் கூடிய சிலையாகி இருப்பேனே! இப்பொழுதோ தினம் தினம் வலியால் துடிக்க வேண்டியுள்ளதே!" என்று வருந்தியது.

எனவே, நீ இதிலிருந்து ஓர் உண்மையைப் புரிந்து கொள்.

வலி தாங்கிய கல் தான் சிற்பமானது.

எல்லாம் நன்மைக்கே என்ற எண்ணம் அந்தக் கல்லுக்கு இருந்தது.

அதே போல் நீயும் எத்தகைய துன்பங்களையும், வலிகளையும் பொறுத்துக் கொண்டால், நிரந்தர இன்பத்தை அடையலாம்.

"நடப்பதெல்லாம் நன்மைக்கே" என்ற வாசகத்தை ஆழமாக மனதில் பதித்து விட்டால் மனம் அமைதியடையும்.


மந்தரை, கைகேயிக்கு துர்போதனை செய்யாவிட்டால் இராமாயணம் இல்லை.

சகுனி சூழ்ச்சி செய்து, தருமனுடன் சூதாடவில்லை என்றால் பாரத யுத்தமே நடந்திருக்காது.

எனவே, ஒவ்வொரு தீய நிகழ்வின் பின்னும் மகத்தான ஒரு நன்மை இருக்கிறது.

இதுவே உண்மை.


இதை நம்பினால் உனக்கு நன்மை.



பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்



# மீண்டும் முன்னிலையை நோக்கிச் செல்லும் எழுவைதீவு கத்தோலிக்க தமிழ்ப் பாடசாலை



(கடந்தவாரத் தொடர்ச்சி...)

■ லக்ஸ்மன்

எழுவைதீவு றோ.க.த.பாடசாலையில் 1972 இல் புதிய கல்வித்திட்டத்துக்கு அமைவாக ஒரு மாதிரி வகுப்பறை அமைக்கப்பட்டது. வட்டாரக் கல்வி அதிகாரியாக இருந்த வ. நடராசா இதற்கான முயற்சியை முன்னெடுத்ததுடன் தீவுப்பகுதிப் பாடசாலைகளில் புகுத்தப்பட்டு வரும் புதிய கற்பித்தல் முறைகளை இந்த மாதிரி- வகுப்பறையூடாக செயற்படுத்தவும் வழி காட்டினார். இது சிறு பிள்ளைகளுக்கு விளையாடவும் பாடல்களைப் பயிலவும் அவர்களது அறிவை மேம்படுத்தவும் உதவியது. கடற்கரையில் கிடைக்கக்கூடிய ஊரிகள் சிப்பிகள் அந்தச் சூழலில் பெறக் கூடிய இலகுவான உபகரணங்கள் மூலம் தமது நாளாந்த வாழ்க்கைக்கு உகந்த கல்வியைப் பெற முடிகின்றது. தீவுப்பகுதியில் அசாதாரண சூழ்நிலை ஏற்படும் வரை கல்விச் செயற்பாடுகள் சிறப்பாக இருந்து வந்துள்ளதாக அங்குள்ள மக்களும் தெரிவித்தனர். தீவகமும் யாழ்ப்பாணமும் தொடர்புகளைத் துண்டித்திருந்த 1992 காலப்பகுதியில் போக்குவரத்து உட்பட பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டிருந்தன. அந்தச் சமயம் அதிபராகக் கடமையாற்றிய சு.இராசசிங்கம் கஷ்டமான சூழ்நிலையிலும் பாடசாலையை மிகவும் திறம்படக் கொண்டு செல்வதில் மிகுந்த ஈடுபாடு காட்டியுள்ளார். இங்கு கடமையில் இருந்த அதிபர்கள், ஆசிரியர்கள் கல்வியில் இத் தீவு நல்ல நிலையை எட்ட வேண்டும் என்ற சிந்தனையுடன் தமது கடமையைச் செய்தனர் என்றும் கூறப்படுகின்றது. 2001 இல் எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்துடன் இணைக்கப்பட்டு 2002 வரை இரண்டு வருடங்கள் அதன் அதிபர் தி.சிவபாலனின் தலைமையில் இயங்கியுள்ளது.

இங்கு அதிபர் விஜயகுமாருடன் நான்கு ஆசிரியர்கள் உள்ளனர். தொண்டர் ஆசிரியர்கள் பதினொரு பேர் இருந்துள்ளனர். தற்போதைய மாணவர் தொகை ஐம்பத்தி ஐந்தாகும். கல்வியில் மீண்டும் முன்னிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

இங்கு கல்வி கற்று வெளியேறிய மாணவர்களுக்கு இலவச கணினிப் பயிற்சிகளை வழங்க பாடசாலை அதிபர் முன்னின்று செயற்படுகின்றனர். சத்துணவுத்திட்டம் உலக உணவு நிறுவனத்தின் அனுசரணையுடன் மிகவும் தரமானதாக வழங்கப்படுவதாக பெற்றோர் திருப்திப்படுகின்றனர். கணனி, ஒலிபெருக்கி உதவிகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு இம்முறை முதன் முறையாக அனுஷ்கா என்ற மாணவி புலமைப்பரீட்சையில் 148 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இந்த உயர் நிலைக்கு தொண்டர் ஆசிரியர்களின் முயற்சி தான் முக்கிய காரணம் என அதிபர் தெரிவித்தார். அடுத்து வரும் ஆண்டுகளிலும் மேலும் கூடுதலான மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் அதி சிறந்த பெறுபேறுகளைப் பெற வேண்டும் என்ற உறுதியுடன் மேலதிக வகுப்புக்களை நடத்துவதில் ஆசிரியர்கள் ஒன்றுபட்டுச் செயற்படுவது தெரிகின்றது. கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுடன் நில்லாது இணைபாடவிதானங்களிலும் கவனம் செலுத்தப்படுகின்றது.

விளையாடுவதற்கு ஏற்ற மைதான வசதிகள் இல்லாத போதும், கோட்ட வலய மட்டப் போட்டிகளில் மாணவர்கள் கலந்து கொள்கின்றனர். தமிழ்த் தினப்போட்டி கலை நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு தமது திறமையை வெளிப்படுத்துகின்றனர். வடமோடி தென்மோடி நாட்டுக் கூத்துக்களிலும் பிள்ளைகளுக்குப் பரீச்சயம் இருக்கிறது. கலை நிகழ்வுகளில் தொடர்ச்சியாக மூன்று இடங்கள் வலய மட்டத்தில் முதலிடத்தைப் பெற்று வந்துள்ளனர். அதற்காக வெற்றிக் கேடயமும் கிடைத்துள்ளது. இதற்கென நினைவுக்கேடயம் ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது.

விளையாட்டு உபகரணங்கள், தண்ணீரைப் திருத்தியமைக்கப்பட வேண்டும் பாடசாலை கட்டடம் ஒன்று மிகவும் சேதமடைந்து காணப்படுகின்றது. கதவுகள் உடைந்துள்ளன, ஆசிரியர் பற்றாக்குறை ஆசிரியர்கள் தங்குவதற்கான விடுதி என்பன நிறைவேற்றப்பட வேண்டியதாக உள்ளன. வலயம் அவ்வப்போது தேவைகளைக் கண்டறிந்து அவற்றை நிறைவேற்றி உதவுகின்றது. மலசல கூட வசதியை ஜி.ரி.இசற் செய்துள்ளது. எனினும் தற்போது அதிலும் சில மாற்றங்கள் செய்யப்பட வேண்டியுள்ளன.

பெற்றோர்கள் பழைய மாணவர்கள் தமது வசதியீனங்களின் மத்தியிலும் தம்மால் முடிந்த வரை பாடசாலைக்கு வேண்டிய உதவிகளை வழங்குகிறார்கள் பாடசாலையின் வெளிப்புறங்களை துப்புரவு செய்வதில் ஒவ்வொரு குடும்பமும் பங்கு கொள்ளுகின்றது. ஜேர்மனியில் உள்ள சீமான், பிரான்சில் உள்ள திருமதி குமுதினி ஆகியோர் பழைய மாணவர்கள். இவர்கள் மதிலின் ஒரு பகுதியைக் கட்ட நிதி உதவியளித்தும் ஜெனரேட்டர் ஒன்றையும் வழங்கியுள்ளனர். இங்கு கல்வி கற்று வெளியேறிய மாணவர்களுக்கு இலவச கணினிப் பயிற்சிகளை வழங்க பாடசாலை அதிபர் முன்னின்று செயற்படுகின்றார். சத்துணவுத்திட்டம் உலக உணவு நிறுவனத்தின் அனுசரணையுடன் மிகவும் தரமானதாக வழங்கப்படுவதாக பெற்றோர் திருப்திப்படுகின்றனர். கணினி, ஒலிபெருக்கி உதவிகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

எழுவைதீவின் எதிர்காலம் இந்தச் சிறுவர்களின் கல்வியில் தான் தங்கியுள்ளது என்ற ஆதங்கம் பெற்றோர்களிடம் இருப்பதால் வலயம் மட்டுமன்றி, அரச சார்பற்ற நிறுவனங்களும் அந்தப் பிரதேசத்தின் நிலைப்பாட்டைத் தெரிந்து கொண்டு பாடசாலைக்கு உதவ முன்வருதல் பயனுள்ளதாக அமையும் (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழருக்கு இலங்கையில் இன்னும் இல்லை பாதுகாப்பு

## அதனால்தான் நாடுவிட்டு நாடு ஓடுகின்றனர்
## மட்டுநகர் வந்த ஆஸி.அதிகாரியிடம் எடுத்துரைப்பு

மட்டக்களப்பு,நவ.19

தமிழ் மக்களுக்கு முழுமையான பாதுகாப்போ அல் லது அதற்கான உத்தர வாதமோ இன்னும் இந்த நாட்டில் கிடைக்கவில்லை. பீதியும் பொருளாதார பற்றாக் குறையுமே அவர்களைச் சூழ்ந்து கொண்டுள்ளன- என்று மட்டக் களப்பு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணை யத்தின் தலைவர் லயன் அ.செல் வேந்திரன் தெரிவித்தார்.

ஆஸ்திரேலியா நாட்டின் குடிவரவு குடியகல்வு திணைக் களத் துக்குப் பொறுப்பான அதிகாரி சட்டத்தரணி எமிலி ஹய்விக் உடனான சந்திப்பின் போதே அவர் இதனை எடுத்துரைத்தார்.

ஆஸ்திரேலிய நாட்டுக்கு அதிகளவான மக்கள் அதிகா ரமற்ற முறையிலும், பாது காப்பற்ற முறையிலும் தஞ் சம் கோரி பயணிக்கின்றனர். இவ்வாறான இடப்பெயர்வு கள் போர் முடிவுற்ற நிலை யிலும் இடம்பெறுவதற்கான காரணங்களை ஆஸ்திரேலியா நாட்டின் குடிவரவு குடிய கல்வு அதிகாரி கேட்டறிந்தார்.

இராணுவப் பிரசன்னம் குறைவடையாமல் இருப்பத னால், எவ்வேளையிலும் தங் கள் குடும்பங்களுக்கு ஏதாவது நடந்துவிடுமோ என்ற அச்சத் தின் காரணத்தால் இவ்வா றான உயிருக்கு உத்தர வாதமற்ற பயணங்களை மக் கள் மேற்கொள்கின்றார்கள் என்று மட்டக்களப்பு மாவட்ட அரசசார் பற்ற நிறுவனங்களின் இணை யத்தின் தலைவர் கூறினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இராணுவப் பிரசன்னம் குறைவடையாமல் இருக் கின்றது. அரசு தமிழ் மக்கள் மீது காட்டும் கரிசனை மாற் றாந் தாய் மனப்பாங்கை ஒத்த தாக உள்ளது என்று மக்கள் உணர்கின்றனர். அரசியல் ரீதி யான தீர்வுகளும் தாமத மாகி இழு பறிநிலையில் தொடர்ந் தும் உள்ளதால், மக்கள் விரக்தி யுற்று இவ்வாறான பயணங் களை மேற்கொள்கின்றனர்.

எனவே ஆஸ்திரேலிய அரசு இந்த மக்களின் துர்ப் பாக்கிய நிலையை உணர்ந்து அவர்களை நாடுகடத்தாது தங்கள் நாட்டுக்கு அகதி அந்தஸ்தாவது வழங்கி பரா மரிக்க ஏற்பாடுகளை மேற் கொள்ளவேண்டும்.

அமெரிக்க நாடு கிறீன் அட்டைவிநியோகத்தின் மூலம் மக்களை உள்வாங்குவது போன்று சட்டரீதியாக ஏதாவது செய்து இந்த அப் பாவி மக் களை ஏற்றுக்கொள் ளுதல் வேண்டும்.- என்றார். இதற் குப் பதிலளித்த அதிகாரியான எமிலி, தனது நாட்டு அரசுக்கு இந்தக் கோரிக்கையை சமர்ப் பிப்பேன் என்று கூறினார்.(ச)

## தொடர்கிறது மாணவர்களின் போராட்டம்



திருகோணமலை,நவ.19

கிழக்குப் பல்கலைக் கழகத் தில் கல்வி பயிலும் தமிழ், முஸ்லிம், சிங்கள மாணவர் கள் நேற்றுமுன்தினம் சனிக் கிழமையும் பரீட்சைப் பகிஷ்க ரிப்பில் ஈடுபட்டனர்.

பல்வேறு விடயங் களில் கிழக்குப் பல்கலைக் கழக நிர்வாகத்தால் தமக்குப் பார பட்சம் காட்டப்படுவதாகக் கூறி நேற்றுமுன்தினம் நடை பெற்ற பரீட்சையையும் மாணவர்கள் புறக்கணித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட னர்.

தமது கோரிக்கைகளுக்கு நிர்வாகம் செவிசாய்க்கும் வரை பரீட்சைப் புறக்கணிப்பு தொடரும் என்று ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்ட மாண வர்கள் தெரிவித்தனர். (ச)

## ஆயுத முனையில் நகைகள் கொள்ளை

மட்டக்களப்பு,நவ.19

மட்டக்களப்பு, திருச் செந் தூர் பிரதேசத்தில் உள்ள வீட் டில் நேற்றுமுன்தினம் சனிக் கிழமை இரவு புகுந்த ஆயுத தாரிகள் துப்பாக்கி முனை யில் நகைகளை கொள்ளை யிட்டுச் சென்றுள்ளனர்.

திருச்செந்தூர், முதலாம் குறுக்கில் உள்ள வீட்டி லேயே இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று காத்தான்குடி பெர்லி ஸார் தெரிவித்தனர்.

கைத்துப்பாக்கியை காட்டி வீட்டில் இருந்த சுமார் 12 லட் சம் ரூபா பெறுமதியுடைய, 26 பவுண் நகைகள் இவ்வாறு கொள்ளையிடப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித் தனர். இந்தச் சம்பவம் தொடர் பிலான விசாரணையை காத் தான்குடி பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ச)



கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கான நடமாடும் சேவை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கிண்ணியா மத்திய கல்லூரியில் இடம்பெற்றது. அதனைக் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் ஆரம்பித்து வைத்தார்.

## மாற்றுவழியூடாக பஸ் சேவை; கிண்ணியா பயணிகள் அவதி

திருகோணமலை,நவ.19

திருகோணமலையில் இருந்து கிண்ணியாவுக்கான பஸ் போக்குவரத்துச் சேவை மாற்றுவழியூடாகச் செல்வ தனால் கிண்ணியாவுக்குச் செல்வோர் பல்வேறு சிர மங்களை எதிர்நோக்கி வரு கின்றனர்.

இதனால் கிண்ணியாவி லிருந்து மகமார், நடுவூற்று, சூரங்கல், கச்சக்கொடித்தீவு, காக்காமுனை முதலான பல பிரதேசங்களுக்குச் செல்லும் மக்கள் திருகோணமலையில் இருந்து கிண்ணியாவுக்குச் செல்வதற்கு அறவிடப்படும் பணத்தொகையிலும் இரு மடங்கு பணத்தைச் செலவு செய்து ஓட்டோவில் செல்ல வேண்டிய அவலநிலை ஏற் பட்டுள்ளது என்று கூறுகின் றனர்.

ஏற்கனவே திருகோண மலையிலிருந்து சூரங்கல் வரைக்கும் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட பஸ் சேவை தற்பொழுது நிறுத்தப்பட் டுள்ளதோடு கிண்ணியா வுக்கு என்று பஸ்சேவையை மீண்டும் நடத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

திருகோணமலையிலிருந்து சேவையில் ஈடுபடும் பெரும் பாலான பஸ்கள் ஏ - 15 மட் டக்களப்பு வீதியைப் பயன் படுத்துவதனால், கிண்ணி யாவுக்குள் உள்ள புறநகர் பகுதிகளுக்குச் செல்வோரும், மாலைநேர வகுப்புகளுக்குச் சென்றுவரும் மாணவர் களும் பல்வேறு சிரமங்க ளுக்குள்ளாகி வருகின்றனர்.

பயணிகளினதும் மாண வர்களினதும் நன்மை கருதி திருகோணமலையிலிருந்து சூரங்கல்லுக்கான போக்கு வரத்துச் சேவையை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக் குமாறு சம்பந்தப்பட்ட அதி காரிகளிடம் பயணிகள் வேண்டு கோள் விடுக்கின்றனர்.

## சமுர்த்தி ஊழியர்களுக்கு கணினி பயிற்சி



அம்பாறை,நவ.19

அம்பாறை மாவட்டத்திலுள்ள சமுர்த்தி வங்கிகளில் கடமையாற்றும் தமிழ்மொழிமூல சமுர்த்தி முகாமையா ளர்கள், உதவி முகாமையாளர்கள், புத்தகக் காப்பாளர்கள் ஆகியோருக்கு கணினி செயற்பாடு தொடர்பில் இருநாள் பயிற்சிநெறி நிந்தவூரிலுள்ள மாவட்ட தொழிற்பயிற்சி நிலையத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆரம்பமானது.

சமுர்த்தி வங்கிகள் வருமானம் குறைந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை அபிவிருத்தி செய்து வறுமையை குறைப்பதற்கான பங்களிப்பைச் செய்கின்றன. இவ்வாறு செயற்பட்டுவரும் சமுர்த்தி வங்கிகளை நவீன முறையில் கணினி மயப்படுத்தி அதனூடாக மக்களுக்கு சிறந்த சேவையை வழங்கும் நோக்குடன் இந்தப் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ச)

## மட்டு. வயலில் வெளிநாட்டு கொக்குகள்



மட்டக்களப்பு,நவ.19

மட்டக்களப்பு, படுவான் கரை பிரதேச செயலக வயல் வெளிகளில் அழகிய வர்ண வெளிநாட்டு கொக்குகளை அவதானிக்க முடிகின்றது.

வறட்சிக் காலத்தில் எஞ் சிய நீர்நிலைகளில் வெளி நாட்டுக் கொக்குகளை காண முடியவில்லை.

ஆனால் தற்போது மழை பெய்து வருவதால் வயல் வெளிகளை நாடி கொக்கு கள் படையெடுத்து வந்துள்ளன. (ச)

## கட்சித் தலைமை எடுக்கும் முடிவுக்கு உறுப்பினர்கள் கட்டுப்படவேண்டும்

### நாவிதன்வெளி பிரதேச சபையின் உறுப்பினர் சொல்கிறார்

மட்டக்களப்பு,நவ.19

தான்தோன்றித்தனமாக ஆர்ப்பாட்டங்கள் செய்வ தாலோ, நடத்துவதாலோ எத னையும் சாதித்துவிட முடி யாது. கட்சியின் தலைமை எடுக்கும் முடிவுகளுக்குக் கட்சியில் உள்ள ஒவ்வொரு உறுப்பினர்களும் கட்டுப் பட்டு நடக்கவேண்டியது கட்டாயதேவையாகும்.

இவ்வாறு தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் நாவி தன்வெளி பிரதேச சபையின் உறுப்பினர் ஆறுமுகம் பிள் ளையான்தம்பி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளி யிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டி ருப்பதாவது:-

தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் ஆட்சியிலுள்ள நாவிதன்வெளி பிரதேச சபையின் புதிய தலைவராக சிவலிங்கம் குணரட்ணம் நியமிக்கப்பட்டதை ஆட் சேபித்து உப தலைவர் அமர தாச விஜயதாச தலைமை யில் கடந்த திங்கட்கிழமை நாவிதன்வெளி பிரதேசத் தில் ஆர்ப்பாட்டம் நடைபெற் றது.

நாவிதன்வெளி பிரதேச சபையை நீண்டகாலத்துக் குப் பின்னர்தான் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு கைப்பற்றி யது. அதன் பின்னர்தான் பல அபிவிருத்தி வேலைகள் எமது பிரதேசத்திலே மேற் கொள் ளப்பட்டுவருகின்றன.

இவ்வாறான கால கட் டத்திலாவது தமிழ் மக்களுக் குக் கிடைக்கக்கூடிய உச்சப் பயனைப் பெற்றுக்கொடுப் பது எமது கட்சியிலுள்ள ஒவ் வொரு உறுப்பினர்களுக்கும் உள்ள தலையாய கடமை யாகும்.

அதனைவிடுத்து ஏனைய கட்சி உறுப்பினர்களுடன் இணைந்துகொண்டு எமது கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களைச் செய்துவிட்டு எவ்வாறு ஒற் றுமையை ஏற்படுத்தமுடி யும்? ஒற்றுமையின்மையே இன்று நாம் ஒவ்வொருவரும் அனுபவிக்கும் துன்பங் களுக்கு மூலகாரணமாகும்.

நாவிதன்வெளி பிரதேசத் திலே நீண்டநாள்களுக்குப் பின்னர் சுமுகமான சூழல் நிலவிவருவதை நாம் ஒவ் வொருவரும் அவதானிக்க முடிகின்றது. இதனைப் பொறுத்துக்கொள்ள முடியாத சிலர் விஷமத்தனமான பிர சாரங்களை மக்கள் மத்தியில் பரப்பி மக்களிடம் இருக்கும் நிம்மதியைக் குலைக்கும் முயற்சியில் அண்மைக் காலங்களாக ஈடுபட்டு வரு வதை அவதானிக்க முடிகின் றது.

இவ்வாறான போலி யான ஆர்ப்பாட்டங்கள், தமிழினத் தின் விடுதலைப் பயணத்துக் குப் பின்னடைவுகளை ஏற் படுத்துவதாகவே அமை யும்.- என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (ச-31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேஷம்:** ஆரவாரமின்றி சில வேலைகளை முடிப்பீர்கள். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. வியாபார ரீதியாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும். அரச வேலைகளிலிருந்து வந்த தடைகள் நீங்கும்.

**இடபம்:** தடைப்பட்ட வேலையை மாறுபட்ட அணுகுமுறையால் முடித்துக்காட்டுவீர்கள். சிலவற்றிற்கு உங்கள் அவசர முடிவுகள்தான் காரணம் என்பதை உணர்வீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளிடம் வளைந்து கொடுத்துப் போவது நல்லது. எதிர்பார்ப்புகள் தடையின்றி முடியும்.

**மிதுனம்:** புதியவர்கள் அறிமுகமாவார்கள். உறவினர்கள் ஒத்துழைப்பார்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். வாகன வசதி அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஆதரிப்பார். எதிலும் எச்சரிக்கையுடன் செயற்படப்பாருங்கள்.

**கடகம்:** மனக்குழப்பங்கள் நீங்கும். நம்பிக்கைக்குரியவர்களின் ஆதரவு கிடைக்கும். தாய்வழி உறவினர்களால் ஆதாயம் உண்டு. பணவரவு திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். கோபம் குறையும். மாணவர்களின் எண்ணங்கள் பூர்த்தியாகும்.

**சிங்கம்:** அதிரடியாகச் செயற்பட்டு சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். பணவரவு உண்டு. வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். அரச காரியங்களில் வெற்றியுண்டு. மாணவர்களின் சிந்தனைத்திறன் அதிகரிக்கும்.

**கன்னி:** இழுத்தடித்த காரியங்களெல்லாம் இனி முடிவுக்கு வரும். பிள்ளைகளின் நீண்டநாள் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்வீர்கள். அரச வேலைகளில் அனுகூலமான நிலை காணப்படும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும்.

**நாளை**

கார்த்திகை -05 செவ்வாய்க்கிழமை 20.11.2012
திதி: ஸப்தமி பி.ப.02.29 வரை
நட்சத்திரம்: அவிட்டம் பி.இ. 05.38 வரை
சுபநேரம்: 10.40 - 12.10 வரை
ராகுகாலம்: 03.10- 04.40 வரை

**துலாம்:** மன உளைச்சல் நீங்கும். கலகலப்பாகச் சிரித்துப்பேசும் சூழல் அமையும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் மகிழ்ச்சியுண்டு. நட்பு வட்டம் விரிவடையும். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும். முன்கோபம் விலகும்.

**விருச்சிகம்:** ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். வியாபார ரீதியாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். குடும்பத்தினரின் எண்ணங்களைப் பூர்த்தி செய்வீர்கள். தாயின் உடல் நிலை சீராகும். நண்பர்கள், உறவினர்களின் உதவி கிட்டும். மனக்குழப்பங்கள் நீங்கும்.

**தனுசு:** முன்கோபத்தைக் குறையுங்கள். திட்டமிடாத செலவுகளும், பயணங்களும் குறுக்கிட்டாலும் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் பெரிய பொறுப்புகளை உங்களை நம்பி ஒப்படைப்பார்கள். உத்தியோகத்தில் விமர்சனங்களை ஏற்றுக்கொள்வது நல்லது.

**மகரம்:** தாழ்வுமனப்பான்மை வந்துப் போகும். யாரையும் பகைத்துக்கொள்ளாதீர்கள். அரசு காரியங்கள் தாமதமாக முடியும். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கும். வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிட்டும். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். எதிலும் கவனம் தேவை.

**கும்பம்:** எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். உறவினர்கள், நண்பர்களால் அலைச்சல், செலவுகள் வந்து போகும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு இலாபம் வரும். அநாவசிய செலவுகளைத் தவிர்க்கப்பாருங்கள். உத்தியோகத்தில் பணிகளை போராடி முடிப்பீர்கள்.

**மீனம்:** நீண்ட நாள் எண்ணங்கள் பூர்த்தியாக முயற்சிப்பீர்கள். பிள்ளைகளின் உடல் நலத்தில் அக்கறை காட்டுவீர்கள். பிரிய மானவர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் மன உளைச்சல் நீங்கும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | | 3 | | | | | 8 |
| | | | 7 | 8 | 1 | 5 | | 6 |
| | | 1 | 6 | | 9 | | | |
| 6 | 1 | 3 | | | 7 | | 5 | |
| | 8 | | | | | | 3 | |
| | 9 | | 4 | | | 6 | 7 | 1 |
| | | | 5 | | 3 | 2 | | |
| 9 | | 2 | 8 | 1 | 6 | | | |
| 7 | | | | | 2 | | 8 | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 8 | 7 | 9 | 6 | 1 | 3 | 5 | 4 |
| 9 | 4 | 3 | 7 | 5 | 2 | 8 | 1 | 6 |
| 1 | 5 | 6 | 4 | 8 | 3 | 7 | 2 | 9 |
| 7 | 2 | 8 | 5 | 4 | 9 | 6 | 3 | 1 |
| 4 | 1 | 5 | 6 | 3 | 7 | 2 | 9 | 8 |
| 3 | 6 | 9 | 1 | 2 | 8 | 4 | 7 | 5 |
| 5 | 3 | 2 | 8 | 1 | 6 | 9 | 4 | 7 |
| 6 | 9 | 1 | 3 | 7 | 4 | 5 | 8 | 2 |
| 8 | 7 | 4 | 2 | 9 | 5 | 1 | 6 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கல்விநிர்வாகசேவையில் வகுப்பு -1 இக்கு பதவி உயர்வுபெற்ற எமது வலயக் கல்விப் பணிப்பாளரை பாராட்டி வாழ்த்துகின்றோம்

**திருமதி.செ.அன்ரன்சோமராஜா**
SLEAS – Class I
வலயக்கல்விப் பணிப்பாளர், வவுனியா தெற்கு

16.11.2012 அன்று அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் இலங்கை கல்வி நிர்வாக சேவையில் வகுப்பு I இற்கான பதவியுயர்வு வழங்கப்பட்டு கல்விச்சேவையில் உச்ச நிலையைப் பெற்ற எமது வலயக் கல்விப் பணிப்பாளர் மேன்மேலும் உயர்ச்சிபெற மனதாரபாராட்டி வாழ்த்துகின்றோம்.

உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்
வலயக்கல்விஅலுவலகம், வவுனியா தெற்கு.

16)(5.6.7)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்/கைதடி குருசாமி வித்தியாலய மாணவன் செல்வன் கந்தசாமி பரணிதரன் அவர்கள் 2012 தரம் 05 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 158 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்தமையைப் பாராட்டுவதோடு மேலும் பட்டங்கள் பல பெற மனதார வாழ்த்துகின்றோம். அத்துடன் இவரை நல்வழிப்படுத்திய கல்லூரி அதிபர் த.கணேசபாலேந்திரன் அவர்களுக்கும், ஆசிரியை செல்வி சி.லதா அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(21593)(5-6-7)

வாழ்த்துவோர்:
கைதடி வடக்கு, கைதடி. பெற்றோர், பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், அத்தைமார், உறவினர்கள்.

இதோ!

சித்த ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி

தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல் சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

**சித்தாரா அதிமதுரம் ஆடாதோடை சிரப்**

யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

Manufactured By:
**SITHARA PRODUCTS**
Puttalam Road, Chilaw
(Reg.No:- 6382) AR/No.228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(குறிப்பு: சத்திரச் சந்திக்கு அருகில்) T.P. 021 222 2567

**உதயன் விளம்பரத் தொடர்புக்கு**
advt@uthayan.com
0215671111

**வீடும் காணியும் விற்பனைக்கு**

நல்லூர் முருகன் ஆலயத்துக்கு அண்மையில் பண்டாரக்குள ஒழுங்கையில் 3 ½ பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:0776016357
(25379)(5-7-6)

**தென்மராட்சியில்**

தரம்: 3,4,5 மாணவர்களுக்கு ஆங்கிலம் வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு:077 1843 903
(25424)(45.6.7)

**மினிபஸ் விற்பனைக்கு**

பாவனையிலுள்ள மிற்சுபிஷி ரோசா, 29 -xxxx இலக்கம் கொண்ட மினிபஸ் விற்பனைக்குண்டு.
தொடர்பு:077 8153 187
(25488)(45.6.7)

**சேவை**

விமான டிக்கட்டுகள் மிகக்குறைந்த கட்டணத்தில் பெற்றுக் கொள்ள..............
ரொட்டினா டுவர்ஸ் & ட்ரவல்ஸ்
இல. 687, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
(சி/4418)(3.6.7) தொ.பே - 0212219686

**பணிப்பெண் தேவை**

வீட்டு வேலைகள் செய்வதற்கு யாழ். மாநகரசபை எல்லைக்குள் உள்ள வீட்டினர்க்கு பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 077 4289 795
(25486) (45.6.7)

**தவறிவிட்டது**

செல்வரோதி வசந்தரூபன் இராமநாதபுரம் புதுக்காடு இவருடைய அடையாள அட்டை 711100350V, சாரதி அனுமதிப் பத்திரம் A 010325948, காப்புறுதிப் பத்திரம் என்பன கிளிநொச்சி இராமநாதபுரம் செல்லும் வழியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு: 021 3200 035
தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
(24246) (45.6.7)

**தவறிவிட்டது**

தோப்பு வீதி, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி எனும் முகவரியுடைய சின்னத்துரை செந்தூரன் என்பவரின் தே.அ.அ. (840463540V) மீசாலைக்கும் மட்டுவிலுக்குமிடையில் தவறிவிட்டது.
[illegible]
தொடர்புகொள்ளவும்.
தொடர்பு: 077 7480 085, 077 5020 907
(25498) (45.6.7)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2012 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 158 புள்ளிகளைப் பெற்று எமது வித்தியாலயத்துக்கு பெருமை சேர்த்த செல்வன் கந்தசாமி பரணிதரன் அவர்களையும்
100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற

| | |
|---|---|
| ச.தேவப்பிரகாஸ் | 130 புள்ளி |
| இ.சாருஜன் | 130 புள்ளி |
| ம.சாளுஜா | 119 புள்ளி |
| இ.அனிஸ்ரன் | 110 புள்ளி |

ஆகிய மாணவர்களையும் அத்துடன் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
பாடசாலைச் சமூகம்,
யா/கைதடி குருசாமி வித்தியாலயம், கைதடி.

## அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையின் அதிபர் **ஆறுமுகம் தங்கவேலு** அவர்கள் 02.10.2012 அன்று மாண்பு மிகு மஹிந்த ராஜபக்ஷ அவர்களால் அதிபர் சேவைத் தரம் 2.II இற்கு பதவி உயர்வு வழங்கப்பட்டமையைப் பாராட்டுவதோடு அவர் மேலும் பல பட்டங்கள் பெற்று சேவையில் உயர்ந்து சிறப்புடன் வாழ மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்கள்,
யா/கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை.
[25457][5.6.7]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதில் பிரதம நீதியரசரை நியமிக்க முடியாது

கொழும்பு,நவ.19

பிரதம நீதியரசர் சேவையில் இருக்கும் பட்சத்தில் பதில் பிரதம நீதியரசர் ஒருவரை நியமிக்க முடியாது என்று ஃப்ரீ மார்ச் சட்டத்தரணிகள் அமைப்பின் தலைவர் சட்டத்தரணி குணரத்ன வன்னிநாயக்க தெரிவித்தார்.

பிபிசி சிங்கள சேவைக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பதில் நீதியரசர் ஒருவரை இலங்கைச் சட்டத்தின்படி நியமிக்க முடியாது என்று அவர் கூறினார். (ச)



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது 67 ஆவது பிறந்த தினத்தை நேற்று வெகு விமரிசையாக கொண்டாடினார். இதன்போது விசேட பூஜை வழிபாடுகளில் ஜனாதிபதி கலந்துகொண்டார். நாட்டின் பல பாகங்களிலும் ஜனாதிபதியின் பிறந்த தினத்தை முன்னிட்டு விசேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

## டிசெம்பரில் ஓர் அதிசயம் 824 வருடங்களுக்குப் பின்

Dec-2012

| Mon | Tue | Wed | Thu | Fri | Sat | Sun |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | | | | | | |

கொழும்பு,நவ.19

அடுத்துவரும் டிசெம்பர் மாதத்தில் ஐந்து ஞாயிறு, ஐந்து சனி, ஐந்து திங்கட் கிழமைகள் வரவுள்ளன.

இந்த அதிசயம் எண்ணூற்று இருபத்திநான்கு வருடங்களுக்கு ஒரு முறை தான் நிகழும் என்று கூறப்படுகிறது. இதேவேளை இந்தத் தகவலை எல்லோருடனும் பகிர்ந்து கொண்டால் அதிகளவு பணம் கிடைக்கும் என்பது சீனர்களது நம்பிக்கை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## திமிங்கிலம், டொல்பினை பார்வையிட புதிய நடைமுறை

### வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம் நடவடிக்கை

கொழும்பு,நவ.19

இலங்கைக் கடற்பரப்பிலுள்ள திமிங்கிலம் மற்றும் டொல்பின்களைப் பார்வையிடுவதற்கு புதிய சட்டங்களை நடைமுறைப்படுத்த வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கற்பிட்டி, திருகோணமலை மற்றும் மிரிஸ்ஸ ஆகிய கடற்பரப்புகளில் திமிங்கிலம் மற்றும் டொல்பின்களை பார்வையிடுவதற்கு வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வருகை தருகின்றனர் என்று வனவிலங்குத் திணைக்களப் பணிப்பாளர் எச்.பி.ரத்நாயக்க தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

திமிங்கிலம், டொல்பின்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு இந்தப் புதிய சட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளனர்.

இதேவேளை சுற்றுலா பயணிகள் பயணிக்கும் படகுகள் சிறந்த தரத்தில் இருக்க வேண்டியதுடன், அதனை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழை பெற்றுக் கொண்டிருக்க வேண்டியது கட்டாயம்.

படகுகளில் பாதுகாப்பு அங்கிகள் இருக்க வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

திமிங்கிலம் மற்றும் டொல்பின்களின் உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தாத வகையில் அவற்றைக் பார்வையிட வேண்டும்.

100 மீற்றர் தொலைவில் படகை நிறுத்தி, திமிங்கிலங்களை பார்வையிட முடியும். 50 மீற்றர் தொலைவில் படகை நிறுத்தி டொல்பின்களைப் பார்வையிடமுடியும்.

இவ்வாறு பார்வையிடச் செல்லும் சுற்றுலாப் பயணிகள் கடலில் இறங்கி உயிரினங்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்படக் கூடாது.

இதனைக் கண்காணிப்பதற்காக வனவிலங்கு அதிகாரிகளுடனான அலுவலகம் ஒன்றை அந்த இடங்களில் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சுற்றுலா பயணிகளுக்காக அனுமதிச் சீட்டை விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திமிங்கிலம் மற்றும் டொல்பின்களைப் பார்வையிடுவதற்கு வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணி ஒருவருக்கு கட்டணமாக 8 டொலர்களும், உள்நாட்டு சுற்றுலாப் பயணி ஒருவருக்கு 20 ரூபாவும் அறவிடப்படும்.- என்றார். (ச)

# ஆஸிக்கு ஆள் கடத்தல்; தடுக்க கூட்டு நடவடிக்கை

### இலங்கை அரசுடன் தகவல் பரிமாற்றம்

கொழும்பு,நவ.19

ஆள்கடத்தல் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த ஆஸ்திரேலியாவும் இலங்கையும் கூட்டாக இணைந்து நடவடிக்கை எடுக்கவுள்ளன.

ஆள்கடத்தல் நடவடிக்கைகளுக்கு இலங்கை அரசுடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது என்று ஆஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

சட்டவிரோத ஆள்கடத்தல்காரர்கள் தொடர்பிலான சகல தகவல்களையும் இலங்கை அரசுடன் பகிர்ந்து கொள்ள ஆஸ்திரேலியா எதிர்பார்ப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.

இலங்கையிலிருந்து மக்களை சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்லும் நபர்கள் பற்றிய தகவல்களை ஆஸ்திரேலியா சேகரித்துள்ளது.

இந்தத் தகவல்கள் இலங்கை அரசுடன் பரிமாறிக் கொள்ளப்படவுள்ளன என்று ஆஸ்திரேலிய அரசு அறிவித்துள்ளது. (ச)

## காஸ் விலையின் அதிகரிப்புக்கு அனுமதி கிடைக்குமா?

கொழும்பு,நவ.19

எரிவாயுவின் விலையை அதிகரிக்குமாறு லாஃப் எரிவாயு நிறுவனம் நுகர்வோர் விவகார அதிகார சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதற்கமைய உலக சந்தையில் அண்மைக் காலமாக காணப்பட்ட எரிபொருள் விலைகள் தொடர்பில் ஆராய்ந்து வருவதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர்தெரிவித்தார்.

எனினும், எரிவாயு நிறுவனத் துக்கு விலை உயர்வை மேற் கொள்வதற்கான அனுமதி தொடர்பில் தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்று சபையின் தலைவர் ரூமி மர்சூக் கூறினார். (ச)

## நீரிழிவு நோயால் பாதிக்கப்படும் மாணவர்கள்

**மாணவர்களிடத்தில் உள்ள உணவுப் பழக்க வழக்கங்களே இதற்குக் காரணமாக அமைந்துள்ளன**

கொழும்பு,நவ.19

நாட்டிலுள்ள பாடசாலை மாணவர்களில் 15 வீதமானோர் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அமைச்சு மேலும் தெரிவித்ததாவது:-

மாணவர்களிடத்தில் உள்ள உணவுப் பழக்க வழக்கங்களே இதற்குக் காரணமாய் அமைந்துள்ளன.

மாணவர்களில் நான்கு வீதமானோர் அதிகளவான உடற்பருமனைக் கொண்டுள்ளனர். இதனால் கூடுதலான பாடசாலை மாணவர்கள் நீரிழிவுநோயின் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்தநிலையில் நீரிழிவு நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவராதுவிடின் 2050 ஆம் ஆண்டளவில் இலங்கையின் சனத்தொகையில் 50 வீதமானோர் இந்த நோயால் பாதிக்கப்படுவர்- என்று தெரிவித்துள்ளது. (ச)

## எம்.பிக்களுக்கு பழுதடைந்த உணவு

### விசாரணை நடக்கிறது என்கிறார் சபாநாயகர்

கொழும்பு,நவ.19

நாடாளுமன்றில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக வழங்கப்படும் உணவு கடந்த வெள்ளிக்கிழமை பழுதடைந்த சம்பவம் தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

விசாரணை தொடர்பில் நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே சபாநாயகர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றில் சமைக்கப்படும் உணவு தினமும் சோதனையிடப்படுகின்றது. கடந்த வெள்ளிக்கிழமையும் சோதிக்கப்பட்டது. பருப்பு, கொஹில போன்றவற்றில் ஓரளவு ஆசனிக் அமிலம் கலந்திருந்ததாகக் கண்டறியப்பட்டது.

அவற்றைப் பரிசோதனைக்கு அனுப்பினோம். நாடாளுமன்றுக்குக் கொண்டு வரப்படும் மரக்கறிகளைச் சமைப்பதற்குமுன்பே சோதனையிடுமாறு நாம் உத்தரவிட்டிருக்கிறோம். ஆசனிக் அமிலம் கலந்து காணப்பட்ட பருப்பு சமைக்கப்படவில்லை. இது தொடர்பாக விசாரணைகள் இடம்பெறுகின்றன - என்றார். (ச-சி)

### ஆளும் கட்சியைச் சேர்ந்த

## அரசியல்வாதிகளுக்கு எதிராக ஊழல் மோசடி குற்றச்சாட்டு

**லஞ்ச ஊழல், காணிகளை அபகரித்தல், நிதி மோசடி உள்ளிட்ட பல்வேறு குற்றச் சாட்டுக்கள் சுமத்தப் பட்டுள்ளன.**

கொழும்பு,நவ.19

ஆளும் கட்சியின் பிரதேச அரசியல்வாதிகளுக்கு எதிராக ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

ஆளும் கட்சியில் முக்கிய பதவிகள் வகிக்கும் 50 பிரதேச அரசியல்வாதிகளுக்கு எதிராகவே இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

லஞ்ச ஊழல், காணிகளை அபகரித்தல், நிதி மோசடி உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப் பட்டுள்ளன. இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஜனாதிபதி விசாரணைப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

பிரதேச சபை, நகரசபை, மாநகரசபைத் தலைவர்கள், பிரதித் தலைவர்கள், உறுப்பினர்கள் உள்ளிட்ட பலருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சில பிரதேச செயலாளர்களுக்கு எதிராகவும் ஜனாதிபதி விசாரணைப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இதேவேளை, கண்டி மாவட்ட பிரதேச சபையொன்றின் தலைவர் இரண்டு கோடி ரூபா நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## கைதிகளின் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்க வேண்டும்

### ஸ்ரீநாத் பெரேரா வேண்டுகோள்

கொழும்பு,நவ.19

உயிரிழந்த கைதிகளின் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டும் என்று அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் அமைப்பின் உறுப்பினரும், சட்டத்தரணியுமான ஸ்ரீநாத் பெரேரா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அண்மையில் வெலிக்கடைச் சிறையில் இடம்பெற்ற வன்முறையில் கைதிகள் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட அனைத்து கைதிகளின் உறவினர்களுக்கும் நட்ட ஈடு வழங்கப்பட வேண்டும்.

போர் இடம்பெற்ற காலத்தில் மரண விசாரணையின்றி சடலங்களை அடக்கம் செய்யும் வகையில் வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது.

தற்போது அவ்வாறான ஓர் அவசியம் இல்லை. எனினும், அரசால் மேற்கொள்ளப்படும் பிரேத பரிசோதனைகள் குறித்து திருப்தி அடைய முடியாது. பிரேத பரிசோதனைகளுக்கு சர்வதேச கண்காணிப்பாளர்களின் பிரசன்னம் அவசியமானது.-என்றார். (ச)

## மது போதையில் வாகனம் செலுத்திய 6 சாரதிகள் மாட்டினர்

கொழும்பு,நவ.19

மது போதையில் வாகனம் செலுத்திய 6 சாரதிகளை, கண்டி போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு கைது செய்துள்ளனர்.

பொலிஸார் நேற்று முன் தினம் மேற் கொண்ட திடீர் சோதனையின் போதே மது போதையில் இருந்த 6 சாரதிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த நபர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தும் நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமண சேவை

பல்வேறு வகையான ஆண்/பெண்
ஜாதகங்கள் எம்மிடம் உள்ளன.
(#/2226)(6-7-8) தொடர்பு : 077 8235445

## காணி விற்பனைக்கு

186/6 கில்னர் லேன், யாழ்ப்பாணத்தில்
சிறந்த குடியிருப்புப் பகுதியில்
பூர்த்தியாக்கப்படாத வீடும், கிணற்றுடன் 1
பரப்பும், 1 குழியும் கொண்ட காணியும்
உடனடியாக விற்பனைக்கு
(#/4547)(.8,14) தொடர்பு : 077 1509171

## மரண அறிவித்தல்

### நடராஜா பத்மநாதன் (பற்பன்) ஆசாரி



வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும், இல.17, அச்சுக்கூட வீதி (தலையாழி) கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா பத்மநாதன் நேற்றுமுன்தினம் (17.11.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமார் - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், குகனேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், சீதாலட்சுமி, யோகநாதன், ஜேகநாதன், கமலநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், அரியபுத்திரன், ராஜேஸ்வரி, காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் சண்முகராஜா, அன்பரசன், நகுலேஸ்வரி, காலஞ்சென்ற முருக நண்பனான் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற மங்கலேஸ்வரி மற்றும் நிரஞ்சனா, திருக்குமரன், பத்மகுமார் ஆகியோரின் தந்தையும், உதயகுமார், நமணி, டயானி ஆகியோரின் மாமனும், உதித்தன், நிலாணி, பவித்திரன், மிஹானா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2012) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.17, அச்சுக்கூட வீதி,
(தலையாழி) கொக்குவில். (25500)(3.14)

தகவல்:
குடும்பத்தினர்.

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
15.04.1954

மறைவு
11.12.2010

திதி : பூர்வபக்கஷஷ்டி

### திருமதி சின்னத்துரை பரமேஸ்வரி

ஆண்டுகள் இரண்டு சென்றாலும்
உன் நினைவுகள் எம்மை விட்டு
அகலவில்லை தெய்வமே உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் நினைவுடன்:
கணவர், பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

நூல் நிலைய வீதி,
கைதடி தெற்கு, கைதடி. (25495)(6.7.8)

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தையா யோகம்



கைதடி தென்கிழக்கு, கைதடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா யோகம் 17.11.2012 சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பியன் - பொன்னி தம்பதியரின் அன்புமகளும், காலஞ்சென்றவர்களான சுப்பன் - சோதி தம்பதியரின் அன்புமருமகளும், கந்தையாவின் அன்புமனைவியும், காலஞ்சென்ற கதிரவேலு மற்றும் சின்னம்மா, சின்னப்பிள்ளை, கதிர்காமு ஆகியோரின் அன்புச்சகோதரியும், சுதாயினிதேவி, சுயந்தினி, பாஸ்கரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், ஜெயச்சந்திரன் (வாகன சாரதி பொது சுகாதார திணைக்களம் நல்லூர்), பத்மநாதன், மனோரஞ்சினி ஆகியோரின் அன்புமாமியும், தயாபரன், தனுசன், மகிந்தன், தர்ஜிலிகா, தர்மிகா, மகிந்தரூபன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2012) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊத்தலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி தென்கிழக்கு, கைதடி.
(25493)(6.7.8)

தகவல்:
பாஸ்கரன் (மகன் லண்டன்)

## கடையநல்லூர் அகதிமுகாமில் 12 இலங்கையரை காணவில்லை

**கியூ பிரிவுப் பொலிஸார் விசாரணை**

திருநெல்வேலி, கடைய நல்லூர் இலங்கை அகதிகள் முகாமில் 12 பேரைக் காண வில்லை. அவர்கள் ஆஸ்திரேலியாவுக்குச் சென்றார்களா என்பது குறித்து வருவாய்த் துறையினர் மற்றும் கியூ பிரிவுப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

கடையநல்லூர் அருகேயுள்ள போக நல்லூர் பகுதியில் இலங்கை அகதிகள் முகாம் உள்ளது. இங்கு 139 குடும்பங்கள் வசித்து வருகின்றன. 15 தினங்களுக்கு ஒரு முறை முகாமில் இருப்பவர்கள் குறித்து கணக்கெடுப்பு நடத்தப்படுவது வழக்கம்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை கடையநல்லூர் வருவாய் ஆய்வாளர் சுப்பிரமணியன், கிராம நிர்வாக அலுவலர் ஜெகந்நாதன், கியூப் பிரிவு உதவி ஆய்வாளர் சுரேஷ் குமார் ஆகியோர் முகாமில் இருப்பவர்க்ள் குறித்து கணக்கெடுப்பு செய்தனர்.

இதன்போது, முகாமைச் சேர்ந்த சந்திரமோகன் (வயது 28), பேரின்பநாதன் (வயது 30), நிரோஷன் (வயது 29), பஷீதா (வயது 25), தினேஷ்குமார் (வயது 29), வசந்தகுமார் (வயது 34), கணேசன், ரீகன், கமலநாதன், செல்வராஜ், சிவதர்ஷன், கலைச்செல்வன் ஆகிய 12 பேரையும் காணவில்லை.

அவர்கள் அனைவரும் ஆஸ்திரேலியாவுக்குச் சென்றிருக்கலாமா என்பது குறித்து வருவாய்த் துறை அதிகாரிகளும், கியூ பிரிவு பொலிஸாரும் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

(வ)

## இளைஞன் காயம்

தென்மராட்சி, நவ.19

கட்டுத்துவக்கு வெடித்து இளைஞனுக்கு காயமேற்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பூநகரி, வெட்டுக்காடு பகுதியில் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த நாகேந்திரம் ரகுவரன் (வயது-23) என்னும் இளைஞனுக்கு முதுகுப் பகுதியில் காயமேற்பட்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக் யாழ். போதனா வைத்தியசாலைக்கு [illegible]

(ம-9)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவபாக்கியம் சரவணை



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி வடக்கு, விளங்கியாவத்தையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் சரவணை நேற்று (18.11.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சரவணையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், இராஜேஸ்வரி, இந்திராணி காலஞ்சென்றவர்களான, தவராசா, ஞானசேகரம் மற்றும் சந்திரலேகா, வசந்தாதேவி, தேதீஸ்வரன், காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன் மற்றும் குலசேகரம், வாசுகி, சுதாஜினி, மேனகா ஆகியோரின் பாசமிகு தாயும், செல்வராணி, கிளாறிஸ், சாந்தகுமாரி, கிரிசாந்தினி, சத்தியகாந்தி, யோகராசா, யுவராசா, சிறிஸ்கந்தராஜா, கெங்காதரன், இளங்கோவன், விஜயகாந்தன் ஆகியோரின் பாசமிகு மாமியும், சந்திரபூபதியின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அச்சுவேலி வடக்கு, விளங்கியாவத்தை,
அச்சுவேலி. (25493)(6.7.8)

தகவல்:
குடும்பத்தினர்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும், நன்றி நவிலலும்

மலர்வு
12 ★ 12 ★ 1927



உதிர்வு
20 ★ 10 ★ 2012

### திருமதி செல்லையா கமலாம்பிகை

" தாயுமாகி தந்தையுமாகி எங்களை வாழவைத்த தெய்வமே
எங்கள் உடலில் உயிரும் உணர்வும் இருக்கும் வரை இதயத்தில்
உங்களை நிறுத்தி பூஜித்துக் கொண்டே இருப்போம்."

கடந்த 20.10.2012 அன்று இறைபத மெய்திய எமது அன்னையின் எதிர்பாராத மறைவினால் நாங்கள் அதிர்ச்சி அடைந்து கலங்கி நின்ற போது செய்தி அறிந்து ஓடோடி வந்து சகல வழிகளிலும் பேருதவி செய்தவர்களுக்கும் தொலைபேசி மூலம் இரங்கலும் ஆதரவும் தெரிவித்த உள்நாட்டு, வெளிநாட்டு உறவுகளுக்கும் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன், இன்று (19.11.2012) திங்கட்கிழமை மு.ப 8 மணியளவில் வில்லூன்றி புனித தீர்த்தக்கரையில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் (21.11.2012) புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் மற்றும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

20, பிரப்பங்குளம் வீதி,
வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.
நி.மு: 6ஆம் வட்டாரம், மண்டைதீவு. (25496)(3.8)

செ.நாகரத்தினம்
(மகன்)
மற்றும்
குடும்பத்தினர்.


ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம் veta



யாழில் பல்கலைக்கழக, தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் 5000க்கு மேற்பட்டோர் தெரிவு செய்து வெற்றி பெற்று நிரூபிக்கப்பட்ட Experts in English Training

Spoken English புதிய பிரிவுகள் ஆரம்பம்.

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
| --- | --- | --- | --- |
| Sat, Sun 7.00 a.m. | Sat, Sun 2.30 p.m. | Mon, Web 9.00 a.m | Sat, Sun 7.45 a.m. |
| Mon, Wed, 9.30. a.m. | Tue,Thu 9.30 a.m. | Wed,Fri 9.30 a.m. | Tue,Thu 8.00 a.m. |
| Wed, Fri 3.30 p.m. | | | |

சர்வதேச ஆங்கில பரீட்சைகள்

UK செல்பவர்களுக்கான A1-Exam (திருமணம் செய்து UK செல்வதற்கான) B1-Exam (Student Visa மூலம் UK செல்வதற்கான) City & Guilds Approved Centre IELTS •Unique Test Tips •Latest course Materials

DMI INTERNATIONAL ENGLISH COLLEGE

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
| --- | --- | --- | --- |
| [illegible] வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) | M.M.V வீதி, | கண்டி வீதி, (HNB அருகில்) | கே.கே.எஸ். வீதி, (NSB வங்கி அருகில்) Jet மோட்டேர்ஸ் சந்தி |
| Tel.: 021-222 4403 | Tel.:021-226 2470 | Tel.:021-227 0243 | Tel.:021-224 1970 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

## கனடாவின் ஸ்காபுறோ நகரில்
# இன்று திரையிடப்படுகின்றது 'மௌனிக்கப்பட்ட குரல்கள்'

கனேடியத் தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் நோர்வே நாட்டைச் சேர்ந்த பீற் ஆர்னெஸ்றற் என்பவரால் தயாரிக்கப்பட்ட 'மௌனிக்கப்பட்ட குரல்கள்' எனும் ஆவணத்திரைப்படம் ஸ்காபுறோ நகரில் இன்று திரையிடப்படுகினறது.

இலங்கையில் நடைபெற்ற மனித குலத்திற்கு எதிரான அநீதிகளை தங்கள் உயிர்களை பணயம் வைத்து அனைத்துலகத்தின் பார்வைக்கு கொண்டு வருகின்றது இந்தப்படம். நீதிக்காக போராடிய ஐம்பதுக்கு மேற்பட்ட இலங்கையைச் சேர்ந்த ஊடகவியலாளர்களின் கதையாக இந்த ஆணவத்திரைப்படம் அமைந்துள்ளது.




இலங்கையில் பேச்சுச் சுதந்திரம் ஊடக சுதந்திரம் யாவும் மறுக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் இலங்கையில் இடம்பெற்ற மனித குலத்துக்கு எதிரான அநீதிகள் இன்று சர்வதேச போர்க் குற்ற விசாரணையை அந்த நாடு எதிர்கொள்ளும் நிலையை எட்டியுள்ளது. பல ஊடகவியலாளர்களது குரல்வளைகள் நெரிக்கப்பட்டு காவுகொள்ளப்பட்டுள்ளன. எஞ்சியோர் இலங்கையை விட்டு வெளியேறி பல்வேறு நாடுகளிலும் அரசியற் தஞ்சம் கோரியுள்ளனர்.

இந்தநிலையில் 'மௌனிக்கப்பட்ட குரல்கள்' எனும் ஆவணப் படம் ஊடாக இவர்களது இதயம் பேசுகின்றது எனத் தெரிவிக்கப்படுகிறது. (3)

## நல்லூரில் இன்று சூரன்போர்

நல்லூர், நவ.19

பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் இன்று பிற்பகல் 2மணிக்கு விசேட பூசை வழிபாடுகள் ஆரம்பமாகி மாலையில் சூரன்போர் இடம்பெறவுள்ளது.

சூரன்போரை முன்னிட்டு பிற்பகல் 2 மணி முதல் ஆலய சூழலினூடான போக்குவரத்தை மாநகரசபை தடைசெய்யவுள்ளது.

இதனைவிட குடாநாட்டில் ஏனைய முருகன் ஆலயங்களிலும் இன்று மாலை சூரன்போர் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (3-17)

* * *

## ஏனைய ஆலயங்களிலும்.....

தென்மராட்சி, நவ.9

சாவகச்சேரி சந்திரசேகர வாரிவளநாதசிவன் ஆலயத்தில் நாளை திங்கட்கிழமை மாலை சூரன் போர் நடைபெறவுள்ளது. (3-9)

* * *

நெடுந்தீவு மேற்கு கரமத்தை கந்தசுவாமி கோயிலில் இன்று பி.ப. 4.30மணிக்கு இடம்பெறும் விசேட பூசைகளை அடுத்து சூரசங்கார நிகழ்வு இடம்பெறும்.(7)

* * *

அல்வாய் வடக்கு ஸ்ரீ வீரபத்திரர் ஆலய கந்தசஷ்டி திருவிழா சூரசங்காரம் மாலை 4மணிக்கு நடைபெறும்.

* * *

கைதடி இணுங்கித் தோட்டம் கந்தசுவாமி ஆலய கந்தசஷ்டி திருவிழாவின் சூரசங்காரம் மாலை 4மணிக்கு விசேட பூசைகளுடன் இடம்பெறும்.

* * *

சரவணை பள்ளப்புலம் முருகமூர்த்தி ஆலய கந்தசஷ்டி திருவிழாவில் சூரசங்காரம் மாலை 4மணிக்கு இடம்பெறும்.

* * *

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி ஆலயத்தின் கந்தசஷ்டி திருவிழா மாலை 4.30மணிக்கு நடைபெறும்.

* * *

நீர்வேலி கந்தசுவாமி ஆலய கந்தசஷ்டி திருவிழாவின் சூரசங்காரம் நிகழ்வு மாலை 4மணிக்கு நடைபெறும்.3-14)

## அம்பாள் முன்பள்ளி கட்டடத் திறப்பு விழா

தென்மராட்சி, நவ.19

மட்டுவில் சந்திரபுரம் அம்பாள் முன்பள்ளி கட்டடம் எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

நா.திருச்செல்வம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு, முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் கலந்துகொண்டு புதிய கட்டடத்தைத் திறந்து வைப்பார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வேள்ட்விஷன் நிறுவன யாழ். மாவட்ட பிரதிநிதி ர.ஜீ. ரொசைரோ, தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு. பாக்கியராசா ஆகியோர் கலந்துகொள்வர். முன்பள்ளி சிறார்களின் கலை நிகழ்வுகளும்இடம்பெறும். இந்த முன்பள்ளிக் கட்டடம் வேள்ட் விஷன் நிறுவனத்தினரால் நிர்மாணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (3-9)

## நேற்றும் நாடு கடத்தப்பட்டனர் 50 புகலிடக் கோரிக்கையாளர்கள்

ஆஸ்திரேலியாவிலிருந்து மேலும் 50 புகலிடக் கோரிக்கையாளர்கள் நேற்று நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

கிறிஸ்மஸ் தீவுகளிலிருந்து நேற்று குறித்த இலங்கையர்கள் விசேட விமானம் மூலம் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதுவரையில் மொத்தமாக 282 இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

அண்மைக் காலத்தில் படகுகளில் ஆஸ்திரேலியாவைச் சென்றடைந்தவர்களே இவ்வாறு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

நாடு கடத்தப்பட்டவர்கள் எவரையும் புகலிடக் கோரிக்கையாளர்களாக கருத முடியாது எனவும், இதனால் குறித்த நபர்களை நாடு கடத்துவதற்கு சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் தடையில்லை எனவும் ஆஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் கிறிஸ் பொவுன் தெரிவித்துள்ளார்.

உரிய பயண ஆவணங்கள் இன்றி குறித்த நபர்கள் நாட்டுக்குள் பிரவேசித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தன்னார்வ அடிப்படையிலும் பலவந்தமான முறையிலும் நாடு கடத்தப்பட்ட இலங்கையர்களின் மொத்த எண்ணிக்கை 380 என கிறிஸ் பொவுன் தெரிவித்துள்ளார். (3)

## வறிய மாணவருக்கு பாதணிகள்

யாழ்ப்பாணம், நவ.19

யாழ். வை.எம்.சீ.ஏ. நிறுவன வாழ்வாதார நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வறுமையில் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு பாதணி வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நல்லூர் சாதனா பாடசாலையில் இடம்பெற்றது.

பாடசாலை உப அதிபர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ். வை.எம்.சீ.ஏ. நிறுவனத் தலைவர் சு.புத்தி சிகாமணி மாணவர்களுக்கு பாதணிகளை வழங்கினார். நிகழ்வில் வை.எம்.சீ.ஏ. நிறுவன பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். (3-9)

## விபத்தில் இளைஞர் காயம்

தென்மராட்சி, நவ.19

கொடிகாமம் பகுதியில் வீதி விபத்தில் சிக்கி இளைஞர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது. சம்பவத்தில் காயமடைந்த கொடிகாமம் கச்சாய் வீதியைச் சேர்ந்த கணேஸ் கலைவேந்தன் (வயது-27) என்பவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-9)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
23.12.1944
விண்ணில்
30.11.2011

திதி : சஷ்டி 19.11.2012

அமரர் செல்லையா வீரராசா

( ஓய்வு பெற்ற மேற்பார்வையாளர்,
அரசினர் வைத்தியசாலை, வல்வெட்டித்துறை)

காவலனாய் எமக்கிருந்து நற்பணிகள் செய்து வைத்தாய்
ஆவலாய் நாமுயர ஆனவைகள் தேடித்தந்தாய்
காலனவன் கயமைக்கு இரையாகி பிரிந்து விட்டாய்
சீலனாய் வாழ்ந்து சென்ற உன் நினைவு அழியாது என்றுமே

உங்கள் நினைவுடன் வாழும்:
வீ. கிரிதரன் (மகன்),
வீ. துஷியா (மகள்),
கி. தயாளினி (மருமகள்).

'செல்வகிரி'
கவிஞர் செல்லையா வீதி,
அல்வாய். (25504)(6.7.8)

## மரண அறிவித்தல்

### தியாகராஜா சச்சிதானந்தம்



சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், கைதடி தெற்கு கைதடியை வதிவிடமாகவும் கொண்ட தியாகராஜா சச்சிதானந்தம் நேற்று முன்தினம் (17.11.2012) சனிக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகராஜா - முத்துப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - இராசம்மா தம்பதியரின் மருமகனும், செல்வராணியின் (ஓய்வு பெற்ற கிராமிய வங்கி லிகிதர்) அன்புக் கணவரும், ரிஷிகேசன் (ஆசிரியர், சென்.ஜோன்ஸ் கல்லூரி, விரிவுரையாளர் பட்டப் படிப்புக்கள் பிரிவு, யாழ்ப்பாணக் கல்லூரி), சுலக்ஷனா (கனடா), தர்சிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ராதிகா, வரதராஜன் (மாதகல் -கனடா), சத்தியரூபன் (முள்ளிவளை - வவுனியா), சிவகுமாரி (ஜேர்மன்), தாரணி (லண்டன்), பூங்கோதை (அமெரிக்கா) ஆகியோரின் மாமனும், ரிஷாங்கி, விஷாளி, புருசோத், பிரவீன், அட்ஷயன், அப்ஷயன் ஆகியோரின் பேரனும், சரஸ்வதி, விஜயலக்ஷ்மி, கங்காதரன் (ஓய்வு பெற்ற அதிபர் - வீமன்காமம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் சகோதரரும், பத்மாசினி, கிருஷ்ணகுமார் ஆகியோரின் உடன்பிறவாச்சகோதரரும், காலஞ்சென்றவர்களான சின்னப்பா, புவனேஸ்வரி, சிவபாலன் மற்றும் அகிலேஸ்வரி, இராசமலர்தேவி, கங்காதரன் ஆகியோரின் மைத்துனரும், தங்கராசா (கல்வியங்காடு), சிவானந்தசோதி, செல்வரத்தினம் ஆகியோரின் சகலனும், அனுரங்கா, சுதர்சினி, தயாளினி, தமிழினி ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2012) திங்கட் கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி ஊரியான் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிள்ளையார் கோவில் வீதி,
கைதடி தெற்கு, கைதடி. (25493)(6.7.8)

தகவல்:
ரிஷிகேசன் (மகன்)

## தென்மராட்சியில் வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி

தென்மராட்சி, நவ.19

கொடிகாமம் பிரிவு பொது சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

தடுப்பூசி ஏற்றப்படும் இடங்கள் தொடர்பாக ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டு அந்தந்த நிலையங்களில் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (3-9)

## சத்திய சாயி சேவா நிலையத்தின் மகளிர் தினம்

யாழ்ப்பணம்,நவ.19

திருநெல்வேலி சேர். பொன் இராமநாதன் வீதியிலுள்ள பகவான் ஸ்ரீ சாயி சேவா நிலையத்தின் மகளிர் தின நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு பிரசாந்திக்கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. முற்பகல் 10.45மணிக்கு சிறப்புச் சொற்பொழிவும், மாணவிகளின் கலை நிகழ்வும் 'ஒன்பது ஒழுக்கக் கோவைகள்' எனும் நாடக [illegible] படவுள்ளது.(3-13)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அத்திபாரமாக அமைந்துள்ள பரமேஸ்வராக் கல்லூரியின்
நிறுவுநரும், சைவப்பெருவள்ளலுமான
சேர் பொன். இராமநாதன் அவர்களின்
குருபூசைத்தின விழா
இன்று (19.11.2012) திங்கட்கிழமை
நிகழும் நந்தன வருடம் கார்த்திகைத்திங்கள் 04 ஆம் நாள் (19.11.2012)
திருவோண நட்சத்திரம் கூடிய இன்று திங்கட்கிழமை யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகத்திற்கு அத்திபாரமிட்டவரான
சேர் பொன். இராமநாதன் அவர்களின் குருபூசைத்தினமாகும்
இதனையொட்டி இன்று காலை 7.00 மணி தொடக்கம் 8.30 மணி வரை பல்கலைக்கழகத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அருள்மிகு பார்வதி சமேத ஸ்ரீ பரமேஸ்வரப் பெருமானுக்கு அஷ்டோத்தரசத (108) சங்காபிஷேகமும், விஷேட பூசையும் நிகழவுள்ளன. அனைவரையும் வருகை தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். இன்று காலை 8.30 மணிக்குப் பல்கலைக்கழக வளாகத்திலுள்ள சேர் பொன். இராமநாதன் அவர்களின் சிலைக்கும், பல்கலைக்கழக சபா மண்டபத்திலுள்ள (BoardRoom) அவரின் உருவப் படத்துக்கு ,துணைவேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரத்தினம் அவர்கள் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செய்யும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
பரமேஸ்வராக்கல்லூரி, இயக்குநர்சபை,
ஸ்ரீபரமேஸ்வரன் ஆலய பரிபாலன சபை, இந்துமன்றம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
(25384)(6.7.8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கற்பு" இருபாலாருக்கும் பொதுவானது

பே.மேரி சுமித்திரா
யூலனூர்.



"கற்பு" என்பதனைப் பெண்களுக்கு மட்டுமே உரியதொன்றாகக் கருதுவது தவறு. அது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானது. அதாவது "ஒருவனுக்கு ஒருத்தி" என்னும் நிலையே கற்பாகும். வெறுமனே பெண்கள் மட்டுமே கற்பைக் காக்க வேண்டுமென்பதும், தாம் எப்படியும் வாழலாம் என ஆண்கள் நினைப்பதும் அர்த்தமற்றது. எவ்வாறு ஒரு பெண் கற்புடையவளாக இருக்க வேண்டும் என்று சமூகம் எதிர்பார்க்கிறதோ, அதேபோல ஆண்களும் கற்புடையவர்களாக இருக்க வேண்டும்.

ஓர் ஆண் எந்த வழியில் சென்றாலும் இந்தச் சமூகம் கண்டுகொள்வதில்லை. ஆனால் பெண்ணுக்குப் பட்டம் கொடுப்பதற்கென்றே இவள் நடத்தை கெட்டவள் என சர்வசாதாரணமாகக் கூறிவிடுவார்கள் விபசாரி, விதவை என்ற சொற்கள் அகராதியிலிருந்தே அகற்றப்பட வேண்டும்.

ஒரு பெண் கணவனை இழந்துவிட்டால் "விதவை" என்னும் பட்டம் சூட்டி அவளுடைய கண்ணிலே முழிப்பது அபசகுனம் எனக் கருதும் சமுதாயம் ஓர் ஆண் மனைவியை இழந்து விட்டால், அவனுக்கு வேறொரு துணையைத் தேடத் தொடங்கிவிடுகிறது. அல்லது ஆண்மகன் தானாகவே ஒரு துணையைத் தேடிச்சென்று விடுவான். கணவனுக்கு இறப்பு வருவதற்குக்கூட மனைவியே காரணம் என மிக எளிதாக அப் பெண்ணின் மனதை நோகடிக்கத் தொடங்கிவிடுவார்கள் ஊரார்.

ஆண்கள் எதையும் தனித்து நின்று சாதிக்க மாட்டார்கள் என்பதும், ஒரு பெண் துணையின்றி தனது சொந்தக் காலில் நின்று உழைத்து பிள்ளைகளை நல்ல முறையில் வளர்த்துப் பெருமை சேர்ப்பாள் என்பதும் தெளிந்த உண்மை.

"பெண்ணுக்கு நிகரேது இவ்வுலகில்"



திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் **"திலகம்"**, உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

# கனவு காணுங்கள் இலட்சியவாதியாகலாம்

விமலதாஸ் சோபா.



நாம் என்னவாக மாறவேண்டும் என்பதுபற்றி எப்போதும் கனவுகாண வேண்டும். சிலரை நீ என்னவாக வேண்டும் என்பதற்காகப் படிக்கிறாய் என்று கேட்டால் நான் சும்மா ஏதோ படிக்கிறேன் இது தான் என்னுடைய கனவு என்று இல்லை என்று இலகுவாக பதிலளிப்பார்கள். ஆனால் நாம் அப்படியாக வாழக்கூடாது.


நாம் என்னவாக ஆகவேண்டும் என்பதுபற்றி கனவுகாண வேண்டும். ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு நாளும் கனவுகாண வேண்டும்.

உதாரணமாக நான் ஒரு லட்சாதிபதியாக வேண்டும் என்று யோசித்தால், ஒவ்வொரு நாளும் அப்படி ஆக வேண்டும் என கனவு காண வேண்டும். கனவு என்றால் நித்திரையில் வருவதல்ல. எமது மனத் திரையில் நாம் ஏற்படுத்திக் கொள்கின்ற ஒரு நினைவுதான் அந்தக் கனவு. அத்துடன் நாம் என்னவாக வேண்டும் என்பதுபற்றி எமது மனத்துக்கு நாம் கட்டளை இட்டபடியே இருக்க வேண்டும்.

> **"என்னவாக நாம் ஆகவேண்டும் என்பது பற்றிக் கனவுகாண வேண்டும். ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு நாளும் கனவு காணவேண்டும்.**

உதாரணமாக நான் லட்சாதிபதியாக வேண்டும் என்று நினைத்தால் அதையே ஒவ்வொரு (நான் லட்சாதிபதி ஆவேன், நான் லட்சாதிபதி ஆவேன்) நாளும் இடை வேளை நேரம், குளிக்கும்போது, சாப்பிடும்போது, பாடசாலைக்கு அல்லது வெளியிடங்களுக்குத் தயாராகும்போது, பயணங்களின்போது இப்படியாக பல்வேறு விடயங்களின்போது கட்டளை இட்டபடியே இருக்கவேண்டும். இவ்வாறு செய்வதுடன் அதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டோமேயானால் நிச்சயமாக எமது குறிக்கோளை இலகுவாகக் கண்டடையலாம்.

# பெண் என்பவள்




பெண் என்பவள் பூவைப் போல
மென்மையானவள். தன்னை
மற்றவர்கள் எப்போதும் நம்ப
வேண்டும் என்றே அதிகம்
எதிர்பார்ப்பாள்.
ஆனால் மாறாக சந்தேகம் என்ற
புயலில் சிக்கும் போது அதிக
மனஅழுத்தத்துக்கு
உட்படுகின்றாள்.
அப்போது தன் நிலையிலிருந்து
தளர்ந்து வாழ்க்கையை
வெறுக்கின்றாள்.
அதுவே அவளைத்
தனிமைப்படுத்தி தற்கொலை
வரை இட்டுச் செல்கின்றது.
எனவே பெண்களின் அடக்கு
முறையைத் தளர்த்தி அவளைப்
புரிந்து நடந்தாலே மகிழ்ச்சி
என்றும் நிலைத்திருக்கும்.

சௌ.ஜெசிந்தா
அளவெட்டி

# தாய்மை

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்



நிறைந்த ஞானங்களிலும்
நிலையான அவள்
உயிர்ப்பு
கலைந்த சுவடுகளிலும்
கலையாத கருப்பொருளாய்
அவள் துடிப்பு...

அணுவிலும்
அண்டங்களிலும்
அழியாத அவள்
அன்பின்
அரிச் சுவடுகள்.....
தாய்மையின்
தத்துவப் பொருள்
அவள்...
தத்துவத்தின்
வித்தகப் பெட்டகமும்
அவள்....
தவழும் இயற்கையிலும்
அவளே....
இருப்பாகிப்போனாள்
பிரபஞ்சப் பிணைப்பிலும்
அவளே.....
ஜனரஞ்சகமாகிப்போனாள்
தாய்மையின் உயிர்ப்பிலும்
அவளே....
தயாகிப்போனாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மல்லாவி மின்சார சபை வீதி பயன்படுத்த முடியாத நிலையில்



துணுக்காய்,நவ.19

மல்லாவி மின் சார சபை வீதி மக்கள் பயணிக்க முடியாதவாறு குன்றும் குழியுமாகக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மல்லாவி நகர்ப்பகுதியில் இருந்து ஆரம்பமாகும் இந்த வீதி சுமார் 600 மீற்றர் தூரம் கொண்டது. இந்த வீதியை கடந்த ஆண்டு புனரமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அவ்வாறு புனரமைக்கப்படாமையால் மக்களின் பாவனைக்கு உதவாத நிலையில் இன்று வீதி காணப்படுகின்றது.

அனிஞ்சியன்குளம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மின் சார சபை உள்ளக வீதியை சுமார் 200 இற்கும் அதிகமான குடும்பங்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

ஆனால் வீதியின் தற்போதைய மோசமான நிலை காரணமாக அவசர நோயாளிகளைக் கூட வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்ல முடியாத நிலையே இங்கு காணப்படுகின்றது.

மழை காலத்திற்குப் பின்னராவது இந்த வீதியைப் புனரமைப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் முன்வருவார்களா என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளதை அவதானிக்க முடிகின்றது. (க-415)

## மக்கள் பிரச்சினைகளை ஆராய்ந்தது முல்லை- மாவட்ட சிந்தனைக் கூடம்

### தமது பணி தொடரும் என்கின்றனர் அவர்கள்

முல்லைத்தீவு மாவட்ட சிந்தனைக் கூடம் அமைப்பினர் முல்லைத்தீவு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்துள்ளனர்.

கொக்குத்தொடுவாய் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், கால் நடைகளை இடமாற்றுதல், தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வீடமைப்புத் திட்டத்தில் எழுகின்ற பிரச்சினைகள், மிதிவெடிகள் மற்றும் வெடிகுண்டுகள் அகற்றப்பட்டமையால் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள், புனர்வாழ்வு அளிக்கப்பட்ட போராளிகளும், பொதுமக்களும் எதிர்கொள்கின்ற பொருளாதார ரீதியான இன்னல்கள் தொடர்பாக இவர்கள் ஆராய்ந்துள்ளமை தெரிய வருகின்றது.

இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக அரசின் கவனத்தை ஈர்ப்பதே தமது குறிக்கோள் எனவும், பிரச்சினைகள் தீரும் வரை தமது செயற்பாடுகள் ஓயப்போவதில்லை என்று சிந்தனைக் கூட அமைப்பினர் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவைச் சேர்ந்த புத்திஜீவிகள் ஒன்று சேர்ந்து இந்த சிந்தனைக் கூடம் அமைப்பை உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-402)

## மன்னாரில் கட்டாக்காலி கால்நடைகள் கட்டுப்படுத்தாவிடில் நடவடிக்கை

### 30 ஆம் திகதி வரை காலக்கெடு

மன்னார், நவ.19

மன்னார் பிரதேச சபை எல்லைக்குள் நடமாடித் திரியும் கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்துமாறு பிரதேச சபைத் தலைவர் கோரியுள்ளார்.

மன்னார் பிரதேச சபைக்குட்பட்ட பல இடங்களில் கட்டாக்காலி கால்நடைகளால் இடையூறுகள் காணப்படுகின்றன. இந்தக் கால்நடைகள் பொது வீதிகள், தெருவோரங்கள் கடைகளின் முன் பகுதிகள் எனப் பல இடங்களையும் அசிங்கப்படுத்தி வருவதால் மக்கள் பல்வேறு இடர்களையும் எதிர்கொண்டு வருகின்றனர். மேலும் இவை வீதிகளில் திரிவதால் போக்குவரத்துச் செய்வதில் மக்கள் பெரும் இடர்பாடுகளையும் எதிர்கொள்கின்றனர்.

இந்த நிலையில் எதிர்வரும் 30 ஆம் திகதிக்குள் கால்நடை உரிமையாளர்கள் சகல கால்நடைகளையும் கட்டுப்படுத்த வேண்டுமென மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் மாட்டின் டயஸ் தெரிவித்தார்.

மன்னார் பிரதேச சபைக்குட்பட்ட எருக்கலம்பிட்டி, பேசாலை ஆகிய இடங்களில் பெருமளவிலான கட்டாக்காலி கால்நடைகள் உலாவித் திரிகின்றன எனவும் இவற்றை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட வேண்டும் எனவும் இல்லாவிடில் டிசெம்பர் முதலாம் திகதி முதல் பிடிகாரர் மூலமாகக் கால்நடைகள் பிடிக்கப்பட்டு ஏலத்தில் விடப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

இதற்கான உத்தரவை பிரதேச சபைச் செயலாளர் சி.எம். யேசுநேசனுக்குத் தாம் விடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-41)

#### தேசிய மரநடுகைத் திட்டத்தின் கீழ்

# கிளிநொச்சி மாவட்டம் எங்கும் 7,450 மரக்கன்றுகள் நடுகை

கிளிநொச்சி, நவ. 19

தேசிய மரநடுகைத்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் 7 ஆயிரத்து 457 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன என்று கிளிநொச்சி மாவட்ட வன அதிகாரி பிரபாகரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட வனத்திணைக்களத்தினால் நாற்றுமேடைகள் அமைக்கப்பட்டு திணைக்களங்கள், பாடசாலைகள் ஆகியவற்றுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

பரந்தன் முதல் ஆனையிறவு வரையான வீதியில் முதிரை, திருக்கொண்டல் ஆகிய மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. சுமார் இரண்டு கிலோ மீற்றர் இடைவெளியில் 360 மரக்கன்றுகள் நடப்பட்டன.

கனகபுரம் மகாவித்தியாலயத்துக்கு 70 மரக்கன்றுகளும், பாரதிபுரம் மகாவித்தியாலயத்துக்கு 70 மரக்கன்றுகளும், அம்பாள்குளம் வித்தியாலயத்துக்கு 50 மரக்கன்றுகளும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

இவற்றில், சவுக்கு, தேக்கு, சமண்டலை, அகத்தி, சித்திரவேம்பு,பலா ஆகிய மரக்கன்றுகள் அடங்குகின்றன.

மேலும் கிளிநொச்சி பிரதேச செயலகத்துக்கு 570 மரக்கன்றுகளும், பளைப் பிரதேசத்துக்கு 380 மரக்கன்றுகளும், பூநகரிப் பிரதேச செயலகத்துக்கு 475 மரக்கன்றுகளும், கண்டாவளைப் பிரதேசசெயலகத்துக்கு 355 மரக்கன்றுகளும், கரைச்சி பிரதேச செயலகத்துக்கு 750 மரக்கன்றுகளும் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றில் தேக்கு, சமண்டலை, சவுக்கு, அகத்தி, திருக்கொண்டல் ஆகிய மரக்கன்றுகள் உள்ளடங்குகின்றன. இதைவிட உள்ளூராட்சிச் சபைகளுக்கு 225, கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் நிலையத்துக்கு 100, இரணைமடு பாதுகாப்புப் பிரிவுக்கு 250, கிளிநொச்சி தலைமைக் காரியாலய 571 ஆவது இராணுவப் படையணிக்கு 605, இயந்திர படையணிப் பிரிவுக்கு 857, நீர் வடிகால் அமைப்புக்கு 225, நீர்பாசன திணைக்களத்துக்கு 65 என்ற அடிப்படையில் மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

(க- 13)



முல்லைத்தீவு மாவட்டம் புளியங்குளம் பிரதேசத்திலுள்ள சின்னப்பூவரசங்குளம் விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட சரஸ்வதி சிலையும், சிலை திறப்பு விழாவில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரும் காணப்படுகின்றனர். (க)

## மன்னார் பிரதேச சபை செயலருக்கு இரு விருதுகளும் கிண்ணங்களும்

மன்னார், நவ.19

கடந்த ஆண்டுக்கான வடமாகாண முகாமைத்துவப்போட்டியில் மன்னார் பிரதேச சபை செயலர் சி.எம். யேசுநேசனுக்கு இரு விருதுகளும், கிண்ணங்களும் வழங்கப்பட்டன.

வடக்கு மாகாண கண்காட்சியில் வைத்து உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஆர். வரதீஸ்வரன் இவருக்கான விருதுகளையும், கிண்ணங்களையும் வழங்கிக் கௌரவித்தார்.

கடந்த ஆண்டுக்கான முகாமைத்துவ போட்டியில் மன்னார் மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கு இடையேயான போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும், மாகாண மட்டத்தில் மூன்றாம் இடத்தையும் செயலாளர் சி.எம். யேசுநேசன் பெற்றுக்கொண்டார்.

இதேவேளை உள்ளூராட்சி முகாமைத்துவ போட்டியில் கடந்த மூன்று ஆண்டுகளாக மன்னார் பிரதேசசபை ஆறு விருதுகளைப் பெற்றுக் கொண்டுள்ளது.

அத்துடன் வடக்கு மாகாண ஆளுநர் ஜீ. ஏ. சந்திரசிறியி [illegible] வழங்கப்பட்டது.

(க-41)

## தற்காலிக வீடுகள் சேதமுற்றதால் அவதியுறும் முத்துஐயன்கட்டு மக்கள்

முல்லைத்தீவு மாவட்டம் முத்துஐயன்கட்டு 90 ஏக்கர் பகுதியைச் சேர்ந்த மீள்குடியமர்ந்த மக்களின் தற்காலிக வீடுகள் சேதமடைந்துள்ளதால் அவர்கள் பெரும் இன்னல்களுக்குள்ளாகி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது மழைகாலம் ஆரம்பித்துள்ளமையால் இந்த நிலை மோசமாக மாறியுள்ளது.

இதனையறிந்த இந்த பகுதியிலுள்ள இராணுவத்தினர் சில குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகளை அமைக்கும் பொருட்டு தகரங்கள், தடிகள் என்பவற்றை வழங்கியதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை இந்தக் குடும்பங்களின் அவல நிலையை நேரில் கண்டு சென்ற அரசுடன் தொடர்புகளைப் பேணி வரும் பிரமுகர்கள் தமக்கு உதவுவதற்கு இதுவரை முன்வரவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இங்குள்ள அனைத்துக் குடும்பங்களும் பாதிக்கப்பட்ட நிலையில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட சில குடும்பங்களுக்கே இராணுவத்தினரின் உதவி கிடைத்துள்ளதாகவும் தெரியவருகின்றது. (க-500)

## பூநகரியில் உவர் தடுப்பணை உடைப்பு; ஆராய்வதற்காக இன்று கூட்டம்

பூநகரியின் ஆலங்கேணிப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த உவர் தடுப்பணை உடைப்பெடுத்தமை தொடர்பாக ஆராயும் கூட்டம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஆலங்கேணி பொது நோக்கு மண்டபத்தில் பூநகரி பிரதேச செயலர் கே.எஸ் வசந்தகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

பூநகரி 10 ஆம் கட்டைப் பகுதியிலிருந்து வாடியடியை நோக்கி 14 கிலோ மீற்றர் நீளமாக அமைக்கப்பட்டிருந்த உவர் தடுப்பணை ஆலங்கேணிப் பகுதியில் உடைப்பெடுத்தமையால் தேக்கி வைக்கப்பட்டிருந்த நன்னீர் கடலைச் சென்றடைந்துள்ளது. இதனால் ஆயிரத்து 500 ஏக்கர்கள் வரையான வயல் நிலத்தில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர்கள் அழிவடையும் நிலையிலுள்ளமையால் இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளது. நீர்ப்பாசன அதிகாரிகள், கிராம அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## துணுக்காய், பாண்டியன்குளத்தில் இலையான், நுளம்புகள் பெருக்கம்

துணுக்காய், நவ.19

பாண்டியன்குளம் மற்றும் துணுக்காய்ப் பிரதேசங்களில் இலையான் மற்றும் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் பகலிலும், இரவிலும் மக்கள் தொல்லைகளுக்காளாகி வருகின்றனர். பகலில் இலையான் மட்டுமல்லாது நுளம்புகளும் காணப்படுவதால் சில வீடுகளில் பகல் வேளைகளிலும் நுளம்பு வலைகளைக் கட்டுவதைக் காண முடிவதாகவும் தெரிய வருகின்றது.

மேலும் மழையைத் தொடர்ந்து மக்கள் பல்வேறு நோய்களுக்குள்ளாகி மல்லாவி பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதையும் காண முடிகின்றது.

எனவே இலையான் மற்றும் நுளம்புகளைக் கட்டுப்படுத்தும் வகையில் மருந்துகளை விசிறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(க-415)

## லயன்ஸ் கழகத்தினால் உதவிகள்

சர்வதேச லயன்ஸ் கழகத்தினரால் முல்லைத்தீவில் மீள்குடியமர்ந்த 300 குடும்பங்களுக்கு உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

சர்வதேச லயன்ஸ் கழக 306 பி மாவட்ட ஆளுநர் லயன் எஸ்.எஸ்.தங்கராசா தலைமையிலான குழுவினரே இவற்றை வழங்கி வைத்தனர்.

இவர்கள் புதுக்குடியிருப்பு, கேப்பாபுலவு, புதுமாத்தளன், அம்பலவன்பொக்கணை, மன்னாகண்டல் ஆகிய கிராமங்களுக்குச் சென்று இந்த உணவுப் பொருள்களை வழங்கியுள்ளனர்.

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் நிதியத்தின் மூலமாக இந்தப் பொருள்கள் வழங்கப்பட்டன என்று லயன்ஸ் கழகத்தின் மாவட்ட ஊடகப் பிரிவுத் தலைவரான எஸ்.கே.நவரத்தினம் தெரிவித்தார். (க-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.இந்துவுக்கு இலகு வெற்றி

## பந்துவீச்சுக்குப் பணிந்தது மகாஜன



யாழ்ப்பாணம்,நவ.19

இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான பிரிவு III இற்கான கிரிக்கெட் போட்டி ஒன்றில் யாழ். இந்துக் கல்லூரி அணி 9 இலக்குகளால் வெற்றியீட்டியது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மகாஜன கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்.இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து மகாஜன கல்லூரி அணி மோதிக் கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்.மத்திய கல்லூரி அணியினர் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தனர். அதற்கமைய முதலில் தனது முதலாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய மகாஜன் கல்லூரி அணியினர் 35.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 101 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் தனுஸ்ரன் 21 ஓட்டங்களையும், கஜீபன் 13 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ்.இந்துக் கல்லூரி அணி சார்பில் சிறீராம் 5 இலக்குகளையும், கலைச் செல்வன் 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக் கல்லூரி அணி 45.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 112 ஓட்டங்களைப் பெற்றது.

யாழ்.இந்து அணி சார்பில் சிறீராம் 23 ஓட்டங்களையும், கிரிகணேஸ் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் மகாஜனா கல்லூரி அணி சார்பில் சர்மிலன் 4 இலக்குகளையும், கஜசுதன் 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.

தனது இரண்டாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி அணி யாழ்.இந்துவின் துல்லியமான பந்து வீச்சுக்கு முகங்கொடுக்க முடியாமல் 14.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 49 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் அதிகபட்சமாக மகாஜனக் கல்லூரி வீரன் பிரதீஸ் 19 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் யாழ்.இந்துக் கல்லூரி அணி சார்பில் ஜனுசன் 6 இலக்குளையும், கோபிராம் 2 இலக்குகளையும், சிறீராம் 1 இலக்கினையும் வீழ்த்தினர்.

ஏற்கனவே 11 ஓட்டங்கள் முன்னிலையிலிருந்த யாழ்.இந்துக் கல்லூரி அணி வெற்றிபெறுவதற்கு 38 ஓட்டங்களே தேவைப்பட்டன.

இந்த நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக் கல்லூரி அணியினர் 9.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் ஓர் இலக்கினை மாத்திரம் இழந்து வெற்றி பெற்றது.

இதில் விதுஷன் 12 ஓட்டங்களையும், ஜனுசன், கிரிகணேஷ் ஆகியோர் முறையே ஆட்டம் இழக்காமல் 18,7 ஓட்டங்களையும் பெற்றனர்.

இதனால் யாழ்.இந்துக் கல்லூரி அணி 9 இலக்குகள் வித்தியாசத்தில் மகாஜனா கல்லூரியை வெற்றிகொண்டது. (ங-23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,நவ.19

இலங்கைத் துடுப்பாட்டச் சம்மேளனம் பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையே நடத்தும் பிரிவு III இற்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று திங்கட்கிழமை ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி என்பவற்றில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு-

**ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில்**
ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் யாழ்.மத்திய கல்லூரி

**சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில்**
சென்.பற்றிக்ஸ் கல்லூரி எதிர் சென். ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணி (ங-23)

# சென்.அன்ரனிஸ் ஒலிம்பிக்ஸ் வென்றன

யாழ்ப்பாணம்,நவ.19

திருகோணமலை உதைபந்தாட்ட லீக்கினால் அங்கத்துவ கழகங்களுக்கிடையே நடத்தப்படும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் ஆட்டங்களில் சென்.அன்ரனிஸ், ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக் கழகங்கள் வெற்றியீட்டியுள்ளன.

திருகோணமலை மக்கெய்சர் விளையாட்டு மைதானத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற ஆட்டத்தில் யாமலியா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இதில் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மாலை இடம்பெற்ற ஆட்டத்தில் ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பிக்லூட் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக் கழக அணி 4:0 என்ற கோல்கணக்கில் பிக்லூட் அணியை வீழ்த்தியது. (ங-23)

# விளையாட்டு அபிவிருத்தி தொடர்பில் வட மாகாணத்தில் செயலமர்வுகள்

யாழ்ப்பாணம்,நவ.19

வடமாகாண பாடசாலைகளில் 2013 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படவேண்டிய விளையாட்டுத்துறை அபிவிருத்திகள் தொடர்பாக வடமாகாண கல்வித் திணைக்களம் மாவட்டங்கள் ரீதியாக செயலமர்வுகளை நடத்தவுள்ளது. கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் முதலில் இந்தச் செயலமர்வை நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தச் செயலமர்வுகள் நடைபெறவுள்ள இடம் மற்றும் காலம் பற்றிய விவரங்கள் வருமாறு-

**மன்னார் மாவட்டம்**
நாளை மறுதினம் 21 ஆம் திகதி காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை
இடம்-மன்னார் பிராந்திய ஆங்கில ஆராதனை நிலையம்.

**வவுனியா மாவட்டம்**
22 ஆம் திகதி காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
இடம்-வவுனியா தெற்கு வலய கல்வி அலுவலகம்.

**கிளிநொச்சி மாவட்டம்**
28 ஆம் திகதி காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
இடம்-பரந்தனில் அமைந்துள்ள ஆசிரிய வள நிலையம்.

**முல்லைத்தீவு மாவட்டம்**
டிசம்பர் மாதம் 5 ஆம் திகதி காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
இடம்-முல்லைத்தீவு கல்வி வலயம்

குறித்த செயலமர்வுகளில் அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்த விளையாட்டு உத்தியோகத்தர்கள், மாவட்ட பயிற்றுநர்கள், உடற்கல்விப்பாடத்துக்கான சேவைக்கால ஆசிரியர்கள், உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ங-23)

# கிண்ணிய மத்திய கல்லூரி உதைபந்தாட்டத்தில் சாதிப்பு

யாழ்ப்பாணம்,நவ.19

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும் இலங்கைப் பாடசாலை உதைபந்தாட்டச் சம்மேளனமும் இணைந்து, 15வயதுப் பிரிவுக்குட்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கிண்ணியாப் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த கிண்ணியா மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றது.

### கிண்ணியா மத்திய கல்லூரி அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது

திருகோணமலை மைக்கெய்சர் விளையாட்டு மைதானத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதி யாட்டத்தில் கிண்ணியாப் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட கிண்ணியா மத்திய கல்லூரி அணியை எதிர்த்து திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜமாலியா முஸ்லிம் வித்தியாலய அணி மோதிக்கொண்டது.

இதில் கிண்ணியாப் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட கிண்ணியா மத்திய கல்லூரி அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி சம்பியனானது. (ங-23)

# ஆவரங்கால் மத்திய வி.க. கரப்பந்தில் சம்பியனானது

யாழ்ப்பாணம், நவ.19

கோப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக்க ழகங்களுக்கிடையிலான ஜனாதிபதி தங்க வெற்றிக் கிண்ணத்துக்கான ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித்தொடரில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்று சம்பியனானது.



நேற்று முன்தினம் சனிக்கிழமை புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

5 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி 25:17, 25:13, 25:07 என்ற நேர் செற் கணக்கில் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை வீழ்த்தி வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது. (ங-23)

# உதைபந்துத் தொடர் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.19

யாழ். உதைபந்தாட்ட லீக், தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் புதன் கிழமை குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இதில் 13 அணிகள் பங்குபற்றவுள்ளன கடந்த வாரம் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற சுற்றுப்போட்டித் தொடரில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ங-23)




சப்ரகமுவ ஸ்டேலியன்ஸ் விளையாட்டுக்கழகமும் யாழ்ப்பாணப் பாதுகாப்புப்படைத் [illegible] இணைந்து யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் கடந்த [illegible] நடத்திய ரக்பி பயிற்சிப் பட்டறையில் பங்குபற்றிய வீர வீராங்கனைகள், பயிற்றுநர்கள் மற்றும் பொறுப்பாசிரியர்கள் (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னிலை பெற்றது இலங்கை


மஹேல

நியூஸிலாந்து அணியுடனான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதலாவது இன்னிங்ஸில் இலங்கை அணி முன்னிலை பெற்றது. அணித் தலைவர் மஹேல மற்றும் மத்தியூஸின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் 26 ஓட்டங்களை அதிகமாகப் பெற்றது. அதற்குப் பதிலளித்து இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த நியூஸிலாந்து அணி நேற்றைய ஆட்ட நேர நிறைவில் ஒரு இலக்கு நஷ்டத்துக்கு 35 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூஸிலாந்து அணி 2 டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாடி வருகின்றது. முதலாவது டெஸ்ட் ஆட்டம் காலியில் நேற்று முன்தினம் சனிக் கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன்படி களமிறங்கிய நியூஸிலாந்து அணி ஆரம்பம் முதலே இலங்கையின் சுழல் பந்து வீச்சுக்கு தட்டுத் தடுமாறி இலக்குகளை தொடர்ச்சியாக இழந்தது. இறுதியில் 221 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் பறிகொடுத்தது.

துடுப்பாட்டத்தில் நியூஸிலாந்து சார்பில் பிரண்டன் மக்கலம் 68, டானியல் பிளைன் 53, வன் விக் 28 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் இலங்கை அணி சார்பில் ஹேரத் 5, எரங்க 3, குலசேகரா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

நேற்று முன்தினமே முதலாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி ஆட்ட நேர நிறைவில் ஒரு இலக்கைப் பறிகொடுத்து 9 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அறிமுக வீரர் கருணாரத்ன ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்திருந்தார். சுராஜ் ரந்தீவ் 3 ஓட்டங்களுடனும் பரணவிதாரன கணக்கை ஆரம்பிக்காத நிலையிலுமிருந்தனர்.

இந்த நிலையில் நேற்றைய இரண்டாவது நாள் ஆட்டம் ஆரம்பமானது. ஆட்டம் ஆரம்பமான முதலாவது பந்துப் பரிமாற்றத்திலேயே பரணவிதாரன ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்தார்.

தொடர்ந்தும் போட்டுத் தாக்கிய நியூஸிலாந்தின் வேகங்கள் சுராஜ் ரந்தீவை 9 ஓட்டங்களுடனும், அனுபவ சங்ககாரவை 5 ஓட்டங்களுடனும் பவிலியன் அனுப்ப இலங்கை அணி 20 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்து தடுமாறியது. அதன் பின்னர் இணைந்த அணித் தலைவர் மஹேல, திலான் சமரவீர ஜோடி அணிக்கு நம்பிக்கையளிக்கும் வகையில் சிறந்த இணைப்பாட்டத்துக்கு அடித்தளமிட்டது. இருப்பினும் இவர்களது இணைப்புக்கு 30 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் சமரவீர 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இலங்கை அணி 50 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்து நெருக்கடிக்குள்ளானது.

தொடர்ந்து நுழைந்த உப அணித் தலைவர் மத்தியூஸ், அணித் தலைவர் மஹேலவுடன் இணைந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இருவரது சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் இலங்கை அணி 100 ஓட்டங்களைக் கடந்தது. பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய மஹேல தனது 43 ஆவது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்தார். மறுமுனையில் அசத்திய மத்தியூஸும் 9 ஆவது அரைச் சதத்தை கடந்தார்.

இருவரதும் அபார இணைப்பினால் இலங்கை அணி கௌரவமான இலக்கை நோக்கி முன்னேறியது. இருவரிடையேயும் 156 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பகிரப்பட்ட நிலையில் மத்தியூஸ் 79 ஓட்டங்களுடன் பிரேஸ்வெல்லின் பந்து வீச்சில் சிக்கி வெளியேறினார்.

மஹேல சிறப்பான ஆட்டத்தை தொடர்ந்து வெளிப்படுத்திய போதும் பின்வரிசை வீரர்கள் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை. மஹேல 91 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 8 ஆவது இலக்காக வீழ்த்தப்பட்டார். அதன் பின்னர் எவரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருக்காத நிலையில் இலங்கை அணி 80.2 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. ஹேரத் ஆட்டமிழக்காமல் 11 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சவுத் தீ 4, ஜித்தன் பட்டேல் 3, போல்ட் 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

26 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் நேற்று மாலையே இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது நியூஸிலாந்து அணி. குப்தில், பிரண்டன் மக்கலம் ஜோடி களமிறங்கியது. மக்கலம், அதிரடியாக ஆட்டத்தை தொடக்கினார். ஹேரத் சுழலில் சிக்ஸர் விளாசிய வேகத்தில் தொடர்ந்தும் அதிரடியாக ஆட முற்பட்டு வீணாக ஆட்டமிழந்தார். மக்கலம் 10 பந்துகளில் 13 ஓட்டங்களுடன் பவிலியனுக்கு நடையைக் கட்டினார்.

அதன் பின்னர் வில்லியம்ஸன், குப்தில் இணை நேற்றைய நாள் இறுதி வரையில் சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கியது. ஆட்டநேர நிறைவில் 10 பந்துப் பரிமாற்றங்களில் 35 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கை இழந்த நிலையில் 9 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது நியூஸிலாந்து அணி. களத்தில் குப்தில் 13, வில்லியம்ஸன் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது உள்ளனர். (5)


நியூஸிலாந்து வீரர்கள்

# இன்னிங்ஸ் தோல்வியை தவிர்த்தது இங்கிலாந்து

இங்கிலாந்து அணித் தலைவர் குக்கின் அபார சதம், பிரையரின் அரைச் சதம் ஆகியவற்றின் உதவியோடு இங்கிலாந்து அணி இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்த்தது.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும் இந்திய அணிக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் அஹமதாபாத்தில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 8 இலக்குகளை இழந்து 521 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது. துடுப்பாட்டத்தில் இந்திய அணிசார்பில் புஜாரா ஆட்டமிழக்காமல் 206, சேவாக் 117, யுவராஜ் 74 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். இங்கிலாந்து சார்பில் பந்து வீச்சில் சுவான் 5 இலக்குகளை வீழ்த்தினார்.

முதலாவது இன்னிங்ஸிற்கு பதிலளித்து ஆடிய இங்கிலாந்து அணி இந்திய சுழல் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் 191 ஓட்டங்களுக்குள் சுருண்டது. துடுப்பாட்டத்தில் பிரையர் 48, குக் 41, புரோட் 25 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் ஓஜா 5, அஸ்வின் 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

'பலோஒன்' நிலைக்குத் தள்ளப்பட்ட இங்கிலாந்து அணி நேற்று முன்தினமே தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்திருந்தது. இரண்டாவது இன்னிங்ஸில் சிறப்பாக ஆடிய இங்கிலாந்து அணி நேற்று முன்தினம் ஆட்ட நேர நிறைவு வரையில் இலக்கு இழப்பின்றி 111 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. களத்தில் அணித் தலைவர் குக் 74, கொம்ரொன் 34 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தனர்.


இந்த நிலையில் நான்காம் நாள் ஆட்டம் நேற்று ஆரம்பமானது. இந்திய அணியின் வேகங்கள் நேற்றைய நாளின் ஆரம்பத்திலிருந்தே போட்டுத் தாக்கின. கொம்ரொன் 37 ஓட்டங்களுடன் சகீர்கானின் வேகத்தில் வெளியேறினார். தொடர்ந்து நுழைந்த ரொரட் 17 ஓட்டங்களுடன் ஓஜாவின் சுழலிலும், அதற்கு அடுத்த பந்துப் பரிமாற்றத்தில் பீற்றர்ஸன் 2 ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து வெளியேறினர். மறுமுனையில் சிறப்பாக ஆடிய குக் தன்து 21 ஆவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்தார்.

மதியபோசன இடைவேளையின் பின்னர் ஆட்டம் ஆரம்பமாகி சிறிது நேரத்தில் இய்ன் பெல் 22 ஓட்டங்களுடன் யாதவ்வின் பந்து வீச்சில் வெளியேறினார். தொடர்ந்து நுழைந்த சமிட் பட்டேல் அடுத்த பந்திலேயே ஆட்டமிழக்க இங்கிலாந்து அணி 199 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்து இன்னிங்ஸ் தோல்வியை எதிர்நோக்கியிருந்தது.

அதன் பின்னர் அணித் தலைவர் குக்குடன், பிரையர் இணைந்து ஆட்டத்தைத் தோல்வியின் பிடியிலிருந்து மீட்டார். இந்திய அணியின் பந்து வீச்சுக்களை இலகுவாகச் சமாளித்து இந்த இணை ஓட்டங்களைப் பகிர்ந்தது.

பிரையர் தனது 23 ஆவது அரைச் சதத்தையும் கடந்தார்.

நேற்றைய நாள் இறுதிவரையில் ஆறாவது இலக்குக்காக 141 ஓட்டங்கள் இருவரிடையேயும் பகிரப்பட்டுள்ளது. ஆட்ட நேர நிறைவில் இங்கிலாந்து அணி 5 இலக்குகளை மாத்திரம் இழந்து 340 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில் குக் 168, பிரையர் 84 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது உள்ளனர். இங்கிலாந்து அணி பத்து ஓட்டங்களால் முன்னிலை [illegible] (5)


குக்

# அப்ரிடி சந்தேகம்?

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி அடுத்த மாதம் இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு இரண்டு 'ரி-20' மற்றும் 5 ஒரு நாள் ஆட்டத்தில் பங்கேற்க உள்ளது.

இந்த நிலையில் பாகிஸ்தான் அணியில் முன்னாள் அணித் தலைவரும், சகலதுறை வீரருமான அப்ரிடி இடம்பெற மாட்டார் என்று தகவல் வெளியாகி உள்ளது.

இது தொடர்பாக பாகிஸ்தான் தெரிவு குழு தலைவர் இக்பால் காசிம் கூறுகையில், இந்திய சுற்றுப்பயணம் எப்போதுமே சவாலானது. இதனால் அணி வீரர்களை தெரிவு செய்வதில் மிகவும் கவனம் செலுத்தி வருகிறோம்.

அணி பலம் வாய்ந்ததாக இருக்க வேண்டும். மூத்த வீரரான அப்ரிடி உட்பட யாருக்கும் அணியில் தானாக இடம் கிடைக்கும் என்று உறுதியாக சொல்ல முடியாது. அப்ரிடி உள்ளூர் போட்டியில் தனது திறமையை நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் உள்ளூர் 'ரி-20' போட்டி டிசம்பர் 10 ஆம் திகதி முடிகின்றது. அதற்கு பிறகு பாகிஸ்தான் அணி தெரிவு செய்யப்படும். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருந்துக்கும் வேண்டாம் விருந்து



பாகிஸ்தான் கிரிக்கெட் அணி அடுத்த மாதம் இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இரண்டு 'ரி-20' மற்றும் 3 ஒரு நாள் போட்டி கொண்ட தொடரில் விளையாட உள்ளது.

இதற்காக பாகிஸ்தான் கிரிக்கெட் அணி டிசெம்பர் மாதம் 22 ஆம் திகதி இந்தியா செல்கிறது. முதல் 'ரி-20' ஆட்டம் 25 ஆம் திகதி நடக்கிறது.


இந்த தொடர் குறித்து பாகிஸ்தான் அணியின் முன்னாள் அணித்தலைவர் இன்சமாம் கூறுகையில், இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் போதெல்லாம் தனியார் விருந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள அதிக அழைப்புகள் வரும்.

இதற்காக பெரும் தொகை தருவதாகவும் கூறுவார்கள். என்னை பொறுத்தவரையில் இந்த விருந்து நிகழ்ச்சிகளை விட்டு பாகிஸ்தான் வீரர்கள் ஒதுங்கியிருப்பதே நல்லது.

கேளிக்கை விருந்துகளை தவிர்த்து போட்டியில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இந்த முறை இந்திய அணியை வீழ்த்து வதற்கு நல்ல வாய்ப்பு கிடைத்துள்ளது. அதனால் அனைத்து வீரர்களும் போட் டியில்கூடுதல் அக் கறை செலுத்த வேண் டும்.

இந்திய சுற்றுப்பயணம் சிறந்த அனுபவத்தை கொடுக்கும். போட் டி யைத் தவிர மற்ற விடயங்களில் கவனத்தை செலுத்தாமல் தொடரை வெல் வதிலேயே முழுக் கவனமும் இருக்க வேண்டும் - என்றார். (5)

# புரிந்துகொள்கிறோம்



இலங்கை அணி பங்குபற்றும் டெஸ்ட் போட்டியை இலங்கை கிரிக்கெட் சபை பிற்போடுவதை புரிந்து கொள்ளக்கூடியதாக உள்ளதாக இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் சபை அண்மைக் காலத்தில் டெஸ்ட் போட்டியைப் பிற்போட்டு கொண்டதோடு அவற்றிற்கு பதிலாக ஒரு நாள் சர்வதேச போட்டியை ஏற்பாடு செய்திருந்தது.

குறிப்பாக மேற்கிந்திய தீவுகளுக் கெதிரான டெஸ்ட் தொடர் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக இந்திய, இலங்கை, மேற்கிந்திய தீவுகள் பங்குகொள்ளும் முக்கோண ஒருநாள் சர்வதேசப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டது.

மறுபுறத்தில் அடுத்தாண்டு இடம்பெற விருந்த தென்னாபிரிக்க அணிக்கெதிரான டெஸ்ட் தொடர் 2015 ஆம் ஆண்டுவரை பிற்போடப்பட்டுள்ளது.

இலங்கையின் ஸ்ரீலங்கா பறீமியர் லீக் தொடருக்காகவே இது பிற்போடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கருத்து தெரிவித்த மஹேல ஜெயவர்தன, இலங்கை கிரிக்கெட் சபையின் நிதி நிலை முக்கியமானது என்று தெரிவித்தார்

வீரர்களாக தாங்கள் அடுத்த 12 மாதங்களுக்கு ஊதியம் வழங்கப்படாது காணப்படப் போகின்றோமா, இலங்கையின் உள்ளூர் வீரர்களுக்கு ஊதியம் வழங்கப்படாது போகப் போகிறதா, இலங்கையின் உள்ளூர்ப் போட்டி நிதி நெருக்கடி காரணமாக நடைபெறாது போகப் போகிறதா இல்லை டெஸ்ட் போட்டியைப் பிற்போட்டு போட்டி அட்டவணையை மாற்றுவதா என்பதை அறிய வேண்டும் என்று தெரிவித்தார்.

இந்த முடிவுகள் கடினமான முடிவுகள் என்று தெரிவித்த மஹேல ஜெயவர்தன, அந்த முடிவுகள் குறித்து இரண்டு வகையான கருத்துக்கள் காணப் படும் எனவும் தெரிவித்தார்.

சிலர் அந்த முடிவுகளை விரும்ப மாட்டார்கள் எனவும் சிலர் அந்த முடிவு களுக்கான காரணங்களை புரிந்து கொள் வார்கள் எனவும் மஹேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார். (5)

# விசாரணை தேவை



இலங்கைக் கிரிக்கெட் அணி மீது சுமத்தப்பட்டுள்ள போட்டி நிர்ணயக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை நடாத்தப்பட வேண்டும் என்று இலங்கையின் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார். இலங்கைக் கிரிக்கெட் சபையிடமே இவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தைச் சேர்ந்த ஊடகவியலாளரான எட் ஹவ்கின்ஸ் என்பவர் இந்திய, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 2011 ஆம் ஆண்டு உலகக்கிண்ண தொடரின் அரையிறுதி ஆட்டம் தொடர்பான கேள்விகளை எழுப்பியிருந்தார். அதன் பின்னர் அவர் இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கிடையில் 2011 ஆம் ஆண்டு இடம்பெற்ற டெஸ்ட் போட்டியொன்றைப் பற்றிய சந்தேகங்களை எழுப்பியிருந்தார்.

இங்கிலாந்தின் கார்டிவ்வில் இடம்பெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 400 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. பதிலளித்தாடிய இங்கிலாந்து அணி 496 ஓட்டங்களைப் பெற, இலங்கை அணி மூன்றாவது இன்னிங்ஸில் 82 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்திருந்தது.

நீண்ட காலமாக இலங்கை வீரர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டிருக்காத நிலையில் அந்த ஆட்டத்தில் இலங்கை வீரர்கள் வேண்டுமென்றே விட்டுக் கொடுத்திருக்கலாம் எனவும், சில வேளைகளில் பணத்தைப் பெற்றுக் கொண்டிருக்கலாம் எனவும் அவர் சந்தேகத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

இந்த நிலையில் இந்த விடயம் தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று மஹிந்தானந்த அளுத்கமகே கோரிக்கை விடுத்துள்ள போதிலும், இந்த விடயம் தொடர்பாக சர்வதேசக் கிரிக்கெட் சபை தங்களுக்கு அறிக்கை வழங்கினாலொழிய தங்களால் இந்த விடயம் தொடர்பாகக் கருத்துக்களை வெளிப்படுத்த முடியாது என்று இலங்கைக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இதேவேளை குறித்த குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ள இலங்கை அணியின் தற்போதைய தலைவர் மஹேல ஜெயவர்தன, புத்தகத்தை விற்பனை செய்வதற்காக அந்த ஊடகவியலாளரின் இழிவான நடவடிக்கையே இது என்று அவர் தெரிவித்துள்ளார். (5)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

**வீடு வாடகைக்குத் தேவை**
நெல்லியடி, அரசடி, மாலிசந்தி, வதிரி, மூத்த விநாயகர் கோயிலடி போன்ற இடங்களில் 5 பேர் கொண்ட குடும்பத்துக்கு வீடு தேவை.
தொடர்பு:
0716182182

## மரண அறிவித்தல்

### ஐயம்பிள்ளை தங்கரத்தினம்



நவக்கிரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை தங்கரத்தினம் நேற்று (18.11.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயம்பிள்ளையின் அன்பு மனைவியும், அழகரட்ணம், ஜெயரட்ணம், வளர்மதி, சத்தியவதி, நேசரட்ணம் ஆகியோரின் அன்புத் தாயும், இராசலட்சுமி, ரதிவதனா, கேதீஸ்வரன், நிர்மலன், செல்வகுமாரி (உதவிப் பிரதேச செயலர், உடுவில்) ஆகியோரின் அன்பு மாமியும், வினோத் (பிரான்ஸ்), டயானா, சாய்தா (ஆஸ்திரேலியா), ஜெனிதா, தியோதா, பேரின்ஷா, தீபன், தசாயினி, சாஹித்தியன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தண்ஷிகா, ஓவியா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2012) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நிலாவரை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


தகவல்:
திருமதி செ.நேசரட்ணம் (மருமகள்)
(உதவி பிரதேச செயலர், உடுவில்)

நவக்கிரி,
புத்தூர். (25499)(3.14.6)

ASAP
Accelerated Skills Acquisition Program
Empowering Youth Through Career Skills
USAID
FROM THE AMERICAN PEOPLE

துரித திறன்பெறுகை நிகழ்ச்சித் திட்டம்

பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில மொழித் திறன்கள், கணினித்திறன்கள் மற்றும் வியாபார தொழில் முயற்சியாண்மைத் திறன்கள் அடங்கலான கற்கைநெறி முற்றிலும் இலவசமாக நடத்தப்படவுள்ளது.









சர்வதேச அங்கீகாரமுடைய சான்றிதழ் மற்றும் பாடத்திட்டம், கல்வி அமைச்சின் ஊடாக பாடசாலை மாணவர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

க.பொ.த. (சா/த).(உ.த) மாணவர்கள் பாடசாலை அதிபரின் சிபார்சுடனும் பாடசாலையை விட்டு விலகியவர்கள் கிராம அலுவலகர்களின் சிபார்சுடன் நேரில் வரவும் அல்லது தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவும்

வகுப்புகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளதால் பதிவுகளுக்கு முந்துங்கள்

விண்ணப்பங்களை எமது காரியாலையத்தில் பெற்றுக்கொள்ளவும்.

மேலதிக விவரங்களுக்கு:

Skills for Life
IT ISLAND
GATEWAY CENTRE

நெல்லியடி :
55, பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
(T) 021 2262395,
(F) 021 2262789
(E) gatewaynelli@gmail.com

சாவகச்சேரியில்
நவீன சந்தை, சாவகச்சேரி
(T) 021 2270323
(F) 021 2270323
(E) gatewaychava@gmail.com

ENGLISH & IT @ GATEWAY FOR A PROMISING FUTURE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.